
## கருச் சிதைக்கப்பட்ட சதிப் புரட்சி

09





“என்னிடமிருந்து என்ன வேண்டும்”
இதுவே எமக்குத் தேவையான பண்பாகும்

07

கலாநிதி அப்துல் கலாம்


# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 348 • 29 ஜூலை 2016 வெள்ளிக்கிழமை • ஷவ்வால் 1437 • விலை 40.00







# மு.கா வில் நம்பிக்கைச் சொத்துக்கள் துஷ்பிரயோகம்?



## தவிசாளரின் கேள்விக்கு இதுவரை பதிலில்லை

இலங்கை முஸ்லிம்களின் இருப்பைப் பாதுகாக்கவும், உரிமைகளை வென்றெடுக்கவும் என தலைவர் அஷ்ரப் அவர்களினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ரபின் மறைவுக்குப் பின்னால் பதவிப் போட்டிகளினால் ஆட்டம் கண்டுவருகிறது. இதனடியாக முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்குத் தரப்பட வேண்டும் என்ற கோஷம் தற்பொழுது வலுப்பெற்று வருகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் சொத்துக்கள் தொடர்பான சர்ச்சைகள் அண்மைக்காலங்களில் வெளிவரத் தொடங்கியுள்ளன. கொழும்பு 02, வொக் ஷோல் ஒழுங்கை, இல. 51 இல் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலய தாருஸ்ஸலாமின் உரிமை தொடர்பில் கட்சியின் தவிசாளர் பசீர் சேகு தாவூத் அண்மையில் கேள்வியெழுப்பியிருந்தார்.

1998 இல் இந்தக் கட்டடம் தாருஸ்ஸலாம் எனப் பெயரிடப்பட்டு, தலைவர் அஷ்ரபினால் (பக்.14)




MFCD அனுசரணையில் கொலன்னாவ ஊடகவியலாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த Give to Journalist நிகழ்வு அண்மையில் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வெல்லம்பிட்டிய, கொலன்னாவ பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு MFCD நிறுவனத்தினால் நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

## ஐ.எஸ் இயக்கம் இஸ்லாத்துக்கு முற்றிலும் விரோதமானது

### - ஜம்இய்யதுல் உலமா பிரகடனம்

ஐஎஸ் இயக்கம் இஸ்லாத்துக்கு முற்றிலும் விரோதமான இயக்கம் என்றும், அவ்வியக்கத்தின் தீவிரவாத செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாக நிராகரிப்பதாகவும், அவற்றின் செயற்பாடுகள் எவ்விதத்திலும் இஸ்லாமிய போதனைகளுக்கு உட்பட்டதல்ல எனவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரகடனப்படுத்தியுள்ளது. (பக்.14)

## Daily FT ஆசிரியர் நிஸ்தார் காஸிமுக்கு அச்சுறுத்தல்



Daily FT பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நிஸ்தார் காஸிம் பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த 25ம் திகதி வெளிநாடு சென்றிருப்பதாக விஜய பத்திரிகை கூட்டுத்தாபன செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை (23) பிரதமர் ரணில் விக்ரமசிங்க கண்டியில் வைத்து Daily FT பத்திரிகையின் ஆசிரியரது பெயரைக் குறிப்பிட்டு நாட்டின் பொருளதாரத்தை சீர்குலைப்பதற்கு Daily FT பத்திரிகைக்கு (பக்.14)

## பக்கத்துப் பாடசாலை சிறந்த பாடசாலை

### மாளிகாவத்தை தாருஸ் ஸலாமை நீக்குவதற்கு முயற்சி



கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''பக்கத்துப் பாடசாலை சிறந்த பாடசாலை'' திட்டத்திலிருந்து மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலயத்தை நீக்குவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (பக்.14)

## சதொச ஊழல் தொடர்பில் ஏன் விசாரணை இல்லை?



வர்த்தக வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அமைச்சின் கீழ் வருகின்ற சதொச நிறுவனத்தில் நடைபெறுகின்ற ஊழல்கள் தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பிலான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிது.

கடந்த அரசாங்கத்தில் சதொச அடைந்த நட்டம், 2015 மே ஆகும் போது குறைந்திருந்ததனால் சதொசவை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் 400 கோடி (பக்.14)






## வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்காக தனியான அலுவலகமொன்றை அமைக்குமாறு முசலிப்பிரதேச மக்கள் கோரிக்கை

(பிராந்திய செய்தியாளர்)

கடந்த 26 ஆம் திகதி முசலி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை கேட்டறிவதற்கான பிரதமரினால் நியமிக்கப்பட்ட குழுக்களுக்கு முன்னால் சாட்சியமளிக்கும்போது இம்மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.



இச்சாட்சியமளிக்கும் கூட்டத்தில் நூற்றுக்குமதிகமான மக்கள் கலந்துகொண்டனர். இங்கு அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களுக்கு தற்பொழுது நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நல்லிணக்க பொறிமுறை மூலம் முஸ்லிம்களுக்கான தனியான அலுவலகம் அமைக்கப்படுவதோடு உயர் நீதிமன்றத்தினூடாக இவர்கள் 1990 ஆண்டு (பக்.14)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனல்ட் ட்ரம்ப்



முதலில் அவரைப் பார்த்து உலகம் விழுந்து விழுந்து சிரித்தது.தோற்றத்தைப் பார்த்து நக்கல் அடித்தது.அமெரிக்காவின் தேசிய அவமானம் என்று பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதின.

முஸ்லிம் உலகும் அமெரிக்கா வாழ் இஸ்லாமியர்களும் கழுத்து வெட்டக் காத்திருக்கும் கிடாய் ஆடுகள் போல முழிக்க அமெரிக்கா வாழ் இந்தியர்கள் உட்பட புகலிடம் கோரி தஞ்சமடைந்திருந்த மக்களும் என்ன எழவு நடக்கப் போகுதோ என்று பதை பதைத்தனர்..

ஆனால் இன்று அதிரடி மாற்றங்கள். ஏகப்பட்ட திருப்பங்கள். அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ ஜனாதிபதி வேட்பாளராய் அறிவிக்கப்பட்டிருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப். மீடியாக்களாலும் சமூகவலைதளங்களாலும் ஏளனம் செய்து எட்டி உதைக்கப்பட்ட அதே ட்ரம்ப்.

ட்ரம்பை எதிர்த்து முன்னால் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி ஹிலாரி போட்டி இட உள்ள நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் அனல் பறக்கத் தொடங்கியுள்ளன.

இது எங்கோ ஒரு நாட்டில் நடக்கும் தேர்தல்.நாம் நமது பிள்ளையை பாடசாலையில் விட்டு விட்டு மீன்வாங்கி வருவோம் என்று அலட்சியம் செய்துவிட முடியாது.அமெரிக்கா என்ற தேசம் விரும்பியோ விரும்பாமலோ எமது வாழ்வாதாரத்தில் கலந்து பல தசாப்தங்களாகி விட்டன.

இன்று எந்த நாட்டுப் பிரஜையும் பொருளாதாரம் முதல் அரசியல் வரை எதைப் பேசினாலும் அமெரிக்கா என்ற சொல்லைத் தவிர்க்கவே முடியாது. அதற்கேற்றாற் போல் அமெரிக்காவும் எண்ணெய் வளம் கொழிக்கும் மத்திய கிழக்கு முதல் பஞ்சத்தில் உலாவும் சோமாலியா வரை தனது நலனுக்கு குந்தகம் இல்லாத ஆட்சியாளர்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்கிறது.

உலகம் அதன் சரித்திரத்தில் விசித்திரமான ஆட்சியாளர்களைப் பார்த்து இருக்கிறது. கோமாளிகளைக் கண்டிருக்கிறது. மிக மோசமான இனவாதிகளைக் கண்டிருக்கிறது. பைத்தியங்களைப் பார்த்து பரவசப்பட்டு இருக்கிறது.ட்ரம்ப் போல் ஒரு பச்சை இனவாதி அமெரிக்காவிற்கு கிடைத்தால் எந்திரனில் ரோபோவுக்கு ரெட்சிப் மாற்றினது போல் மெகா அழிவுகளின் சக்கரவர்த்தியாய் இருப்பார் என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

ட்ரம்ப் உடன் ஒப்பிடும் போது ஹிலாரி யெமன் தேசத்தின் போராளி தவக்குல் கர்மான் ரேஞ்சுக்கு சிலருக்கு தெரிகிறார். ஆனால் ஹிலாரி வந்தாலும் சரி, ட்ரம்ப் வந்தாலும் சரி ரெண்டுமே ஒன்னுதான். ரெண்டுமே ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்... அவை மனித குலத்திற்கே எதிரானவை.

- ஸபர் அஹ்மத்

# ஆபிரிக்கா என்றால்

டில்ஷான் முஹம்மத்

ஆபிரிக்கா என்றால் நம் மனக்கண் முன்னால் தோன்றுவது மெலிந்த உருவமுடைய பிள்ளைகளும், அவர்களின் பசியும் பட்டினியுமே.

''ஒரு கண்டம் முழு உலகிற்கும் உணவு கொடுக்க முடியும் என்றால், அது ஆபிரிக்காதான்' என்பார்கள். அத்தனை இயற்கை வளங்கள் இருந்தாலும் காலனித்துவ ஆட்சியாளர்கள் தமக்கு தோதான சர்வாதிகாரிகளை ஆட்சியில் அமர்த்தி பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் இனங்களுக்கு இடையே சண்டையை மூட்டி விட்டு மறுபக்கம் அதன் இயற்கை வளங்களை கொள்ளையடித்தலே இத்தனை நூற்றாண்டு காலம் நடந்துவந்த கொடுமை.

ஆபிரிக்காவின் படிப்பறிவு வீதம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்ததால், இந்த தந்திரங்களை தெரிந்து கொள்ளும் அளவுக்கு அந்த மக்கள் தெளிவடைந்திருக்கவில்லை. ஆங்காங்கே சர்வாதிகார ஆட்சியாளர்களை மாற்ற நினைத்தாலும், அது பெரும் அழிவிலே முடிந்தது.

என்றாலும் 1990 களிற்கு பிறகு ஆபிரிக்காவில் உருவாகிய மக்கள் இயக்கங்கள், தூர நோக்குள்ள தலைவர்கள் இந்த இடை வெளியை நிரப்புவதற்கு எடுத்த அயராத முயற்சிகளுக்கு இப்போது பலன் காண ஆரம்பித்துள்ளார்கள். பல உள்நாட்டு யுத்தங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன.

தற்போதைய இளைஞர்கள் மனநிலையில் மாற்றம் வந்திருக்கின்றன. அவர்கள் ஆக்கபூர்வமான அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றார்கள். நாம் அடங்கிக் கிடந்தது போதும், வெளியார் எமக்கு ஆலோசனை சொல்லத்தேவையில்லை நாம்





ஆபிரிக்காவை கட்டியெழுப்ப போகிறோம் என்கிறார்கள் அவர்கள்.

ஆபிரிக்காவின் அனைத்து துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்காக ஆபிரிக்க யூனியன் களத்தில் நிற்கிறது. உள்நாட்டு குழப்பங்களை தீர்ப்பதற்காக ஆபிரிக்க யூனியன் துருப்புக்களும் வைத்திருக்கிறார்கள். முழு மொத்த ஆபிரிக்காவின் வடக்கில் இருந்து தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் அதிவேக பாதைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் பல நாடுகள் துரித கதியில் பொருளாதார வளர்ச்சியடைந்து வருகின்றன.

இப்போதெல்லாம் வறுமை ஒழிப்பு போன்ற தலைப்புகளில் உள்ள புத்தகங்கள், மாநாடுகளில் ஆபிரிக்கா சிறுவர்களை பயன் படுத்துவதற்கு கடுமையான எதிர்ப்பு கிழப்பி இருக்கிறது. இதனால் ஐநா போன்ற சர்வதேச நிறுவனங்கள் தமது சர்வதேச பதிப்புகளில் ஆபிரிக்க சிறுவர்களின் படங்களை தவிர்த்து வருகின்றன.

ஒரு பனை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற மாதிரி புதிய எதியோப்பியாவை பாருங்கள்

# பள்ளிவாசல்களை விட்டு, ஓட்டம்பிடிக்கும் இமாம்கள்

-அஷ்ஷெய்க் டீ.எம் முபாரிஸ் ரஷாதி

ஆலிம்கள் உலமாக்களுக்கு ஏதாவது சொல்லிவிட்டால் கொதித்தெழும் நமது சமூகம் உண்மையில் உலமாக்களை நேசிக்கிரார்களா? என்றால் இல்லை என்பது தான் பதிலாகவும் கிடைக்கும்.

இமாமாக கடமை புரியும் உலமாக்களுக்கு பிச்சைக்கார சம்பளத்தை கொடுத்து விட்டு நிர்வாகிகளும் ஊர் மக்களும் உலமாக்கள் உலமாக்கள் என்ற வாய் கிழிய கத்துவதில் எந்த அர்த்தமும் கிடையாது.

அவர்களது ஊரில் ஹோட்டலில் ரொட்டி அடிப்பவர், மேசன் பாஸ், சாதாரண கூலித் தொழிலாளர் இவர்களுக்கு மாதாமாதம் குறைந்தது முப்பதாயிரம் ரூபாய்கள் வருமானம் கிடைக்கிறது. ஆனால் பள்ளி இமாமுக்கு மட்டும் பத்தாயிரம் பதினைந்தாயிரம் ரூபாய்கள் கொடுத்து விட்டு அவர் பள்ளிக்குள்ளே முடங்கிக் கிடக்கவேண்டும் என்று நிபந்தனை வேறு.

இன்றைய உலமாக்களை பிச்சைக்கார சமூகமாகவும், செல்வந்தர்களுக்கு முன் கை கட்டி நிற்கவும் வைத்துள்ளார்கள். தமது மனைவிக்கு பத்தாயிரம் ரூபாய்கள் பெறுமதியான ஒரு சாரி வாங்கிக் கொடுக்கின்ற நிர்வாகிகள் தமது பிள்ளைக்கு சிறு தலைவலி வந்தால் கூட ஸ்கேன் பண்ணி எக்ஸ்ரே எடுக்கும் பள்ளி நிர்வாகத்தினர், பள்ளி இமாமின் சொந்த குழந்தை வபாத்தானாலும் கடிதத்தில் கையொப்பம் வாங்கி காலையில் சென்று இரவுக்குள் வந்து விடுங்கள் என்று சொல் வதானது அவர்களை மனித உருவம் கொண்ட மிருகங்கள் என்றே சொல்லவைக்கிறது.

பள்ளி இமாமுக்கோ முஅத்தினுக்கோ சம்பளம் கொடுக்கும் போது தனது உம்மா வாப்பாவின் சொத்திலிருந்து கொடுப்பது போன்ற ஒரு கஞ்சத்தனம் இந்த நிர்வாகிகளுக்கு. இந்த மோசமான நிலை மாற்றப்பட வேண்டும். எமது சமூகம் இது பற்றி சற்று சிந்திக்கவேண்டும்.



ஊர்மக்கள், பள்ளி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், பள்ளி இமாம்கள், முஅத்தின்மார்கள் விடயத்தில் கரிசனை எடுப்பது சன்மார்க்கக் கடமைகளில் ஒன்றாகும் அது போன்று மரக்கறி, இறைச்சி, அரிசி, குடு கஞ்சா விற்பவர்களும் (மார்க்கத் தெளிவற்றவர்கள்) வட்டி, விபச்சாரம், மது, சூது, களவு பித்தலாட்டம் இவைகளோடு உருண்டு புரள்பவர்கள் வஹியை சுமந்த உலமாக்களை நிர்வகிக்கின்ற நிலையை மாற்றி படித்தவர்கள், உலமாக்கள் ஊரை நிர்வகிக்கின்ற நிலை உருவாக வேண்டும். அதற்காக உழைக்க புத்திஜீவிகள் முன்வரவேண்டும். ஒரு சமூகம் தமது உலமாக்களையும் அறிஞர்களையும் அறிவு, ஆன்மீக பொருளாதார அடிப்படையில் முன்னேற்றாதவரை தாம் முன்னேறுவதென்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கும்...!





ஜாமியா நளீமியாவின் 6ஆம் வருட மாணவர் சகோதரர் பைசல் பரீத் அவர்களுடைய **'நிரம்பி வழியும் நிசப்தம்'** எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 13.07.2016 அன்று கொழும்பு, தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு கலாபூஷணம் அகத்தி முறிப்பான் தலைமை தாங்க, பிரதம அதிதியாக கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். நிகழ்வில் OMSED நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்ஸன் ஆரிப் சிறப்புப் பிரதி பெறுவதையும், நூலாசிரியர் சகோதரர் பைசல் பரீதின் பெற்றோர் சிறப்புப் பிரதி பெறுவதையும் படங்களில் காணலாம்!

# சம்மன்கோட்டை மஸ்ஜித் நிர்வாகமே! இது உங்களின் மேலான கவனத்திற்கு

சம்மன்கோட்டை /சிவப்புப் பள்ளிவாசல் கொழும்பு வருபவர்களுக்கு மிகவும் பிரபல்யமானது. அதன் முன்னைய தோற்றத்தைவிட தற்போது அது கம்பீரமாகவும், மனதை கவரக்கூடியதாகவும் புறத்தோற்றம் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் கருதப்படுகிறது.

தூரப் பிரதேசங்களில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருபவர்கள் இதன் அழகைக் கண்டு புகைப்படம் எடுக்காதவர்கள் மிக அரிது.

இந்த மஸ்ஜிதுக்கு நான் போகும் போதெல்லாம் கண்ட ஓர் விடயம்.. அந்த சந்தர்ப்பத்தை ஏன் POSITIVE ஆகப் பயன் படுத்தக்கூடாது!? என பலதடவை கேட்டதுண்டு.

**அதுதான் இந்த விடயம்**

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அப்பள்ளிவாயலின் நுழைவுப் பகுதி வரைக்கும் வந்து பார்வையிடுகின்றனர்,சில கேள்விகளையும் கேட்கின்றனர். என்ன பதில் வழங்கப்படுகிறது என்பதில் கேள்விக்குறி.. இந்த சந்தர்ப்பத்தை இஸ்லாமிய அழைப்புக்கான இடமாகவும் ஏன் பயன்படுத்த முடியாது?!

அத்தகைய விசாலமான மஸ்ஜிதில் ஏன் பிரத்தியேகமான அறையொன்றை ஒதுக்க முடியாது? சுற்றுலாப் பயணிகளுக்கு இஸ்லாம் பற்றியதான அடிப்படை அறிமுகத்துக்கு. இஸ்லாத்தைப் பற்றியதான அடிப்படைகள் அடங்கிய ஒரு சிறு கையேட்டை அச்சிட்டு வழங்க முடியும். இன்னும் இது பற்றி விசாலமான கலந்துரையாடல், திட்டங்களையும் மேற்கொள்வது மிகவும் உசிதமானது. இதனை ஜம்மிய்யத்துல் உலமா சபை அந்தப் பள்ளி நிர்வாகத்துடன் இணைந்து திட்டங்களை மேற்கொள்ளுமா?

இந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்ய இலங்கை வாழ் முஸ்லிம்களே ஒத்துழைப்போம். ஈருலகிலும் வெற்றி பெறுவோம். - **அப்துர் ரஹீம் அ[illegible] (நளீமி)**


After A/Ls

Become a

4 months

Certified Islamic Banker

-Lead your career in a progressing industry-

The Islamic Banking & Finance industry has been identified as one of the fastest growing sectors within the global economy. There is a great demand for professionals to serve this industry both locally and globally.



"Join the Islamic Finance journey with FGA to master the skills in your chosen field. I recommend FGA is the best place to qualify and develop your career in Islamic Banking & Finance"

Mohamed Ishrath, Amana Bank PLC

CISI CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT ACCREDITED TRAINING PARTNER

FGA Registered with TVEC under A05375

CLASS COMMENCEMENT
Date : 04 - September - 2016
Time : 9.30 am - 10.30 am

SPECIAL DISCOUNT
Register on or before 8-Sep-2016

JOB
Guaranteed Paid Internship of 3 months in leading Islamic Banks & Financial institutions in Sri Lanka.

RECOGNITION
This programme will lead to the Islamic Finance Qualification (IFQ) offered by CISI-UK.

EXEMPTION
this programe will offer exemption for Diploma in Islamic Banking & Finance (DIBF) offered by FGA.

REGISTER NOW 077-7703567 077-4616710

First Global Academy (FGA)
#4, Level 1, Collingwood Place,
Colombo 06, Sri Lanka.

+94 11 7395090-3
www.firstglobalacademy.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை என்னிடம் முறையிடுங்கள்

## ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் – புத்திக பத்திரண

**வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் பேசப்படும் அளவுக்கு தென் மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. கூடுதலான முஸ்லிம் மக்களின் வாக்குகளாலேயே சிலர் மக்கள் பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்யப்படுகிறார்கள். இதற்குரிய காரணம் என்ன?**

மாத்தறை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைச்சர்கள் தெரிவாகுதில்லை. அதுபோன்று சதவீதமாக எடுத்துப்பார்த்தால் மொத்த வாக்கு எண்ணிக்கையில் முஸ்லிம் மக்களின் வாக்கெண்ணிக்கை குறைவு. முஸ்லிம் மக்களைப் பற்றி பேசுகின்ற அமைச்சர்கள் தெரிவாகாமல் இருப்பது மிகவும் மோசமானதொரு விடயம். மாகாண சபை மற்றும் நகர சபைகளை எடுத்துக்கொண்டாலும் இந்நிலையை கண்டகொள்ள முடிகிறது. ஆதனால் அவர்கள் இப்பிரதேசம் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்துவதில்லை. முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி எமக்கு வெற்றி பெற முடியும் என சிங்களவர்களும் நினைக்கிறார்கள். இதனால் இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான மக்கள் எனக்கு வாக்களிக்கிறார்கள். நான் அவர்களுக்கும் சேவையாற்றி வருகிறேன். இங்குள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு நான் உதவிகளை செய்து வருகின்றேன். எதிர்வரும் காலத்தில் இம் மாவட்டத்திலுள்ள பள்ளிவாயல்களுக்கும் உதவிகளை வழங்க தயாராக இருக்கின்றேன்.



**தென்மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற பெரும்பாலான பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதில் தென் மாகாண கல்வி அமைச்சு இன ரீதியில் பக்கச்சார்பாக நடந்து கொண்டிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது?**

மாகாண சபையொன்றின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிடும் பொழுது அங்குள்ள அமைச்சுக்கு பெரியளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. அதனால் நான் உங்களுடைய பத்திரிகையின் வாயிலாக கூற விரும்புவது என்னவென்றால் மாத்தறை மாவட்டத்தில் அநீதிக்குள்ளான முஸ்லிம் இளைஞர் யுவதிகளுக்கும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கும் அவ்வாறான பிரச்சினைகள் உள்ளதென்றால் என்னிடம் முறையிடுங்கள். என்னை வந்து சந்தியுங்கள். குறைந்த பட்சம் எனது கையடக்கத் தொலைபேசிக்கு குறுந் தகவல் ஒன்றையாவது அனுப்புங்கள். எனது அலுவலகத்தில் கபில சுரங்க என்பவர் உள்ளார். எனது அலுவலக இலக்கம் **0412230946.** இவ்விலக்கத்திற்கூடாக கபில சுரங்கவினை அழைத்து உங்களுடைய பிரச்சினைகளை முன்வைக்கலாம்.

நேர்காணல் : ஹெட்டி ரம்ஸி

இது போன்ற பிரச்சினைகள் மாத்திரமல்ல. இப்பத்திரிகையை வாசிக்கின்ற எல்லோருக்கும் பல பிரச்சினைகள் இருக்கலாம். உதாரணமாக தொழில் பிரச்சினை, கிராமத்திலுள்ள பிரச்சினைகள் அரசியல் பழிவாங்கல்களால் ஏற்பட்ட அநீதிகள் உள்ளிட்ட சகலதையும் தென்மாகாணத்தில் உள்ள மக்கள் அவற்றை 0777306922 என்னும் எனது இலக்கத்திற்கோ அல்லது எனது இணைப்புச் செயலாளர் கபில சுரங்கவிற்கோ தெரியப்படுத்துங்கள். சில நேரம் எனது கையடக்கத் தொலைபேசி இலக்கம் அலுவலாக இருந்தால் எனது செயலாளருக்கு கதையுங்கள். அவரிடம் சொல்லுங்கள் அவ்வாறான பிரச்சினைகளை நான் பாராளுமன்றத்தில் முன்வைத்து தீர்வுகளை பெற்றுத்தருவேன்.

**இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப எவ்வாறான திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இனங்களுக்கிடையில் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கு கலாசார ரீதியில் நாங்கள் வேறுபட்டிருந்தாலும் மொழி ரீதியாக வேறுபாடுகளை கொண்டிருந்தாலும் இன மத ரீதியாக வேறுபட்டிருந்தாலும் நாம் ஒரே தேசத்தில் ஒன்றாக கிளர்ந்தெழுந்தால் தான் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த உணர்வை வளர்க்கும் வகையிலான பணிகளை பாடசாலை மட்டத்திலிருந்து முன்னெடுக்க வேண்டும். இது முதலாவது விடயம்.

இரண்டாவதாக நாட்டு மக்களுக்கு மொழிக் கல்வியை புகட்ட வேண்டும். அதற்கு சிங்களவர்களுக்கு தமிழையும் தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களத்தையும் போதிக்க வேண்டும். மக்களுக்கு மத்தியிலான சந்தேகப் போக்குகள் இடம்பெறாமல் பார்க்க வேண்டும். இனவாதச் செயல்கள் தலைதூக்காமல் இருக்க அதை தூண்டும் இடமாக எமது மதங்களை வைத்திருக்க கூடாது.

மலேசியாவை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். அங்கு சீன மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் என பலர் உள்ளார்கள். அவர்கள் தங்களது அடையாளத்தை பாதுகாத்துக்கொண்டு அங்கு கலாசார மாற்றங்கள் இருந்தபொழுதும் எல்லா மக்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பினார்கள்.

**உங்களுக்கு கட்சியினால் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் என்ன?**

முக்கியமாக கட்சி அமைப்பாளர்கள் என்ற வகையில் கிராமிய மட்டத்திலான பணிகளை முன்னெடுக்கிறேன். கட்சியினால் பல பொறுப்புக்கள் ஒப்படைக்கபட்டுள்ளன. அதில் ஒன்று பாராளுமன்ற விவகாரம். பாராளுமன்றத்தில் எனது செயற்பாடுகளை பற்றி அறிந்து கொள்ள வேண்டுமெனில் manthri.lk இணையதளத்தில் சென்று பார்க்கலாம். பாராளுமன்றத்தில் செயலூக்கமிக்க உறுப்பினர்களுள் நான் 3வது இடத்தில் உள்ளதாக அவ்விணையதள கணிப்பீடு சொல்கிறது. அதேபோன்று மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் செயற்படுகிறேன். கட்சியினால் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக எனது 'சமாதி' மக்கள் அபிவிருத்தி நிதியத்திற்கூடாகவும் மக்களுக்கு பல நிவாரணங்களை வழங்கி வருகிறேன்.

**பாராளுமன்றத்தில் சிறந்த அமைச்சர்களுள் ஒருவராக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள். எனவே புதிதாக அரசியல் களம் நுழைய காத்திருப்பவர்களுக்கு நீங்கள் கூறும் விடயங்கள் என்ன?**

பாராளுமன்றம் என்பது கலியாட்ட மண்டபமல்ல. அங்கு அரட்டை அடிக்கும் பொழுதோ அல்லது சண்டைச் சச்ரவுகளில் ஈடுபட்டு காலத்தை விரயமாக்கும் பொழுதோ அது மக்களுக்கே பாதிப்பாக அமைகிறது. பொது மக்களின் வரிப்பணமே அவர்களுக்கு ஊதியமாக கொடுக்கப்படுகிறது. எனவே அமைச்சர்கள் மக்கள் நலனை அடிப்படையாக கொண்ட பணிகளிலேயே ஈடுபட வேண்டும். நான் ஒருபோதும் பாராளுமன்றத்தில் தகாத வார்த்தைகளை கையாண்டது கிடையாது. சக உறுப்பினர்களோடு சண்டையில் ஈடுபட்டது கிடையாது. எனவே பாராளுமன்றத்திற்கூடாக மக்களின் பிரச்சினைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அதனை முன்வைக்கத் தகுதியுடையவர்களே பாராளுமன்றம் செல்ல வேண்டும்.


கண்டி மற்றும் திஹாரியில்

Diploma in SALES MANAGEMENT
Introduction to Business Management
Human Resource Management (HRM)
Marketing Management
Business Communication
Personal Development as a Manager
First Time in Sri Lanka
1st Batch பாடநெறி ஆரம்பம் 1st - AUG

Duration 4 Months
Full Time / Part Time

Diploma in HOTEL MANAGEMENT
5th Batch பாடநெறி ஆரம்பம் 1ST - AUG
- Front office
- Food & Beverages
- International Cookery
- House Keeping
- Pastry & Bakery
- Languages - French & English
- IT (Information Technology)

HOT LINE 0777 222 529

Diploma in ENGLISH + IT with Skills Training
I Reading I Writing I
I Listening I Speaking I
IT- MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
58th Batch பாடநெறி ஆரம்பம் 01st - AUG
02 Months
Commence on Batch 09 January - 23

SATISFACTION 100% GUARANTEE

Diploma in AIR CONDITIONING & REFRIGERATION
★ ASSEMBLING AND DISMANTLING
★ TROUBLE SHOOTING
★ HANDLING OF TOOLS
★ COPPER TUBE BRAZING, BENDING AND FIXING
★ HANDLING OF DIGITAL AND ANALOG METERS
பாடநெறி ஆரம்பம் 11th - AUG
Duration - 1 Month - Full time - with minimum of 168 hours

Diploma in ERP WITH COMPUTERIZED ACCOUNTING
INTRO to Computer Accounting
INTRO to Erp
MS EXCEL
MS Access
Quick Book Premier
M.Y.O.B.Premier
Sage- 50 Proffessional
Peach Tree by Sage
Tally ERP
பாடநெறி ஆரம்பம் 1st - AUG
02 Months

Diploma in TEACHER TRAINING PROGRAM
DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
DIPLOMA IN CHILD PSYCHOLOGY
DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING
PROFESIONAL ENGLISH
6 Months
11th Batch பாடநெறி ஆரம்பம் 13th - Aug
With UK & Indian Accreditation
Well qualified panel of Lecturers with American Qualification

TOEIC City & Guilds EDFOCUS

இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

Golden College Learning for Success
GOLDEN COLLEGE www.goldencollege.lk
NO : 548, PERADENIYA ROAD, KANDY. 081 2 205 544 0777 222 529
NO : 126, KANDY ROAD, THIHARIYA. 033 2 245 515 0777 222 528


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# எதிர்க்கட்சியின் பலம்

ஜனநாயக ஆட்சியொன்றின் பிரதானமான அம்சம் பலமான எதிர்க்கட்சி அமைவதுதான். ஆளும்கட்சி கண்மூடித்தனமாக, தன்னிஷ்டம் போல் செயற்படும் பொழுதெல்லாம் அதற்கெதிராகக் குரல் கொடுத்து நல்லாட்சியை உறுதிப்படுத்துவது எதிர்க்கட்சியின் கடமை. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்துவதும் பொதுமக்களின் நலனை உறுதிப்படுத்துவதும் எதிர்க்கட்சி செய்ய வேண்டிய பிரதான பணியாகும்.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் செல்நெறியில் பலமான எதிர்க்கட்சி அமையப் பெறாமை மக்களுக்கு கிடைத்த சாபக்கேடாகும். மாறி மாறி வந்த எந்த அரசாங்கமும் எதிர்க்கட்சியைப் பலமிழக்கச் செய்வதையே தமது தலையாய பணியாகக் கொண்டு செயற்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியில் ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் தமக்கு எதிரான கட்சியின் தலைவராக இருந்த ஸ்ரீமாவோ அம்மையாரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் ஆட்சிக்கெதிராகக் குரல் கொடுத்த ஜேவிபியினர் வகை தொகையின்றிக் கொல்லப்பட்டனர். ரணிலின் ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியினர் துண்டாடப்பட்டு பலமிழக்கச் செய்யப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எதிரணி என்ற பேச்சுக்கே இடமின்றி அடக்குமுறை ஆட்சி செய்தது.

இவ்வாறு ஜனநாயக விழுமியங்கள் ஒடுக்கப்பட்டு வரும் வேளையில்தான் நல்லாட்சி அரசாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இரா. சம்பந்தன் நியமிக்கப்படுகிறார். நாட்டில் நல்லாட்சி நிலவுவதாக மக்களுக்கு பாடம் கற்பிக்கப்படும் வேளையில், இந்த நல்லாட்சிக்கான எதிர்க்கட்சியின் பங்களிப்பு பற்றிய கேள்விகள் தற்போது பரவலாக எழுந்து வருகின்றன.

சிறுபான்மைக்கு மீண்டும் அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்துக்குப் பின்னர் இரா. சம்பந்தன் அவர்கள் சிறுபான்மையினத்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தான் ஒரு இனத்துக்காக வன்றி முழு நாட்டுக்குமாக தனது கடமைகளைச் செய்யப் போவதாக அவர் தனது பதவியைப் பொறுப்பேற்கும் வேளையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போது நாடு போகிற போக்கில் எதிர்க்கட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. நாட்டு மக்கள் தற்பொழுது எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளின்போது எதிர்க்கட்சி என்ன பங்களிப்பை மக்களுக்காகச் செய்திருக்கிறது? மஹிந்த தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்பது ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒன்றல்ல. அது தான்தோன்றித்தனமானது. சம்பந்தன் தலைமையிலான எதிர்க்கட்சியை விட, இந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தான் மக்கள் மத்தியில் எதிர்க்கட்சி என்னும் பொழுது தோற்றமளிக்கின்ற அளவுக்கு உண்மையான எதிர்க்கட்சி செயலிழந்திருக்கிறது.

மக்களின் மீது வரிச்சுமையை அதிகரித்த, வட் வரி விவகாரத்தை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியே முன்னின்று நீதிமன்றம் வரை சென்று மக்களுக்கு நீதியான தீர்ப்பை பெற்றுக் கொடுத்தது. மத்திய வங்கி ஆளுநர் விவகாரத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் அழுத்தம்தான் அவரை பதிவியிலிருந்து தூக்கியது. இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம், அதில் அனுகூலங்களும் இருந்த போதிலும், இதனுடைய பக்க விளைவுகளை மக்கள் முன் எடுத்துச் செல்வதில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும் ஜேவிபியுமே முன்னின்றன. மக்களுக்கு கிடைக்க வேண்டிய இதுபோன்ற நியாயங்களுக்கு முன்னால் சம்பந்தன் தலைமையிலான எதிர்க்கட்சி செயலிழந்து போனமை தான் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஊதிப் பெருப்பிக்கப்படக் காரணமாக அமைந்தது.

மஹிந்த அரசில் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான எதிர்ப்புணர்வுப் பிரச்சாரத்தினை மஹிந்த தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எதிர்க்கப் போவதில்லை. ஆனாலும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் இரா. சம்பந்தன், முஸ்லிம்கள் மீதான இந்த எதிர்ப்புணர்வுப் பிரச்சாரத்துக்கு எதிராக அரசுடன் போராடியிருக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் தற்பொழுது தான் சார்ந்திருக்கும் கட்சியின் தலைவர் என்பதைத் தாண்டி, எதிரணியில் உள்ள கட்சிகளின் தலைவராகவும் பாராளுமன்றத்தில் தொழிற்பட வேண்டியவராகிறார். அந்த வகையில், ஒரு சிறுபான்மைத் தலைவரின் கீழ் செயற்பட முடியாமல் பிரிந்து சென்றிருக்கின்ற எதிரணியினரையும் இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டிய பெரும் சவால் எதிர்க்கட்சித் தலைவரின் முன்னால் இருக்கிறது.

ஊழல்களுக்கு எதிரான செயற்பாட்டில், ஊழலில் ஈடுபட்டு நாட்டைக் குட்டிச் சுவராக்கியோரை சட்டத்தின் முன்நிறுத்தும் விவகாரத்தில் அரசாங்கம் நகரும் நத்தை வேகம் தொடர்பிலான மக்களின் அதிருப்தியை எதிர்க்கட்சித் தலைமை ஆளும் கட்சிக்கு எடுத்துரைக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைமை என்பது பதவிகளை அலங்கரிப்பதன்று. மக்களுடைய அபிலாஷைகளை அது பிரதிபலிக்க வேண்டும்.

எதிர்க்கட்சி என்பது ஜனநாயகத்தின் அச்சாணி. அது இயங்காவிட்டால் ஜனநாயகம் நகராது. நியாயமான எதிர்க்கட்சிகள் இயங்காத பொழுது, செய்த அநியாயத்தை நியாயப்படுத்துவதற்கான கூக்குரல்கள் ஜனநாயக கோஷங்களாக உரக்க ஒலிப்பது இலங்கை அரசியலின் சாபக்கேடாகத் தான் முடியும்.

# பிக்குகளும் ஊடகங்களும் அரசாங்கத்திற்கு விடுக்கும் சவால்கள்

**பேராசிரியர் சரத் விஜேசூரிய**

இலங்கையை பண்புநயமிக்க நாடொன்றாக மாற்றியமைக்கும் செயல்பாடுகள் தொடர்பில் சட்டத்தை மதிக்கும் பிரஜைகளது எதிர்பார்ப்புகள் நாளுக்கு நாள் பலவீனமடைந்து செல்வதனைக் காண முடிகிறது. அது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இது தொடர்பில் அரசாங்கமும் கவனக் குறைவாக உள்ளது.

நாட்டை ஆள்வது தொடர்பாக அறிவுபூர்வமான முறையில் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்று நிருபமொன்று இல்லாததன் காரணத்தினால் கூட்டரசாங்கம் மீகாமனற்ற கப்பலாக அங்குமிங்கும் அல்லாடிக் கொண்டுள்ளது. விரைவில் இது பாரியதொரு அனர்த்தத்திற்கு உள்ளாகப் போகும் அடையாளங்களை காண்பித்துக் கொண்டுள்ளது.

### பிக்குவும் அரச ஆளுகையும்

மட்டக்களப்பிலுள்ள மங்கலாராமய என்னும் விகாரையில் கட்டிடமொன்றைத் திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் வருகை தராததன் காரணத்தினால் ஆவேசத்திற்குள்ளான அவ்விகாரையின் தேரர் நடந்து கொண்டிருந்த விதம் பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்ததனை காண முடிந்தது. இத்தேரரினது இயல்புகள் பற்றிய தகவல்கள் இதற்கு முன்பும் வேறு வழிமுறைகளிற்கூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இத்தேரரது செயல்கள் இலங்கையிலுள்ள தேரர்கள் கூட்டத்திற்கே ஒரு இழுக்காகும். இத்தேரரது நடவடிக்கைகளை நாட்டிலுள்ள இதர தேரர்களுடன் ஒப்பிடுவது நீதியானதல்ல. ஆனாலும் மேற்படி தேரரினது நடவடிக்கைக் கூடாக அரச ஆட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் தேரர்களது பொதுவான தன்மைகளை அடையாளங் கண்டுகொள்ள முடியும் என்பதை தட்டிக்கழிக்க முடியாது.

நாடு, தேசியம் என்பதாக குரல் எழுப்புகின்ற மகாநாயக்க தேரர்கள் இத்தகைய பிக்குமார்களது நடவடிக்கைகள் தொடர்பில் எதையும் கூறாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதிற்கூடாக சொல்ல விளைவது என்ன? அத்தேரர்கள் இவற்றை அனுமதிக்கிறார்கள் என்பதனையா?

மங்கலாராமை விகாரைக் கட்டடத்தை திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் செல்லாமல் இருந்தது நல்லதென நான் நினைக்கிறேன். அது மாத்திரமல்ல ஜனாதிபதி அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவினைப் போன்று எப்பொழுதும் விகாரைகளை நோக்கிச் செல்வதும் அர்த்தமில்லாத விடயமொன்றாகும். அரசாங்கத்தை அச்சுறுத்துவதற்கு குறித்த தேரருக்கு இனவாதமே தூண்டுகோளாய் அமைந்துள்ளது. இனவாதத்தை தலைமேல் சுமந்து கொண்டு செயற்பட்டு வருகின்ற தேரர்களிடமிருந்து ஜனாதிபதி அவர்கள் எவ்வாறான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெறுவார்?

### தேரர்கள் அச்சுறுத்தல் மிக்கவர்களா?

யானைக் குட்டிகளை தம் வசம் வைத்துக் கொண்டிருந்தமை தொடர்பில் உடுவே தம்மாலோக தேரருக்கு மேலதிகமாக இன்னும் மூன்று பிக்குமார்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கங்காராம, கிரி விகாரை மற்றும் பன்னிபிட்டிய விகாரைகளைச் சேர்ந்த தேரர்களே அத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்ட ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் அரசாங்கத்தை நடாத்திச் செல்வதற்கு சவாலாக அமையும் என்கின்ற அச்சத்தின் காரணமாகவே மேற்குறிப்பிட்ட மூன்று தேரர்கள் தொடர்பில் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. இது எவ்வளவு நகைப்புக்கிடமான செயல்? இத்தகைய நிலைமைகள் அரசாங்கத்தின் கோழைத்தனத்தையும் தூரநோக்கற்ற பார்வையையுமே எம் கண் முன்னால் காண்பித்துக் கொண்டுள்ளன.

அதை விடவும் கொடுமையானது என்னவெனில், ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களை கண்டறிவது தொடர்பில் குறித்த நிறுவனங்கள் இன்னும் தன்னிச்சையானதாகவோ சுயாதீனமிக்கதாகவோ அமையவில்லை என்பதையும் சொல்ல விளைகிறது என்பதனையுமாகும்.

மேற்குறிப்பிட்ட தேரர்கள் அதிகாரம் மிக்க தேரர்கள் என்பது உண்மை. இத்தகைய பிக்கு [illegible] வீதிக்கிறங்கவும் முடியும். அது பற்றிச் சிந்தித்து அச்சமுற்ற நிலையில் அரசாங்கமொன்றை கொண்டு நடாத்த முடியுமா?

தராதரம் பாராமல் தண்டனை வழங்குவதாக அரசாங்கம் கூறிய வாக்குறுதி பொய்யாகிறதல்லவா?

இத்தகைய போலி பிம்பங்களை நாட்டிற்கு அம்பலப்படுத்த வேண்டும். அவ்வாறில்லாமல் நாட்டில் பண்பாடு மிக்க சீரானதொரு ஆட்சியை ஏற்படுத்த முடியாது. உரிமைகளை வேண்டி வீதிக்கு இறங்குகின்ற பல்கலைக்கழக இளம் மாணவர்களுக்கு முகங் கொடுக்கின்ற அரசாங்கம், வற் வரிக்கெதிராக மக்கள் கடையடைப்புச் செய்து வீதிக்கு இறங்குகின்ற பொழுது முகம் கொடுக்கின்ற அரசாங்கம் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிக்குமார்களுக்கு சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வீதிக்கு இறங்குகின்ற மக்களுக்கு முகம் கொடுக்க ஏன் அச்சப்படுகின்றது?



பணம் படைத்த செல்வந்தர்களையும் அதிகார வர்க்கத்தினரையும் பரிவாரங்களாகக் கொண்டு சமூகத்திற்குள் சிவில் அதிகாரமொன்றை சொந்தமாக்கிக் கொண்டுள்ள, ஒரு சில பிக்குமார்களை நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்டதிட்டங்களிற்கூடாக அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. அதைச் செய்வதற்கு சக்தியில்லாத அரசாங்கம் கோழையான அரசாங்கமாகும். இவ்வாறானதொரு அரசாங்கத்திற்கு நாட்டின் பாரதூரமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு துணிச்சலான முடிவுகளுக்கும் தீர்மானங்களுக்கும் வர முடியுமாகிறதா?

அரசாங்கத்தின் ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்பதாக ஆட்சியாளர்கள் கருதுகின்ற சில தேரர்கள் சமூகத்தில் அதிகார பலத்தை கொண்டிருப்பது துறவி ஒருவருக்குரிய உரிமை முறைகளின் பிரகாரமல்ல என்பது தெளிவான விடய மாகும்.

உதாரணமாக, முருத்தெட்டுவே தேரர் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் பொழுது அவர் இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறார். அவர் பெற்றுள்ள அந்தஸ்திற்கு இப்பதவி உதவியாக உள்ளது. முருத்தெட்டுவே தேரருக்கு தாதியர் சங்கத்தை அரசியல் நோக்கத்திற்காக வழிநடாத்தவும் முடியும்.

அரசாங்கமொன்றை இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதற்காக வேண்டி உண்ணாவிரதங்களை முன்னெடுப்பதற்கு இத்தேரருக்கு முடியும் என்பதே அதன் அர்த்தமாகும். பௌத்த துறவியொருவர் புரியும் செயலா இது? அப்பாவி நோயாளர்களை பலிக்கடாக்களாக்கி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது நாகரிக நயமிக்க செயலென சொல்ல முடியாது. மக்கள் வரத்தினால் தேசத்தை ஆள்வதற்கு அதிகாரமொன்றை பெற்றுக்கொண்டுள்ள ஆட்சியாளர்களே மேற்படி தேரர்களுக்கும் செல்வாக்கை உரித்தாக்கிக் கொடுத்துள்ளனர்.

யுத்தத்தோடு பின்னிப் பிணைந்து வந்த பிரச்சினைகளால் இலங்கை முகம்கொடுத்துள்ள பாரதூரமான நிலைகளை தீர்த்து விடுவதற்கு பிக்குமார்களுக்கு முடியாது. அது அரசியல் மட்ட ராஜதந்திர ரீதியிலான விவகாரம். இன்று நாம் அவை தொடர்பில் சாதகமான பதில்களைக் காணும் கட்டத்தையே எட்டியுள்ளோம். ஜனவரி 8 இல் இந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை தொடர்ந்து இத்தகைய நிலை உருவாகியுள்ளது. அம்மாற்றத்திற்கு இந்நாட்டிலுள்ள தேரர்களுள் சொற்பமானவர்களே பங்களித்திருந்தனர். அம்மாற்றம் ஏற்படாமல் இருப்பதற்காகவே பெரும்பாலான தேரர்கள் பங்களித்தார்கள். மாற்றத்தை எதிர்த்த தேரர்கள் புதிய அரசாங்கத்தின் ஆட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்கும்பொழுது ஆட்சியாளர்கள் அதற்கு அடிபணிந்து செல்லும் நிலையொன்றை கண்டுகொள்ள முடியுமாக இருப்பதானது உண்மையிலேயே துரதிஷ்டமாகும்.

### ஊடகமும் அரசாங்கத்தின் ஆட்சியும்

ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதியில் சகல ஊடகங்களும் பல்வேறுபட்ட முறைகளில் அடக்குமுறைக்குட்படுத்தப்பட்டன. ஜனவரி 8 ஆம் திகதியின் பின்னர் கடந்த காலத்தில் ஏற்பட்டதைப் போன்ற நிலைமைகள் எந்தவொரு ஊடக நிறுவனத்திற்கும் உரித்தாகவில்லை. பாரிய அழிவுகளை எதிர்பார்த்த ஊடக நிறுவனங்கள் கூட சுதந்திரமான முறையில் செயற்பட முடிந்தமையானது சிறப்பான விடயமாகும்.

அப்பேற்பட்ட சுதந்திரத்தினை ஊடக நிறுவனங்கள் ஆழமாக புரிந்துகொள்ளாமையானது துர்ப்பாக்கியமாகும். தற்பொழுது ஞாயிற்றுக் கிழமைகளில் பிரசுரமாகின்ற இரண்டு பிரதான பத்திரிகைகள் தெளிவாகவே இனவாதத்தை தூண்டி நிற்பது தெளிவாகிறது. இலத்திரனியல் ஊடகங்களில் இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளும் நான்கு வானொலி சேவைகளும் இனவாதத்திற்காகவும் மதவாதத்திற்காகவும் குரல் கொடுப்பது தெளிவாகிறது. ஏனைய ஊடக நிறுவனங்களும் கூட அவற்றின் உரிமையாளர்களது வர்த்தக சுற்று நிருபணங்களின் பிரகாரமே செயற்படுகிறது.

இலங்கை போன்றதொரு சிறிய நாட்டில், ஒரு சில இனங்கள் வாழுகின்ற இந்நாட்டில், சில மதங்களை மாத்திரம் பின்பற்றுகின்ற இந்நாட்டில் ஊடகங்கள் பொதுவானதொரு சுற்று நிருபத்தின் பிரகாரமே நடந்து கொள்ள வேண்டும். அதாவது சகல ஊடக நிறுவனங்களும் உத்தியோகபூர்வமற்ற யாப்பொன்றை வடிவமைத்துக் கொண்டு பொதுவானதொரு கொள்கைத் திட்டத்தின் பேரில் செயற்படுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திற்கு பங்களிக்கும் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. அது நாட்டின் அபிவிருத்தியை முன்னிட்டு ஊடகங்களின் மீதுள்ள தார்மீகப் பொறுப்பொன்றாகும்.

அவ்வாறானதொரு கொள்கைத் திட்டத்தின் படி செயற்பட்டிருப்பின் இனவாதத்தையும் மதவாதத்தையும் வலுக்கச் செய்வதற்குப் பதிலாக அவற்றைத் தணிப்பதற்கிருந்த அவகாசங்களை கூட்டியிருக்கலாம். இன வாதத்தையும் மதவாதத்தையும் போசிக்கின்ற ஊடகக் கலாசாரமானது நாட்டினது சீரான பயணத்திற்கு பாரிய தடங்கலாக உள்ளது.

நாட்டில் புரையோடிப்போயிருந்த யுத்தம் முடிவடைந்துள்ள இப்பின்னணியில் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்காக வேண்டி ஊடகங்கங்கள் ஒன்றிணைந்து பங்காற்ற வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். மீளவும் இரத்தம் சிந்தாத நாடொன்றை கட்டியெழுப்புவதற்காக வேண்டி மக்களின் ஞானத்தை அர்த்தபுஷ்டியுள்ளதாக போஷிக்க வேண்டும்.

பெரும்பாலான ஊடக நிறுவனங்களிலுள்ள ஊடகவியலாளர்கள் இவ்விடயத்தை புரிந்துகொண்டுள்ளார்கள் என்பது தெளிவான விடயமாகும். (பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றவூப் ஸெய்ன்

# வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை

## இணைப்புக்கு சோரம் போவது அரசியல் துரோகமாகவே பார்க்கப்படும்

இலங்கையின் இன்றைய தேசிய இனப்பிரச்சினை சிங்கள மக்களினதும் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களினதும் பிரச்சினையாக மாத்திரம் பார்க்கப்படக் கூடாது. தேசிய இனப்பிரச்சினை என்பது வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள், தென்னிலங்கை முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியதாகும். இந்த உண்மையை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்கும் அமைதித் திட்டங்களில் நினைவுகூர வேண்டும். இதனை ஏற்றுக்கொள்வதில் உள்ள மனத் தடைகள் நீக்கப்பட வேண்டும். இந்தக் குறுகிய பார்வை அகற்றப்பட்டு, பரந்த கண்ணோட்டத்தில் இனப் பிரச்சினை பார்க்கப்பட வேண்டும்.

தற்போது ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கைவிட்டு சமஷ்டி ஏற்பாடு குறித்து அரசாங்கம் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. சமஷ்டிக்குக் குறைந்த எந்த அரசியல் நிலைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதும் உறுதியாகின்றது. இச்சூழ்நிலையில், வடக்குக் கிழக்கு இணைப்புப் பற்றிய கோரிக்கைகள் மீளவும் மேலெழுந்துள்ளதை சமீபத்திய அரசியல் மேடைகளில் அவதானிக்கலாம்.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில், அதனூடு எட்டப்படும் முடிவுகளில் முஸ்லிம் காரணி புறந்தள்ளப்படும் அபாயத்தை இம்முறையும் நாம் எதிர்கொள்ளக் கூடாது. இதில் முஸ்லிம் சிவில் சமூகம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டியுள்ளது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றி, சமஷ்டி அல்லது கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசின் மீது திணிக்கப்படுகின்றது. மேற்கு நாடுகளில் இருந்து இந்த நிர்ப்பந்தத்தை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது. இணைந்த வடக்குக் கிழக்கிலேயே அந்த சமஷ்டித் தீர்வு நடைமுறைக்கு வர வேண்டும் என தமிழ்த் தரப்பு அழுத்தமாக வலியுறுத்தி வருகின்றது.

கடந்த காலங்களில் இணைக்கப்பட்ட (முஸ்லிம் அபிலாசைகளுக்கு எதிராகவும் முஸ்லிம்களை கலந்தாலோசிக்காமலும்) வடக்குக் கிழக்கில் முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை இந்நாடு நன்கு அறியும். முஸ்லிம்களும் இலங்கையின் தேசிய இனம் என்பதும் இனப் பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம் தரப்பும் தட்டிக் கழிக்க முடியாத பங்காளிகள் என்பதும் அந்த இணைப்பின் போது வசதியாக மறக்கப்பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் நள்ளிரவோடு நள்ளிரவாக முஸ்லிம் சமூகத்தை நாதியற்றவர்களாக நடுத்தெருவில் நிறுத்தியது. அவர்களது குரல்கள் நெருக்கப்பட்டு, கைகளிலும் கால்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டன. பேரின



வாதம் போன்று அதிகாரமளிக்கப்பட்ட தமிழ் குறுந்தேசியவாதமும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு ஆபத்தானதுதான் என்ற உண்மையை முஸ்லிம்களுக்கு அது உணர்த்தியது.

முஸ்லிம் பிரதேசங்களில் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் அதிகாரமளிக்கப்பட்ட தமிழ் நிர்வாகிகளாலும் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளும் இன ஒதுக்கலும் தமிழ் ஆதிக்கத்தின் கீழ் முஸ்லிம்கள் வாழ முடியாது என்ற உண்மையை வலுவாக நிலைநிறுத்தியிருந்தது.

1987 ஒப்பந்தத்தின் பின்னர் வடக்குக் கிழக்கு சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கும் நிலையில் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் இருக்கவில்லை. இது குறித்து மீள்பார்வையின் முன்னைய இதழொன்றில் மிக விரிவாக எழுதியுள்ளோம்.

இலங்கை அரசாங்கத்தின் ஆட்சியதிகார மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாகி, சமாதான சூழலுக்கு முஸ்லிம்களின் ஆதரவுடன் வழிவகுத்த தற்போதைய முஸ்லிம் தலைமைகளானது வழமைபோன்று மிக மோசமான அரசியல் தவறுகளை இழைக்கக் கூடிய ஆபத்து மீளவும் எழுந்துள்ளது.

இதுவரை இம்முஸ்லிம் தலைமைகள் சமூகத்தில் எவ்விதமான, காத்திரமான அரசியல் உரையாடல்களையும் நடத்தவில்லை. சமூகத்தைச் சூழ்ந்துள்ள அரசியல் நிலைமைகள், பேச்சுவார்த்தைகள், தீர்வுத் திட்டங்கள், அரசியலமைப்பு மாற்றம், தேர்தல் முறை சீர்திருத்தம், எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக நமது மக்களை ஆழ்ந்த மயக்கத்தில் வைத்திருக்கவே முஸ்லிம் அரசியல் தலைமைகள் விரும்புகின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகளின் சமீபத்திய போக்குகள் இதனையே தெளிவாக எடுத்துரைக்கின்றன.

சிவில் சமூகத்திலிருந்து எழும் தன்னியல்பான அரசியல் உணர்வுகள் திரட்சியடையும்போது சமூக நிறுவனங்களால் முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டங்களுக்கு செவி சாய்ப்பது போல் பாசாங்கு செய்யும் அரசியல் தலைமைகள் இறுதியில் அதிகாரத்தில் உள்ளோருக்கு அடிபணிந்து வருவதே வரலாறாகியுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைமைகளின் இந்த கபடத்தனத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் தரப்பினர் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, கலாச்சார தாயக பாரம்பரிய பூமி, தமிழர் தேசம், சமஷ்டியை உள்ளடக்கிய ஐக்கிய இலங்கை என்பவற்றை உள்ளடக்கிய மாதிரி அரசியலமைப்பொன்றை முன்வைத்துள்ளனர்.

தமக்கான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து விரிந்தளவில் கலந்துரையாடி வருகின்றனர். சமஷ்டியே தமக்கான தீர்வு என்றும், அது இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கை என்ன என்பது தெளிவாக முன்வைக்கப்பட வேண்டும். மங்கலான நிலைப்பாடுகளிலிருந்து தெளிவான நிலைப்பாட்டுக்கு வருவதும் அவற்றை தேசிய நிலைப்பாடுகளாக மாற்றுவதும் அரசியல் கட்சிகளை ஏற்கச் செய்வதும் இன்றைய சிவில் சமூகத்தின் உடனடிப் பணியாக மாற வேண்டும்.

இந்த இடத்தில் வடக்குக் கிழக்கு இணைப்புப் பற்றிய சமீபகால தமிழர் தரப்பு நிலைப்பாடு குறித்து பரிசீலிப்பது அவசியம். இணைக்கப்படும் வடக்குக் கிழக்கில் முஸ்லிம்கள் மென்மேலும் சிறுபான்மையாக்கப்படுவதோடு, அதிகாரமற்ற அபலைகளாக மாற்றப்படும் ஆபத்து உள்ளது என்பதை முன்னைய கட்டுரைகளில் வரலாற்று ரீதியிலும் புள்ளிவிபரம் சார்ந்தும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அண்மைக்கால தமிழ் தேசியக் கூட்டணியினரின் அரசியல் மேடைகளில் இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும் எனவும் சிறுபான்மை மக்களின் அரசியல் ஐக்கியத்தைப் பாதுகாக்கவே இதைக் கோருகிறோம் என்றும் கூறி வருகின்றனர். முஸ்லிம்கள் மீதான தமிழ்த் தேசியத்தின் இந்தக் கழிவிரக்கம் குறித்து முற்று முழுதாக விசுவாசம் கொள்ளும் நிலையில் வடகிழக்கு முஸ்லிம்கள் இல்லை.

10-07-2016 அன்று வெள்ளவத்தை தமிழ்ச் சங்க நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் இணைந்த வடக்குக் கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை ஏற்றுக்கொள்ள நாம் தயார் என்று கூறியிருந்தார். அவரது கருத்து பின்வருமாறு அமைந்திருந்தது.

"இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஒரு பக்குவமான, படித்த முஸ்லிம் நபரை எமது முதலமைச்சராக ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். இதனை முஸ்லிம் தலைவர்களும் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனாலேயே வடக்குக் கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என திடமாக வலியுறுத்தி வருகின்றோம். எமக்கு எதிராக எமது போராட்டத்திற்கு எதிராக பல அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. பிரஜா உரிமைச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதை அடுத்து தமிழ் மக்களின் அரசியல் பலம் (பக்.14)

# பல்கலைக்கழகங்களும் இன நல்லுறவும்

சமீபத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் இலங்கையின் சமாதான சகவாழ்வு, இன நல்லுறவு, தேசிய சமாதான முயற்சிகள், பல்கலைக்கழக கல்வி முறைமை பற்றிய பல்வேறு விவாதங்களைக் கிளப்பியுள்ளது.

குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் கண்டிய நடனத்தை அரங்கேற்றுவதற்கு சிங்கள மாணவர்கள் முயற்சித்தபோது, பரத நாட்டியத்தை ஏற்பாடு செய்திருந்த தமிழ் மாணவர்கள் அதனைத் தடுக்க முயன்றார்கள். இறுதியில் வரவேற்பு வைபவம் வன்முறையில் முடிந்தது. தெற்கிலுள்ள சில அரசியல்வாதிகள் தமிழர்கள் இன நல்லுறவுக்கு தயாரில்லை என்பதையே இதன் மூலம் உணர்த்தி விட்டனர் என கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழகம் தமிழர் தாயகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட, தமிழ்ப் பண்பாட்டின் சின்னம் எனவும், ஏற்கனவே நிலங்களை இராணுவத்திடம் பறிகொடுத்துள்ள தமிழர்கள் பல்கலைக்கழகத்தையும் பறிகொடுக்கத் தயாரில்லை என்ற சிந்தனையிலிருந்தே இந்த சம்பவத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

மாத்தறையில் உள்ள ருஹுனு பல்கலைக்கழகத்தில் அல்லது களனி பல்கலைக்கழகத்தில் தமிழர்களின் பரத நாட்டியத்தை அல்லது தமிழ்ப் பண்பாட்டை பிரதிபலிக்கச் செய்வதற்கு அனுமதிப்பார்களா எனவும் தமிழ் தரப்பில் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இந்த வாத விவாதங்களின் சரி-பிழைகளுக்கு அப்பால், பிரச்சினையை கள



உண்மைகளின் பின்னணியில் புரிந்துகொள்ளல் அவசியம். இலங்கையிலுள்ள 15 பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண மற்றும் வந்தாரமுனை கிழக்குப் பல்கலைக்கழகம் இரண்டும் தமிழர்கள் செறிவாக வாழும் இடங்களில் அமையப் பெற்றுள்ளன. அதேவேளை, அவற்றின் கல்வி, நிர்வாகம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மொழியையும் வளர்ப்பதில் அவை மிகுந்த கரிசனை கொண்டுள்ளன. அதனால் அப்பல்கலைக்கழகங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் என்ற படிமத்தை உருவாக்கி வைத்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவர்களை அதிகம் கொண்டிருப்பதனாலும் ஒலுவிலில் அமைந்திருப்பதனாலும் அது சுமாராக ஒரு முஸ்லிம் பல்கலைக்கழகம் என்ற விம்பம் தென்னிலங்கை பல்கலைக்கழக சமூகங்களிடையே [illegible] பீடங்கள் இயங்கி வருவது அதன் முஸ்லிம் தன்மையை இன்னும் உறுதி செய்கின்றது.

பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்கள் எல்லா இனங்களும் சமமான அளவுக்கு செல்வாக்குச் செலுத்தும் பல்கலைக்கழகங்களாக, இன ரீதியான மோதல்கள் மிகக் குறைவாக இடம்பெறும் பல்கலைக்கழகங்களாக உள்ளதனால், அவை இரண்டும் தேசிய பல்கலைக்கழகங்கள் போல் பார்க்கப்படுகின்றன.

இது ஒரு பிழையான பார்வையாகும். இலங்கையிலுள்ள 15 அரச பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்களே என்பதில் எந்த ஐயமும் இல்லை. பாடசாலைகள் போன்று இலங்கையில் பல்கலைக்கழகங்கள் இன ரீதியாக உருவாக்கப்படவில்லை. இலங்கையில் வாழும் எல்லா இனங்களின் மாணவர்கள் நுழைவு அனுமதி பெற்றால் அவர்களது திறமைக்கு ஏற்ப எந்தப் பல்கலைக்கழகத்திலும் கற்கலாம். திறமையின் அடிப்படையில் மாணவர்களின் பல்கலைக்கழகங்களைத் தீர்மானிப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

அந்த வகையில் யாழ், கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும் கணிசமான சிங்கள மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்கள் என்பதுதான் இதற்கான தர்க்கமாகும்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட சமூகம் செறிவாக வாழும் பிராந்தியத்திலுள்ள பல்கலைக்கழகம் விரும்பியோ விரும்பாமலோ அக்குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரத் தளமாக செயல்படுவது தவிர்க்க முடியாதது. கணித ரீதியில் பெருந்தொகையானோரின் பண்பாட்டுக்கு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதும் இயல்பானதே.

இந்தக் கள உண்மையை சிங்கள மாணவர்கள் உணரத் தவறுகின்றனர் என்பதுதான் தமிழ்த் தரப்பிலுள்ள நடுநிலையான அறிவுஜீவிகளின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கின்றது. இதையும் தாண்டி, கண்டிய நடனம் அரங்கேறுவது சிங்கள கலாச்சார ஆதிக்கத்தினை கொண்டு வந்து விடும் என்று அஞ்சுவது ஒருவித தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடாகவும் இருக்க முடியும். கலாசாரங்களுக்கிடையில் கலந்துரையாடல்களும் புரிந்துணர்வும் இன்றியமையாதது.

பல்கலைக்கழகம் என்பது மூன்று பணிகளில் கவனம் குவிக்க வேண்டும். விரிவுரையாளர்-மாணவர் தொடர்பாடல் மூலம் கற்றல்-கற்பித்தலினூடாக அறிவு அங்கு பகிரப்பட வேண்டும். இரண்டாவது அறிவை உற்பத்தி செய்ய வேண்டும். ஆய்வுகளுக்கான அடித்தளங்களைக் கட்டுவதன் மூலமே அறிவு உருவாக்கப்பட வேண்டும். பகிரப்படும் அறிவும் உருவாக்கப்படும் அறிவும் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்குப் பயன்படும் வகையில் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# புத்திஜீவிகள் பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும்

யுத்தம் கொடியது, மோசமானது, குற்றம் மிக்கது, பாவமானது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஒரு மனிதனுடைய உயிரை அழிப்பது என்பது முழுமொத்த மனிதர்களினதும் உயிர்களை அழிப்பது போன்றதாகும். ஒரு மனிதனுடைய உயிரை பாதுகாப்பது முழு மனித சமூகத்தினதும் உயிரைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாகும்.

நான் ஒரு சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி அவர்கள் கூறிய கருத்தொன்றை பத்திரிகையில் வாசித்தேன். ஜனாதிபதி அவர்கள் பாப்பரசர்ரை சந்தித்தொரு சமயத்தில் அவரோடு உரையாடிய கருத்துக்களை பகிர்ந்திருந்தார்.

அதாவது, மனிதர்களை கொல்கின்ற யுத்தத்தினை நிறுத்துவதற்கு இன்று என்ன செய்ய வேண்டும் என பாப்பரசர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். ஜனாதிபதி அதற்கு பதிலளிக்காமல் அவரை பார்த்துக் கொண்டிருந்ததாகவும் பின்னர் பாப்பரசர், உலகில் ஆயுதம் உற்பத்தி செய்பவர்கள் யார்? தெரியுமா என்றும் கேட்டுள்ளார்.

அதன் பின்னால் இருப்பவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. ஆயுத உற்பத்தியாளர்களே என்றும் ஆயுதம் உற்பத்தி செய்பவர்களே சர்வதேச பயங்கரவாதத்தை விதைக்கிறார்கள் என்றும் அவர்களே யுத்ததை வழிநடாத்துகிறார்கள் என்றும் பாப்பரசர் கூறியதாக ஜனாதிபதி அவர்கள் பத்திரிகையில் தெரிவித்திருந்தார்.

எல்லோரும் சிந்திக்க வேண்டியதொரு விடயம் இது. மேலெழுந்த வாரியாக எமக்கு கிடைக்கின்ற செய்திகளை விட உள்ளாலிருக்கும் விடயங்களை அறிந்து கொள்ளும் விடயமாக இதனைப் பார்க்க வேண்டும். படிப்பினை பெற வேண்டும்.

ஈராக் யுத்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள். யுத்தம் நிலவிய நான்கு வருட காலப்பகுதியில் பிரித்தானியா நடந்து கொண்டிருந்த விதம் பற்றி சில்கொட் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவையும் பிரித்தனியாவிவையும் சேர்ந்த ஒப்பந்த வியாபாரிகள் கனிய எண்ணெய்யில் அதிகூடிய இலாபங்களை பெற்றார்கள் என்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

60 இற்கும் மேற்பட்ட பிரித்தானிய கூட்டுத்தாபனங்கள் ஈராக்கிற்குள் தங்களது வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றிருப்பதாகவும் சில்கொட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2.8 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான ஈராக் பெற்றிருக்க வேண்டிய வருமானங்கள் மேற்படி காலப்பகுதிக்குள் சூரையாடப்பட்டுள்ளது.

ஈராக் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்திய பாதிப்புக்களை சொல்லி முடிக்க இயலாது. பிரித்தானியாவுக்கு ஈராக்கை ஆக்கிரமிக்க பிரதான காரணியாக இருந்தது எண்ணெய் வளமாகும். பிரிட்டிஷ் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஈராக் யுத்த காலப்பகுயில் பெருமளவில் முதலீட்டியுள்ளதாக சில்கொட் அறிக்கை குறிப்பிடுகின்றன.

நாம் சிந்தனையோடு பணியாற்ற வேண்டும். உலக வரலாற்றில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகள் எமக்கு போதிக்கும் படிப்பினைகள் ஏராளம். அரசியல் ரீதியான கொள்கைகள் வகுக்கப்படுகின்ற இடங்களிலும் தீர்மானமிக்க முடிவுகள் எட்டப்படுகின்ற இடங்களிலும் நன்கு அறிவு படைத்த மக்களின் கலந்துகொள்ளல் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் எல்லோருக்கும் ஆமா சாமி போடுகின்ற குறுகிய எண்ணம் படைத்தவர்களை நாம் எந்தப் பதவிகளிலும் அமர்த்தக் கூடாது.

நாம் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் அரசியல் முடிவுகள் எட்டப்படுகின்ற இடங்களில் குறிப்பாக நிதி தொடர்பிலான பிரச்சினைகளின் போது, சட்டப்பிரச்சினைகளின் போது நன்றாக சிந்தித்து நாட்டின் நலனுக்காக வேண்டி முடிவுகளை எடுக்கின்ற பொருத்தமானவர்களையே நாம் அவ்விடங்களுக்கு அனுப்ப வேண்டும்.

இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நாட்டிலும் உலகிலும் எமக்குள்ள சவால்களை நோக்கும் பொழுது நாம் சிந்தனையோடு பணியாற்ற வேண்டும். எனவே எமது பொறுப்புகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது நாட்டிலும் உலகிலும் உள்ள சவால்கள் மிகவும் பாரதூரமானவையாகும். அவற்றை வெற்றிகொள்ள வேண்டும் என்றிருந்தால் நாம் சிந்தனையோடு பணியாற்ற வேண்டும். நன்கு சிந்தித்து தூர நோக்கோடு முடிவுகளை எடுப்பவர்களையே நாம் பிரதிநிதிகளாக தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்.

நாம் எமது பொறுப்புகளை சரியாகச் செய்யாமல் ஏனையவர்களுக்கு குறை கூறுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. இலங்கை வரலாற்றில் உதித்த டீ.பி. ஜாயா, டொக்டர் கலீல், மாக்கான் மாக்கார், ஏ.ஸி. எஸ் ஹமீட், ஐ.ஏ. காதர், எம்.எஸ் முஹம்மத் அலி போன்றவர்கள் நாட்டிற்காக வேண்டி அளப்பரிய சேவையாற்றியுள்ளார்கள்.

இலவசக் கல்வியை எடுத்துக்கொண்டால் அங்கு சி.டப்லியூ கண்ணங்கரவுடன் டீ.பீ. ஜாயாவும் இருக்கிறார். தொழிலாளர் சட்டங்கள் மாற்றப்பட்ட வரலாற்றை எடுத்து நோக்கும் பொழுதும் அவர்களுக்குரிய உரிமைகள் நிவாரணங்களை பெற்றுக்கொடுத்த ஒருவராக டீ.பீ. ஜாயா அவர்கள் இலங்கை வாழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்திருப்பதனை காணலாம்.

ஏ.ஸி.எஸ். ஹமீட் வெளிவிவகார அமைச்சராக இருந்த பொழுது ஆற்றிய சேவைகள் ஏராளம். பொதுவாக இந்நாட்டில் நிலவிய பிரதான பிரச்சினைகள் எல்லாவற்றிலும் மேற்படி தலைவர்களே அங்கம் வகித்திருந்தார்கள். அவர்கள் மக்களை நம்பினார்கள். மக்கள் அவர்களை நம்பினார்கள்.

அதனால் நாம் பலவீனமானவர்களாக இருக்க வேண்டியதில்லை. நல்லவர்களை தெரிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு சக்தியை கொடுக்க வேண்டும். வரலாற்றில் இடம்பெற்ற தவறுகளுக்கு முட்டாள்களின் சில பிழையான தீர்மானங்களே அடிப்படையாய் அமைந்துள்ளது.

வை.எம்.எம்.ஏ அமைப்பின் முன்னாள் தலைவரும், மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தின் செயலாளரும், பிரபல சமூக சேவையாளருமான அஷ்ரப் ஹூஸைன் தனது 72 ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை (16) காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் அன்று மாலை 7 மணியளவில் மாளிகாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச். முஹம்மதின் மைத்துனரும் ஆவார். கொழும்பு ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர், கொழும்பு லயன்ஸ் கழக வடக்குத் தலைவர், கொழும்பு மத்திய வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு அங்கத்தவர் என பல்வேறு அமைப்புகளிலும் இணைந்து சமூகப் பணியாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள், கல்விமான்கள், உலமாக்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

அஷ்ரப் ஹூஸைன் ஒரு தனி ஆளுமை கொண்ட மாமனிதராகவே வாழ்ந்தார். பெருமை, கர்வம், மமதை போன்ற எண்ணமின்றி அரசியலில் உட்புக வேண்டுமென்ற சிந்தனையின்றி பட்டம் பதவிகளை அடைந்துகொள்ள வேண்டுமென்ற நாட்டமின்றி இன, மத வேறுபாடின்றி மக்கள் பணி செய்த ஒருவரே அவர்.

கொண்டு செல்வதில் அக்குடும்பங்கள் கஷ்டப்படுவதை அறிந்து கொழும்பு ஜனாஸா நலன்புரிச் சங்கத்தை நிறுவி, அதன் மூலம் இலவச வாகன வசதி வாய்ப்பை ஏற்பாடு செய்தார். இதனால் மக்கள் வைத்தியசாலையிலிருந்தும் வீடுகளிலிருந்தும் மக்பறாவுக்கு ஜனாஸாக்களை எடுத்துச் செல்ல இலகுபடுத்தினார்.

அவர் வாழும் காலத்தை இன, மத பேதமின்றி மக்கள் வாழ்வுக்காகப் பயன்படுத்திய ஆளுமை கொண்ட மனிதர். கொழும்பு வடக்கு லயன்ஸ் கழகத்தின் தலைவராக, கொழும்பு தேசிய வைத்திய சாலை விபத்து சேவை நண்பர்கள் அமைப்பின் செயலாளராக, கொழும்பு மத்திய வைத்தியசாலை அபிவிருத்திக் குழு சிரேஷ்ட அங்கத்தவராக, இலங்கை விழிப்புலனற்றோர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினராக மற்றும் சர்வதேச வை.எம்.எம்.ஏ.யின் ஆயுட் காலத்



## சமூகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்த ஆளுமை

# மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன்

அவர் எம்மிடையே வாழும் போதும் ஆரவாரம் இன்றி அமைதியாக, பணிவாக இருந்து சமூக சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். அவர் தனக்காக எதையும் சேமித்து வைக்காமல் இறுதி மூச்சு வரை இஸ்லாமிய ஷரீஆ வழியில் பொருளாதாரத்தை பங்கிட்டவர். அவர் நோய் வாய்ப்படுவதற்கு முன் புனித மக்காவுக்குச் சென்று உம்றா கடமையை நிறைவேற்றிவிட்டு வந்தவர்.

இஸ்லாமிய அழைப்புப் பணியில் சிறு வயது முதல் மாளிகாவத்தையில் வாழ்ந்த மர்ஹூம் மௌலவி நிஸார் (குவ்வதி) யுடன் இணைந்து மக்கள் மத்தியில் இஸ்லாமிய வாழ்க்கை முறையை பரப்புவதற்கு உறுதுணையாக சேவையாற்றியவர். முதலில் அவருடைய சமூகப் பணி அதுவாகவே இருந்தது.

பொது வாழ்க்கையில் மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக தன்னுடைய பொருளாதாரத்திலிருந்தும், நண்பர்களின் உதவியுடனும் கொழும்பு வாழ் மக்களுக்கு மட்டுமன்றி, தேசிய ரீதியாகவும் தன்னலம் பாராது பணிபுரிந்தார். குறிப்பாக கிழக்கு மாகாணத்துடன் கூடிய தொடர்புடையவர்.

தலைவராக என சுமார் இருபதுக்கும் மேற்பட்ட அமைப்புக்களில் இருந்து சமூகம் சார்ந்த விவகாரங்களில் முன்னின்று பங்களிப்புச் செய்தவர் அவர். சிறந்த சமூக சேவையாளரும் மார்க்கப் பற்றுள்ளவருமான மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன் நிறையவே நற்பணி செய்திருக்கிறார். திஹாரிய அங்கவீனர் நிலையத்தின் முன்னோடி ஸ்தாபகராகவும் திகழ்கிறார். அதன் இன்றைய கம்பீரமான வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இவரின் அர்ப்பணிப்பும் காரணம் எனலாம்.

"உங்களில் மரணித்தவர் களின் நற்செயல்களை நினைவு கூருங்கள்" என இஸ்லாம் கூறுகின்றது. மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன் சமூகப் பணி, பொதுப்பணி புரிபவர்களில் வித்தியாசமானவர். எந்த இனம், எந்த மதம் என்று கூடப் பார்க்க மாட்டார். கூடுதலாக லயன்ஸ் கிளப் மற்றும் விழிப்புலனற்றோர் சங்கம், பொது நூலகம், வைத்தியசாலை, சைனா நட்புறவுச் சங்கம், ரி.பி. ஜாயா மன்றம் போன்ற பல்வேறு அமைப்புக்களின் மூலம் சிங்கள-தமிழ்-கிறிஸ்தவ மக்களுக்கு பல்வேறு உதவிகளை அள்ளி வழங்கிய கொடையாளி.


தன்மையுடன் ஒட்டி உறவாடி புரிந்துணர்வோடு வாழும் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்காக குரல் கொடுத்த ஒரு மனிதர். முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத சூழல் தோற்றம் பெற்றபோது அதனை எதிர்த்தும் குரல் கொடுத்தவர் அவர்.

அவர் இன்று மறைந்து விட்டார். ஆனால் அவரின் பணி தொடர வேண்டும். நோன்பு காலங்களில் மக்களின் நலன் கருதி வீதி மின்விளக்குகள் சீராக ஒளிரவும், மின் சாரம், தண்ணீர் என்பன தடையின்றிக் கிடைக்கவும், பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து கோரிக்கை விடுத்தவர். அவரின் பணிகளில் சர்வதேச வை.எம்.எம்.ஏ. மூலம் நாடளாவிய ரீதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை மாணவர்களுக்கு உதவியவர். கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற பிரதேசங்களுக்கு நேரடியாக சென்று பல்வேறு உதவிகளை வழங்கியவர்.

பாதுகாப்பு படையினர் வசமிருந்த மஸ்ஜித்களை புத்திசாதுரியமாக மீட்டு மக்கள் பாவனைக்கு ஒப்படைத்தவர். அவர் நரைத்த தாடி, அழகான புன்முறுவல் பூத்த வதனம் கொண்டவர். தஹஜ்ஜத் தொழுகைக்காக உரிய நேரத்திற்கு எழும்பும் பழக்கமுடையவர். குர்ஆன் ஓதுவதில் அதிகமான நேரத்தை செலவிடுவார். ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலுமுள்ள ஹதீஸ் கிரந்தங்களை வாசிப்பதில் அதீத ஆர்வம் மிக்கவர். இவ்வாறான சிறந்த நற்பண்புகளைத் தன்னுள் வளர்த்துக் கொண்ட ஒருவரின் வாழ்க்கையில் பிரகாசித்த நற்செயல்களை நாமும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன் ஊடகத்துறையை மிகவும் நேசித்தவர். ஊடகத்தின் மூலம் சமுதாயத்துக்காக நன்மை பயக்க வைத்தவர். அதிகமான ஊடக நண்பர்களைக் கொண்டவர். பாராட்டையும், புகழையும் தேடிச் செல்லாதவர். அவரைத் தேடி தானாகவே பாராட்டும் புகழும் குவிந்தன. அமெரிக்க நிறுவனம் ஒன்று கூட அவரின் சேவையைப் பாராட்டி கௌரவித்தது.

அன்னாரின் பாவங்களை வல்லோன் அல்லாஹ் மன்னித்து ஜன்னதுல் பிர்தவ்ஸ் சுவனத்தை வழங்க பிரார்த்திப்போமாக. அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு அல்லாஹ் பொறுமையைக் கொடுப்பானாக.



இவர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் மாணவனாக கல்வி கற்கும் காலம் முதலே பொதுப் பணியில் கவரப்பட்டு ஏழைகளின் துயர் துடைக்கவும், வறுமையில் வாழ்பவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி புரிவதிலும் முன்னின்று உழைத்தவர். இவரின் தகப்பனார் மர்ஹூம் முஹம்மத் ஹூஸைன் பொருளாதாரத்தில் செல்வாக்கு மிக்கவர். இதனால்தான் இவரும் பள்ளிப் படிப்பை பாடசாலை மட்ட உயர் கல்வியுடன் நிறுத்திக் கொண்டு வர்த்தகராக மாறினார். கொழும்பு பழைய சோனகத் தெருவில் 'பாச்சா & கம்பனி' என்ற பெயரில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் முழு நேரமும் பொதுப் பணியில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது.

கொழும்பிலும் ஏனைய அண்டிய [illegible] மரணித்த ஏழைகளின் ஜனாஸாக்களைக்

அவர் மரணித்தாலும் அவர் நாமம் மறைய மாட்டாது. அவருடைய நண்பர்களான என்.எம்.அமீன், என்.எம். றஸீன் மாஸ்டர், அஷ்ரப் அஸீஸ், எம்.ஏ.எம். நிலாம், எப்.எம். பைரூஸ், எம்.இஸட் அஹமட் முனவ்வர், சட்டத்தரணி இம்தியாஸ், பஸ்யாலை நிலாம், மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபா, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஊடகவியலாளர் சுஐப் காஸிம் இன்னும் பலர் இதற்கு சான்றாகும். மர்ஹூம் அஷ்ரப் ஹூஸைன் மிக முக்கியமாக சமுதாயத்தில் நினைவு கூரப்பட வேண்டியவராவார். சமூகத்துக்காக தன்னுடைய குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். ஒரு காரியாலயம் இன்றி தன்னுடைய வீட்டையே காரியாலயமாகப் பயன்படுத்தி தன்னுடைய சொந்தப் பொருளாதாரத்தில் செலவு செய்து பணி செய்தவர் அவர்.

[illegible]ல் நல்லாட்சி ஒன்று உருவாக வேண்டுமென கங்கணம் கட்டிக் கொண்டு [illegible]ல சமய சமூகங்களும் வெளிப்படைத்

மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபா
தேசிய அமைப்பாளர்
சர்வதேச வை.எம்.எம்.ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி அப்துல் கலாம் அவர்கள் இராமேஸ்வரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். பௌதீக விஞ்ஞானத்திலும் விண்வெளித்துறையிலும் (Aerospace Engineering) தனது மேற்படிப்பை தொடர்ந்த அவர், இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) என்பவற்றில் நீண்ட காலம் விஞ்ஞானியாக பணியாற்றியுள்ளார்.

இந்தியாவின் 11வது ஜனாதிபதியாக 2002– 2007 வரை பதவி வகித்துள்ளார். அப்துல் கலாம் தனது சேவைகளுக்காக பல உயரிய விருதுகளை பெற்றுள்ளார். 7 கௌரவ டாக்டர் பட்டங்களை பெற்றுள்ள அவர் இந்தியாவின் உயர் விருதான பாரத ரத்னா விருதையும் பெற்றுள்ளார். 2015 ஜீலை 27ம் திகதி தனது 83வது வயதில் மாரடைப்பினால் காலமானார். அப்துல் கலாம் அவர்கள் கடந்த வருடம் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது MTV தொலைக்காட்சி அவருடன் ஒரு நேர்காணலை மேற்கொண்டது. அதன் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

*தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி*

# ‘என்னிடமிருந்து என்ன வேண்டும்’ இதுவே எமக்குத் தேவையான பண்பாகும்

**‘‘ஒரு பிரச்சினை வந்தால் அதற்கு உங்களை கையாள்வதற்கு இடமளிக்கக் கூடாது. உங்களால் பிரச்சினை கையாளப்பட வேண்டும். அவ்வாறு செய்து பிரச்சினையை தோற்கடிக்க வேண்டும். இது தான் எனது வாழ்வின் செயல் விளைவுத் தொடர்’’ – கலாநிதி அப்துல் கலாம்**

- **ராமமேஸ்வரத்தில் இருந்த இளைஞன் இன்று இந்நிலைமைக்கு வருவதற்கு தூண்டு கோலாய் அமைந்த காரணிகள் என்ன?**

நீங்கள் என்னிடம் ராமேஸ்வரம் பற்றி கேட்டீர்கள். 1941 காலப்பகுதியில் இந்தியா பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்தது. அக்காலப்பகுதியில் இலங்கை 'சிலோன்' என அழைக்கப்பட்டது. நான் சிறியதொரு கொட்டில் போன்ற பாலர் பாடசாலையில் கற்று வந்தேன். பிரித்தானியாவுக்குச் சொந்தமான இந்தியாவில் ஐந்தாம் வகுப்பில் 10 வயது மாணவனாக இருந்தேன். மிகவும் திறமையானதொரு ஆசிரியர் இருந்தார். எனக்கு பல திறமையான ஆசிரியர்கள் கற்பித்தார்கள்.

ஆனாலும் இவ்வாசிரியர் தான் எனக்கு வழிகாட்டியாக இருந்தார். அவருடைய பெயர் சிவசுப்ரமணியம் ஐயர். 1941ல் நான் ஐந்தாம் தரத்தில் கற்றுக்கொண்டிருக்கும் போது அவர் எமது வகுப்புக்கு வந்தார். அவர் பரந்த அறிவு ஞானம் மிக்கவர். எமது விஞ்ஞான ஆசிரியரான அவர் தமிழ் கலாசாரங்களை நல்ல முறையில் பின்பற்றுகின்றதொரு முனிவர். அவர் ஒரு காந்தியவாதி என்பதால் பரந்துபட்ட நல்ல மனித பண்புகளை கொண்டதொரு கதாபாத்திரம். அவரது மனிதப் பண்பை அன்று அவருக்கூடாக நான் கண்டேன். அவ்வாசிரியர் 10 வயது சிறுவனான என்னுடைய வீரனானார். அறிவைப் போன்றே அவர், வாழ்வில் தூய்மையான மனிதராக இருந்தார்.

- **அவ்வாசிரியரிடமிருந்து நீங்கள் தைரியம் பெற்றீர்கள். ஆனால் ஏனைய மாணவர்களை விடவும் ஒரு திறமைசாலியாக அடையாளம் காணும் அளவுக்கு உங்களிடம் ஏதாவது வித்தியாசமான திறமைகள் இருந்திருக்கலாம். நான் அதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளேன்..**

வாழ்க்கையில் ஒரு கனவு இருக்க வேண்டுமென சிவசுப்ரமணியம் ஐயர் எனக்குக் கற்பித்தார். அது சமநிலை பெற வேண்டும் என்றால் கனவு மாத்திரம் இருந்தால் போதாது. அறிவையும் உறிஞ்சிக் கொள் என்றார். அதன் பிறகு நான் பேராசிரியர் பிரேம் பிரகாஷுடன் பணியாற்றினேன். கஸ்டத்துடன் பணியாற்றும் முறை பற்றி அவர் எனக்கு சொல்லித் தந்தார்.

ஏனையவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் காலங்களில் அறிவைப் பெறுவது எப்படி?, அவ்வறிவை எவ்வகையில் பயன்படுத்துவது என்பது பற்றி அவரிடம் அறிந்து கொண்டேன். அதன் பின்னர் எனக்கு இன்னுமொரு திறமைசாலி கிடைத்தார். அவர் பிரதீஷ் தாவன். ஒரு பிரச்சினை வரும் பொழுது அதற்கு அடிபட்டு விடாதே என்றும், பிரச்சினையை தோற்கடித்து அதை வெற்றிகொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இவ்வகையில் பார்க்கும் பொழுது எனது வாழ்க்கைக்கு நான்கு பிரிவுகள் தாக்கம் செலுத்தின. ஒன்று, உயர்ந்ததொரு இலக்கை வைத்திருக்க வேண்டும் என எனது ஆசிரியர் கூறினார். அவ்விலக்கினை வெற்றிகொள்ள அறிவைப் பெற வேண்டும். அதுவும் போதாது. அதற்குப் பிறகு வேலை, வேலை, வேலை. வேலை செய்யும் போது பிரச்சினைகள் மேலெழும். எந்தவொரு நபருக்கும் அவ்வாறான அனுபவம் கிடைக்கிறது.

ஒரு பிரச்சினை வந்தால் அதற்கு உங்களை கையாள்வதற்கு இடமளிக்கக் கூடாது. உங்களால் பிரச்சினை கையாளப்பட வேண்டும். அவ்வாறு செய்து பிரச்சினையை தோற்கடிக்க வேண்டும். இதுதான் எனது வாழ்வின் செயல் விளைவுத் தொடர். இலக்கு, அறிவைத் திரட்டல், கஷ்டத்துடன் வேலை செய்தல் மற்றும் பிரச்சினைக்கு பயமில்லாமல் முகம் கொடுத்து பிரச்சினையை தோல்வியடையச் செய்தல் என்பனவே அந்நான்கு அம்சங்களாகும்.

- **கலாநிதி அப்துல் கலாம் அவர்களே, இந்நேரத்தில் எமது நாட்டிலுள்ள மாணவர்கள் உங்களுடைய உரையாடலை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஏதாவதொரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதன் மூலம் உயர்ந்தபட்ச பலன்களை பெறும் முறை பற்றி அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க உங்களால் முடியும் அல்லவா?**

கனிய எண்ணெய் பாவனையை எவ்வாறு தவிர்ப்பது என்பது பற்றி நான் ஏலவே கருத்தரங்குகளில் குறிப்பிட்டுள்ளேன். சகல மோட்டார் வண்டிகளிலிருந்தும் அதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற பெற்றோல் அல்லது டீசலினால் ஒரு லீற்றருக்கு 2 கிலோ கிராம் காபன் டயோக்ஸைட் உற்பத்தியாகிறது. உலகம் முழுவதிலுமாக ஒரு வருடத்திற்கு 30 கிகா டொன் காபன் டயோக்ஸைட் உற்பத்தியாகிறது.

அதனால் எமது புவி மாசடைகிறது. அதனாலேயே நான் மாற்று எரிபொருள் பாவனையை அதாவது, எரிபொருள் சுதந்திரத்தை ஊக்கப்படுத்தி வருகிறேன். கனிய எண்ணெய் பாவனையை நிறுத்தி விட்டு அதற்குப் பகரமாக சூரிய ஒளிக் கற்றை, காற்று சக்தி, அணுசக்தி போன்ற உயிர் மின் சக்திகளை பயன்படுத்த வேண்டும்.

- **இலங்கை ஒரு நாடென்ற வகையில் புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றி எவ்வகையில் சிந்திக்க வேண்டும்?**

புதிய கண்டுபிடிப்புக்கள் எங்கும் நிகழலாம். பாடசாலை விஞ்ஞான கூடத்தில், தொழிற்சாலையொன்றில், கடற்றொழில் புரியும் இடங்களில் அல்லது பயிர் நிலங்களில் அது நிகழலாம். எவருக்கும் புதிதாக ஒன்றை கண்டுபிடிக்க முடியும். அதை நாட்டிற்காக வெற்றி கொள்ள வேண்டும்.

இந்தியாவில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான தேசிய நிறுவனம் ஒன்று உள்ளது. இதற்கு வரவு-செலவு திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்நிறுவனம் ஒவ்வொரு வருடமும் புதிய கண்டுபிடிப்பாளர்களை தேடிச் செல்லும். கண்டுபிடிப்பாளர்கள் கிராமப் பகுதியை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். நகரப் புறத்தை சார்ந்தவர்கள் மிக மிக குறைவு. அவர்களை தேடிப் பிடித்து, 200-300 பேர்களை அடையாளங் கண்டு, அதிலிருந்து இறுதி 20 பேரை தெரிவுசெய்து விருதுகளை வழங்குவார்கள். நானும் அந்நிறுவனத்தில் அங்கம் வகிக்கிறேன்.

உங்களுக்குத் தெரியும் இலங்கையைச் சூழ கடல், நீர் நிலைகள் உள்ளது. சூரிய ஒளி மிக அழகாக உதிக்கிறது. காற்று வீசுகிறது. புதிய கண்டுபிடிப்புக்களுக்கு பல வழிகள் திறந்து விடப்பட்டுள்ளன. அதனால் கற்றவர்களை உள்ளடக்கிய நிறுவனங்கள் மாத்திரமல்ல, நாட்டிலுள்ள தலைமைகளும் புதிய கண்டுபிடிப்புக்களின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ள வேண்டும்.

இங்கு ஒரு மின்குமிழ் ஒளிர்வது உங்களுக்கு விளங்குகிறது. மின்குமிழை கண்டுபிடித்தவர் தோமஸ் அல்வா எடிசன். அவர் சிறு பராயத்தில் விளக்கு வெளிச்சத்தில் கற்ற குழந்தை. நியூ யோர்க் நகரை ஒளியூட்ட மின்விளக்குகளை கண்டுபிடிப்பதாக அவர் கூறினார். அதனால் முழு உலகத்திற்கும் வெளிச்சம் கிடைத்தது.

இந்தியாவில் சத்சிரிய ராமன், சிறீனிவாஸ் ராமானுஜன் போன்ற கணிதவியலாளர்கள் உள்ளார்கள். அது போன்ற புதிய கண்டுபிடிப்பாளர்கள் எல்லா நாடுகளிலும் உள்ளார்கள். அவர்களைத் தேடி தைரியமூட்டி, உற்சாகப்படுத்தி நிதியங்களிலிருந்து பண உதவிகளை வழங்கி அவ்வறிவை நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

- **அரசியல்வாதிகளிடம் மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் பற்றிய கருத்தொன்று உங்களிடம் உள்ளது. அது பற்றி உங்களிடம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றோம்.**

நான் அரசியலை இரண்டு வகையாக நோக்குகிறேன். ஒன்று அரசியலுக்குரிய அரசியல். மற்றையது அபிவிருத்திக்குரிய அரசியல். அரசியலுக்கான அரசியல் என்றால் என்ன? அபிவிருத்திக்குரிய அரசியல் என்றால் என்ன? அரசியலுக்கான அரசியல் என்பது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்வதாகும்.

அரசியலுக்கான அரசியல் என்பது அரசியல் கட்சிகளுக்கிடையில் சிந்தனைகளை மேலெழச் செய்து தங்களுள் கூடுதலானோரை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் போட்டியொன்றாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடுதலாகவே அரசியலுக்கான அரசியலையே செய்கிறார்கள். அவருக்கு தனது அரசியல் கட்சியை பிரபல்யப்படுத்துவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும் என்பது நியாயமானது. அரசியல்வாதி தெரிவு செய்யப்பட்டாலோ அல்லது தெரிவுசெய்யப்படவில்லை என்றாலோ அவருக்கு தனது அரசியல் கட்சியை பிரபல்யப்படுத்த வேண்டி வரும். அதையே அரசியலுக்கான அரசியல் என்று சொன்னேன்.

அபிவிருத்தி ரீதியிலான அரசியல் என்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வாக்காளர்களுக்காக வேண்டி முன்நிற்பதாகும். எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் நான் இன்னின்ன துறைகளையே அபிவிருத்தி செய்யவுள்ளேன் என்பதாக அவர் வாக்குறுதியளிப்பார். முதலில் நான் நீர் நிலைகள் எல்லாவற்றையும் முறையாக ஒழுங்குபடுத்துவேன். இன்றுள்ள மரங்களை பல ஆயிரக்கணக்கில் அதிகரிப்பேன் என்பதாகக் கூறுவார். அப்போது சுற்றாடல் அழகாக இருக்கும்.

இன்றுள்ள சிறியளவிலான தொழிற் துறைகளுக்கு நான் புதிய தொழில்நுட்பங்களை வழங்குவேன். இவ்வாறான முறையில் அவர் தனது தேர்தல் தொகுதியில் தான் செய்யவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி சொல்வார். அதுவே அபிவருத்தி ரீதியிலான அரசியலாகும்.

நான் பார்ப்பதற்கு விருப்பமான உலகிலுள்ள அரசியல்வாதிகள் 70 வீதம் அபிவிருத்தி ரீதியான அரசியலைச் செய்து 30 வீதம் அரசியலுக்கான அரசியலை செய்பவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் இரண்டில் ஒன்றையே செய்கிறார்கள். இது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மாத்திரம் உரித்துடைய பொதுவான நியதியொன்றல்ல. ஏனைய உலக நாடுகளிலுள்ள அரசியல்வாதிகளும் இவ்வாறுதான். அவர்கள் 70 வீதம் அரசியலுக்கான அரசியலை செய்துவிட்டு 30 வீதம் மாத்திரமே அரசியலுக்குரிய அரசியலை செய்கிறார்கள்.

(பக்.12)



## எழுவாய், மயமிலை

அபூ ஷாமில்

## ரமழானின் பயிற்சி

ரமழான் பிரிந்து சென்றுவிட்டது. ஆனாலும் நோன்பின் வாடை இன்னும் மக்களை விட்டுப் பிரியவில்லை. ரமழானில் பெற்ற பயிற்சியைத் தொடருவோம் என்பது இந்த மாதத்தில் குத்பாக்களின் தலைப்பாகியிருக்கிறது.

உண்மையில் ரமழான் ஒவ்வொரு தனிமனிதனையும் மாற்றி விட்டுச் சென்ற விதம் பற்றி பலரும் வியந்து போற்றுகிறார்கள். பரவலாக இருக்கின்ற காஸ்ட்ரிக், சீனி வியாதிக்காரர்களில் இது ஏற்படுத்திய மாற்றத்திலிருந்து மனிதனை மீண்டும் இறைவனுடன் பிணைத்துவிடுகின்ற ஆன்மீக மாற்றம் வரை ரமழான் தந்த பயிற்சி தொடரப்பட வேண்டும் என்பதுதான் பலரும் இன்று பேசும் தலைப்பு.

ரமழானில் நோன்பிருத்தல் தனித்தனியாக ஒவ்வொருவர் மீதும் கடமையான விடயம் என்றிருந்த போதிலும் இதை யாரும் தனித்து நிறைவேற்ற முடியாது. ஒரே சமூகமாக நின்று ஒரே நேரத்தில் நோன்பு நோற்று, ஒரே நேரத்தில் நோன்பு துறந்து, சமூகமாக இணைந்து ஒரே மாதத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய கடமை தான் ரமழானின் நோன்பு. அந்த வகையில் தனிமனிதனைப் பயிற்றுவிப்பது போலவே, தனிமனிதன் வாழ வேண்டிய சமூகத்தையும் ரமழான் பயிற்றுவிக்கிறது.

சமூகம் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் சமூகப் பயிற்றுவிப்பொன்றை இந்த ரமழான் நமக்குள் ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறது. பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் ஒரே நாளில் நோன்பை நோற்கவும், பெருநாள் கொண்டாடவும் சமூகம் ஒற்றுமைப்பட்டது. இது தொடர்பில் ஒரே தலைமையை ஏற்றுச் செயற்படுவதற்கு சமூகம் தன்னை தயார்படுத்திக் கொண்டது. முன்னைய காலங்களில் போன்று இபாதத்துகளில் சண்டை பிடித்துக் கொள்ளாமல் சமூகம் ஒரு முதிர்ச்சி நிலையை இம்முறை காட்டியது. கொள்கை வேறுபாடுகள் தொடர்பான சச்சரவுகள் இனித் தலையெடுக்காது என்பதற்கான சுபசோபனத்தை இம்முறை ரமழான் நடைமுறைப்படுத்திக் காட்டியது.

பல்வேறு துறைகளிலும் சமூக சேவையாற்றிக் கொண்டிருக்கும் சமூக நிறுவனங்கள் பல இடங்களிலும் இப்தார் நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்தன. வீட்டில் குடும்பத்தினருடன் இப்தார் செய்வதற்கு நாள் ஒதுக்க முடியாத அளவுக்கு பொது வேலைகளில் இருப்பவர்கள் பொது இப்தார்களில் முடங்கி இருந்தனர். நாட்டின் ஏனைய மக்களையும் அழைத்துச் செய்யப்பட்ட இப்தார்கள் அதிகமாக நிகழ்ந்தன. அரச அலுவலகங்களிலும், தனியார் வேலைத் தளங்களிலும் இப்தார் களைகட்டியிருந்ததை காண முடியுமாக இருந்தது. இரவு நேரங்களில் களியாட்டம் வேண்டாம், அடுத்தவர்களை தொந்தரவு செய்யும் அளவுக்கு ரமழானின் இரவு நேரங்களை ஆக்கிக் கொள்ள வேண்டாம் என்ற அறைகூவல் இனித் தேவையில்லை என்று சொல்லும் அளவுக்கு சமூகம் பண்பட்டிருந்தது.

இந்த வகையில், விட்டுக் கொடுத்தல், இணங்கிப் போதல், கலந்து வாழ்தல், கூட்டாக இயங்குதல்,புரிந்துணர்வுடன் செயற்படுதல், சக மனிதர்களின் உணர்வுகளை மதித்தல் போன்ற பல பயிற்சிகளை இம்முறைய ரமழான் இலங்கை முஸ்லிம்களுக்கு கொடுத்து விட்டுச் சென்றுள்ளது. ஏனைய 11 மாதங்களிலும் செயற்படுவதற்கான பயிற்சியை ரமழான் தருகிறது என்ற வகையில் இந்தப் பயிற்சிகளை அடுத்து வரும் மாதங்களில் சமூகம் தொடர வேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனும் பெற்ற பயிற்சிகளை ஞாபகப்படுத்துவது போலவே சமூகம் பெற்ற இந்தப் பயிற்சிகளையும் தொடர்ந்து ஞாபகப்படுத்தி, சமூக செயற்பாட்டை தூண்ட வேண்டும். மிம்பர்களும் பிரசங்க மேடைகளும் தொடர்ந்தும் இந்த விடயத்தில் கரிசனை செலுத்தி செயற்படுமானால் இந்தப் பயிற்சிகளை சமூகத்தின் பண்பாக மாற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்காது.

எல்லா சமூகங்களும் சீர்குலைந்து போயுள்ள நிலையில் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டுக்கு நல்ல முன்மாதிரிகளை கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. எங்களைப் பற்றித் தூவப்படுகின்ற விஷமக் கருத்துக்களுக்கு நாங்கள் நடைமுறை ரீதியான பதிலை வழங்க வேண்டியிருக்கிறது.

ரமழானில் சமூகம் பெற்றுக் கொண்ட இந்தப் பயிற்சியை சமூகத்தின் எல்லாத் தரப்புகளும் இணைந்து நடைமுறைப்படுத்த முடியுமானால், இலங்கையில் முஸ்லிம் சமூகம் கண்ணியமான சமூகமாக வாழும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியின் இராணுவப் புரட்சிக்கு ஆதரவாகவே பிபிசி செயற்பட்டது



ஜூலை 15 இல் துருக்கியில் இராணுவம் உத்தேசித்த சதிப் புரட்சிக்கு ஆதரவாகவே பிபிசி நிறுவனம் செய்திகளை வெளியிட்டது என துருக்கியின் பாதுகாப்புத் துறை அமைச்சர் பிக்ரி ஐஸிக் கடும் விமர்சனம் வெளியிட்டுள்ளார். பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சரோடு தொலைபேசியில் உரையாடிய போதே அவர் இந்த விமர்சனத்தைத் தெரிவித்தார்.

பிபிசியின் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகவும், துருக்கி மக்களையும் சர்வதேச சமூகத்தையும் பிழையாக வழி நடாத்துவதாகவும் இருந்தது. துருக்கி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டதாக பிபிசி அறிவித்தது. இன்னொரு சமயம் தற்போது துருக்கி யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளதென்பதை ஊகிக்க முடியாமல் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டது.


ஜூலை 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் துருக்கி தொடர்பாக பிபிசி வெளியிட்ட செய்திகள் இராணுவப் புரட்சியை ஆதரிக்கும் தோரணையிலேயே அமைந்திருந்தது. ஜனநாயக விழுமியங்களைப் பற்றிப் பேசும் பிரிட்டனின் முன்னணி ஊடகமொன்று இவ்வாறு நடந்துகொண்டமை தனக்குக் கவலையளிப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் போலனுடனான உரையாடலின் போது பிக்ரி ஐஸிக் தெரிவித்தார்.

பிபிசி மட்டுமன்றி, CNN மற்றும் இதர செய்தி நிறுவனங்களும் இராணுவப் புரட்சிக்கு ஆதரவாகவே செய்திகளை வெளியிட்டது.

# சர்வதேசப் பார்வை

# எகிப்திய இராணுவ சதிப் புரட்சியின் 3 ஆண்டு நிறைவு

## மனித உரிமைகள் விவகாரம் குறித்து எச்சரிக்கும் Amnesty



2013 ஜூலையில் எகிப்தில் இராணுவம் மேற்கொண்ட சதிப் புரட்சியின் மூலம் ஜனாதிபதி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதோடு, அவர் சார்ந்த இயக்க உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர்.

ஜனநாயக ஆட்சியைக் கோரி அமைதி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தின் துப்பாக்கிகள் திரும்பியதனால் சுமார் 500 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

எகிப்தின் இராணுவ ஆட்சி மக்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனையே தொடர்ந்தும் அந்நாட்டில் நடைபெறும் மக்களின் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு ஊர்வலங்களும் காட்டுகின்றன. இராணுவத்தின் ஜூலை புரட்சியை நினைவுகூர்ந்த எகிப்திய மக்கள் மீளவும் இராணுவ சர்வதிகாரத்திற்கு எதிரான ஜனவரி புரட்சியொன்று உருவாகும் என எச்சரித்துள்ளனர்.

இராணுவம் பொதுமக்கள் மீது சுட்டதில் 53 பெண்கள் உள்ளிட்டு, 5 குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இராணுவ சதிப் புரட்சிக்கு ஆதரவளித்த அமெரிக்கா, இஸ்ரேல், மற்றும் அறபு நாடுகள் எகிப்தின் தற்போதைய மனித உரிமை நெருக்கடிகளுக்கு தீர்வு சொல்ல வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

2011 ஜனவரியில் ஏற்பட்ட மக்கள் புரட்சியை அடுத்து கலாநிதி முர்ஸி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இஸ்லாமியவாதிகள் பாராளுமன்றத்தைக் கைப்பற்றினர். எனினும், ஒரு வருடத்தின்பின்னர் அதிகாரம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டதோடு, அந்நாட்டில் சர்வதிகாரம் கட்டவிழ்க்கப்பட்டது.

எகிப்தின் சிறைச்சாலைகளில் இடம்பெறும் பல்வேறுபட்ட சித்திரவதைகள் மற்றும் கொலைகள் குறித்து தற்போது சர்வதேச மன்னிப்புச் சபை தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.



# தன் கையால் தனது வீட்டை உடைத்த பலஸ்தீனர்

கிழக்கு ஜெரூசலத்திலுள்ள சில்வான் குடியிருப்புக்கு சமீபமாகவுள்ள வாதி அல் ஹிலாவிலுள்ள பலஸ்தீனர் ஒருவர் தனது வீட்டின் ஒரு பகுதியை தனது கையால் உடைப்பதற்கு வற்புறுத்தப்பட்டுள்ளார். இஸ்ரேலிய இராணுவம் அவ்வாறு உடைக்காவிட்டால் புல்டோஸர் மூலம் முழு வீடும் நொறுக்கப்படும் என அச்சுறுத்தியதை அடுத்தே இவ்வாறு தான் நடந்துகொண்டதாக அப்துல் நஸீத் என்ற ஜெரூசலம் நகரவாசி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய புல்டோசர் இதனை உடைத்தால் மீளவும் வீட்டைக் கட்டுவதற்கு 17,000 அமெரிக்க டொலர்கள் எனக்குத் தேவைப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இலத்திரனியல் ஊடகங்களைக் கையாள்வது குறித்த புதிய ஊடகச் சட்டம்

இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பான புதிய சட்டமொன்றை குவைத் தகவல் துறை அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது. இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குபடுத்தவதற்கே இப்புதிய சட்டம் என அந்நாட்டின் ஊடகத் துறை அமைச்சு அறிவிக்கின்றது.

இலத்திரனியல் வெளியீடுகள், இணையங்கள், இலத்திரனியல் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் அனைத்து இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறாமல் இவற்றைக் கையாள முடியாது என அரசு அறிவித்துள்ளது. அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தகுதி விதிகள் அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளது.

# மக்கள் நாடினால் மீளவும் தூக்குத் தண்டனையை கொண்டு வருவோம்



துருக்கியின் உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பதை வெளிநாடுகள் தவிர்ந்துகொள்ள வேண்டும். பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் துருக்கி தொடர்பாக சமீபத்தில் வெளியிட்ட கருத்தொன்றை ஆட்சேபிக்கும்போதே துருக்கி ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகான் இவ்வாறு தெரிவித்தார். பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் தனது வேலையைக் கவனிக்கட்டும் எனவும் அவர் எச்சரித்தார்.

இராணுவ சதிப் புரட்சியில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அர்துகான் வெளியிட்ட கருத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற வேண்டுமாயின் துருக்கி அந்த யோசனையைக் கைவிட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்துவதன் மூலம் மக்கள் மரண தண்டனைக்கு ஆதரவளித்தால் மீளவும் அதனை நடைமுறைப் படுத்த அரசாங்கம் தயாராக உள்ளதென்று அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

# மேற்குக்கரை, காஸா உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது



மேற்குக்கரையிலும் காஸாவிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து வருவதாக மேற்குக்கரையின் ஹமாஸ் தலைவர் ஹுஸைன் அபூ குவைக் தெரிவித்துள்ளார். பலஸ்தீன் அரச நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஈடுபட வேண்டிய தேவை உள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை அரசியல் மயப்படுத்த ஹமாஸ் விரும்பவில்லை. அடுத்த கட்ட பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பப் படியாக இத்தேர்தல் உள்ளதனால் ஹமாஸ் இயக்கம் தேர்தலில் நிற்பதற்கு உறுதி பூண்டுள்ளது.

## எகிப்தில் தனியார் கம்பனிகளிடம் இலஞ்சம் வாங்கும் அரசாங்கம்




எகிப்தில் இயங்கும் தனியார் கம்பனிகளிடமிருந்து அரசாங்கம் லஞ்சம் பெற்று வருவதாக சர்வதேச அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. 17 வீதமான கம்பனிகளிடமிருந்து இவ்வாறு இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாக அக்கம்பனிகள் தெரிவித்துள்ளன. அவற்றுள் வெளிநாட்டுக் கம்பனிகளும் உள்ளடங்குவதாக அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

இராணுவ சதிப் புரட்சிக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி வரும் எகிப்திய அரசாங்கம் நாட்டிலுள்ள அனைத்து நிதி நிறுவனங்களிடமிருந்து இவ்வாறு சட்டவிரோத லஞ்சம் வாங்கு[illegible]

# ஜோர்தானில் அதிகரிக்கும் வேலையற்றோர் எண்ணிக்கை




ஜோர்தானில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு மத்தியிலான வேலையற்றோர் வீதம் 18.6%மாக உயர்ந்துள்ளது. 25 ஆம் திகதி அந்நாட்டின் புள்ளி விபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விபரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜோர்தானின் பல்வேறு பகுதிகளில் 13,000 குடும்பங்களை அடிப்படையைக் கொண்டு மேற்கொண்ட ஆய்விலிருந்து இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இரு மாதங்களாக தொழிற்துறையைத் தேடுவோர் பற்றியே இந்த ஆய்வு நடந்தது. ஆண்களுக்கு மத்தியில் 12.9 வீதம், பெண்களுக்கு மத்தியில் 22.8 வீதமமும் வேலையில்லாப் பிரச்சினை நிலவுகின்றது.

ஜோர்தான் பொருளாதாரம் வேகமாக சரிந்து வருவதை அடுத்து அந்நாட்டின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் துருக்கியில் எதிர்பாராத விதமாய் நிகழ்ந்த இராணுவ சதிப் புரட்சியை அந்நாட்டு அரசாங்கமும் மக்களும் வெற்றிகரமாக முறியடித்தனர். துருக்கி நவீன வரலாற்றில் பல்வேறு இராணுவ சதிப் புரட்சிக்கு முகம்கொடுத்து வந்துள்ளது. இந்தவகையில் சமீபத்திய புரட்சி, அதன் பின்னணி, அந்நாட்டின் அரசியல் எதிர்காலம் குறித்து சில உண்மைகள் இங்கு கேள்வி பதில் வடிவில் முன்வைக்கப்படுகின்றன.

இராணுவப் புரட்சி பின்நவீனத்துவ இராணுவப் புரட்சி எனவும் அழைக்கப்படுகின்றது. காரணம், அரசாங்கங்களின் உள்ளக முரண்பாடு மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் நாட்டில் அமைதி குலைந்த போது இராணுவம் அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பிரதமர்களையும் ஜனாதிபதிகளையும் பதவி விலகுமாறு



சொல்லப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இழுத்து மூடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான இஸ்லாமிய கல்வி நிலையங்கள் அத்னான் மந்தரீஸின் அரசாங்கத்தில் மீளவும் திறக்கப்பட்டது. மூடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பள்ளிவாயல்களும் அவரது அரசாங்கத்தில் திறக்கப்பட்டன.

இந்த மாற்றங்களால் அச்சமடைந்த இராணுவம் யுத்த தாங்கிகளோடு வீதிக்கு இறங்கியது. 1960 மே 27 இல் ஒரு கொடூரமான

# கருச் சிதைக்கப்பட்ட சதிப் புரட்சி



இராணுவப் புரட்சி அங்கு அரங்கேறியது. மந்தரீஸ் மற்றும் சிலால் பையார் உள்ளிட்டு முக்கிய அமைச்சர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதிகாரத்தை இராணுவ ஜெனரல் கமால் குர்ஸல் கைப்பற்றினார். 1965 வரை அங்கு இராணுவ ஆட்சியே நீடித்தது.

**5. கடந்த கால புரட்சிகளுக்கும் தற்போதைய ஜூலைப் புரட்சிக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகள் எவை?**

முழு இராணுவக் கட்டமைப்பும் ஜூலைப் புரட்சியில் ஈடுபடவில்லை என்பது முக்கியமான அம்சமாகும். அதேபோன்று இதற்கு முந்திய எந்தப் புரட்சியிலும் சிவில் சமூகம் வீதிகளில் இறங்கி, இராணுவத்திற்கு எதிராகச் செயற்பட்டதில்லை. ஆட்சியாளர்களுக்கு ஆதரவான பெருந்தொகை இராணுவம் நாட்டில் இருந்த நிலையிலேயே புரட்சி நடைபெற்றுள்ளது என்பது மூன்றாவது முக்கிய விடயம்.

**6. இந்தப் புரட்சியின் பின்னால் வெளிநாட்டுச் சக்திகள் செயற்பட்டுள்ளனவா?**

அரசாங்கத்தின் அறிக்கைகளின்படி அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் தங்கியுள்ள துருக்கியரான பத்ஹுல்லா குலான் அணியுடன் இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா, அறபு அமீரகம் என்பவை இப்புரட்சிக்குப் பின்னால் இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அரசாங்கம் கைதுசெய்துள்ள 2000 இராணுவ படையினரிடம் தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளின் பின்னரே இது குறித்த உண்மையான தகவல்களை அரசு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**7. கைதுசெய்யப்பட்டுள்ள சதிப் புரட்சியாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப் போவதாக அர்துகான் சூளுரைத்துள்ளார். இது என்னவகையான விளைவுகளை உருவாக்கும்?**

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய வேண்டும் என்ற நோக்கில் துருக்கி மரண தண்டனையை நீக்கியிருந்தது. தற்போது ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவத்திற்காக விண்ணப்பித்திருக்கும் துருக்கியில் மீளவும் மரண தண்டனை அமுலுக்கு வந்தால் துருக்கியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அச்சுறுத்தி வருகின்றது. இந்நிலையில், அர்துகான் மரண தண்டனை விதிக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது போன்றே தெரிகின்றது.

இராணுவத்தில் பலரை கடந்த காலங்களில் களையெடுத்தமைக்கான பிரதான காரணம் அவர்கள் அவ்வப்போது சதிப் புரட்சியில் ஈடுபடுவதுதான் என்று அர்துகான் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். தற்போது தனது ஜனநாயக ஆட்சிக்கு எதிரானவர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் அவர்கள் தொடர்பான கடும் நடவடிக்கையை அர்துகான் அரசு எடுக்கவுள்ளது.

**1. துருக்கியில் முறியடிக்கப்பட்ட இராணுவ சதிப் புரட்சியின் பின்புலம் என்ன?**

அரசாங்கத்தின் கருத்தின்படி குறிப்பாக, ஜனாதிபதி அர்துகானின் அவதானங்களின்படி இராணுவத்திலுள்ள பத்ஹுல்லா குலானுக்கு ஆதரவான சிறு தொகை படை வீரர்களே இப்புரட்சியில் ஈடுபட்டுள்ளனர். புரட்சியில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை துருக்கியின் ஒட்டுமொத்த இராணுவக் கட்டமைப்புடன் நோக்கும்போது சிறு தொகை என்பதனாலேயே அது மிக அவசரமாக முறியடிக்கப்பட்டது.

அரசாங்க தொலைக்காட்சி நிலையத்தைக் கைப்பற்றிய சிறு தொகை இராணுவம், நாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டதாக அறிவித்ததை அடுத்தே பதட்டம் ஏற்பட்டது. புரட்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட விமானங்களும் யுத்த தாங்கிகளும் மிகவும் குறைவாகும். மக்கள் வீதிக்கு இறங்கியதன் மூலம் புரட்சியில் ஈடுபட்ட இராணுவத்தின் உளவியலில் பாரிய அடி விழுந்தது. புரட்சி ஒருவாறாக முடிவுக்கு வந்தது.

**2. இதற்கு முன்னரும் துருக்கி பல இராணுவப் புரட்சிகளை சந்தித்துள்ளது. அவற்றுக்குப் பின்னால் இருந்தவர்கள் யார்?**

துருக்கியின் முதல் இராணுவப் புரட்சி 1960 மே 27 இல் நடந்தது. இரண்டாவது புரட்சி 1971 மார்ச் 11 இலும் மூன்றாவது 1980 செப்டம்பர் 11 இலும் நான்காவது புரட்சி 1997 பெப்வரி 28 இலும் நடந்தது. இவற்றுள் 1960 இலும் 1980 இலும் நடைபெற்ற புரட்சிகள் துருக்கிய இராணுவத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நேரடியான இராணுவ சதிப்புரட்சிகளாகும். அதில் மதச்சார்பற்ற துருக்கியின் இராணுவம், யுத்த தாங்கிகளையும் ஹெலிகொப்டர்களையும் பெருமளவு பயன்படுத்தியது. அரசியல் தலைவர்கள் பலரைக் கைது செய்தது. பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

1971 இல் நடந்த புரட்சி, இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சி எனவும், 1997 இல் நடைபெற்ற

பயமுறுத்தியதன் மூலம் அதிகாரத்திற்கு வந்தது.

அந்த வகையில் 1971ல் துருக்கியில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலவியது. பணவீக்கம் உயர்ந்து வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்ததனால் மக்கள் கொந்தளிக்கத் தொடங்கினர். லீராவின் பெறுமதி கணிசமாக இறங்கியது. சிவில் சமூகத்திற்கு மத்தியில் அமைதியின்மையும் கொந்தளிப்பும் உருவானது.

இந்தச் சூழலில் நாட்டில் அமைதியை உருவாக்கப் போகின்றோம் என்ற கோஷத்தோடு இராணுவம் வீதிக்கு இறங்கியது. பிரதமர் தெமிரல் பதவி விலகினார். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு காபந்து அரசாங்கம் உருவாக்கப்பட்டது. 1973 இல் கடற்படை தளபதியான பஹ்ரி குர்துக் ஜனாதிபதியாக தன்னைப் பிரகடனம் செய்தார்.

**3. 1997 இல் நிலமை 1971 புரட்சியிலிருந்து எப்படி வேறுபடுகின்றது?**

1997 இல் துருக்கியின் பிரதமராக இருந்தவர் பேராசிரியர் நஜ்முதீன் அர்பகான். 1924 இல் கிலாபத் உத்தியோகபூர்வமாக ரத்துச் செய்யப்பட்ட பின்னர் துருக்கியின் நவீன வரலாற்றில் தோன்றிய முதல் இஸ்லாமியக் கட்சி அவருடையது.

ஆரம்பத்தில் துருக்கிய இராணுவம் அர்பகான் அதிகாரத்தைக் கையேற்ற போது துருக்கி இருந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அர்பகானினால் எதனையும் செய்ய முடியாது என்று விட்டு விட்டது. பின்னர் அவரது அதிரடியான இஸ்லாமிய மாற்றங்களைக் கூர்ந்து கவனித்த இராணுவம் தொடர்ச்சியாக அவர் மீது பல அழுத்தங்களை ஏற்படுத்தியது.

துருக்கிய மாணவர்கள் மத்ரஸா கல்வி முறையில் இணையக் கூடாது என்பதற்காக இராணுவம் கட்டாயக் கல்வியை 8 ஆண்டுகளாக உயர்த்தியது. ஹிஜாப் தடைச் சட்டத்தையும் தொடர்ச்சியாக அமுல்நடத்தியது. இத்தகைய இராணுவ அழுத்தங்கள் அதிகரித்த நிலையில், அர்பகானின் கூட்டணி அரசாங்கம் கலைக்கப்பட்டது. 1998 இல் அவரது கட்சிக்கு ஐந்தாண்டு

கால தடை விதிக்கப்பட்டதோடு, அர்பகானுக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இம்முறையும் இராணுவம் நேரடியாக களத்தில் இறங்கவில்லை. இஸ்லாம் ஆதரவு அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதற்கு மறைமுகமாகச் செயல்பட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றியது.

**4. 1960 களில் பிரதமராக இருந்த அத்னான் மந்தரீஸ் மற்றும் அவரது ஜனாதிபதி சிலால் பையார் போன்றோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டது ஏன்? அவர்கள் துருக்கியின் மதச்சார்பின்மைக்கு எதிராகச் செயல்பட்டனரா?**



அத்னான் மந்தரீஸ் தூக்கிலிடப்பட்டபோது

1924 வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் தோன்றிய முதலாவது இஸ்லாம் ஆதரவுத் தலைவராக அத்னான் மந்தரீஸ் கொள்ளப்படுகின்றார். அவர் ஓர் இஸ்லாமிய சிந்தனையாளராகவும் பிரச்சாரகராகவும் இல்லாதபோதும், துருக்கியில் நிலவிய இறுக்கமான கமாலிஸத்தையும் மதச்சார்பின்மையையும் எதிர்த்து பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவை ஒரு பக்கம் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு வகைசெய்ததோடு, துருக்கியர்கள் இஸ்லாத்தை சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கும் வழியமைத்தது.

முஸ்தபா கமால் கொண்டு வந்த எல்லை மீறிய இராணுவத்தின் அதிகாரங்கள் அவரது அரசால் குறைக்கப்பட்டன. அது வரை துருக்கிய மொழியில் சொல்லப்

## போஸ்பொரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 01



துருக்கி நீண்ட இஸ்லாமிய வரலாற்று வெளியில் ஒரு கறுப்புப் புள்ளி போல் பதிந்திருந்தது. இன்று போஸ்ட்பொரஸ், தர்தனில், மர்மரா கரைகளில் கம்பீரமாய், ஒரு கலங்கரை விளக்கு போல் காட்சியளிக்கின்றது. வீரச் சிங்கம் உமரின் செங்கோண்மையின் கீழ் நேர்வழியின் ஒளிக்கீற்று அங்கு ஊடுருவியது. வரலாற்றை மாற்றிய மாபெரும் தளபதி, போர் வீரர் முஸ்லிம் பின் குதைபா வழிநடாத்திச் சென்ற குதிரைப் படையின் தெறித்தோடும் சப்தங்களால் அதிர்ச்சியில் உறைந்து போன கிழக்கு ரோமானியர்கள் முஸ்லிம் படையிடம் முழந்தாளிட்டனர். இஸ்லாம் அங்கு வலுவாக நிலையூன்றியது.

துருக்கியின் கேந்திர நிலையம் ஐரோப்பாவில் இஸ்லாம் அமைதியாக நுழைவதற்கான வாயில்களை அகலத் திறந்து விட்டது. ஆசியா கண்டத்தின் கிழக்கு எல்லையிலும் ஐரோப்பா கண்டத்தின் மேற்கு எல்லையிலும் என இரண்டு கண்டங்களில் கால் பதித்திருக்கும் துருக்கியின் இட அமைவும், கொன்ஸ்தாந்து நோபில் மீதான துருக்கியர்களின் வெற்றியும் கிழக்கு ஐரோப்பா எங்கும் இஸ்லாம் வேகமாகப் பரவுவதற்கான வழிகளை உருவாக்கியது. ஜிப்ரால்டர் மற்றும் சிசிலி ஊடாக ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கு இஸ்லாம் பரவுவதற்கு துருக்கியர்களின் போராட்டமே காரணமாகியது.

துருக்கியின் வரலாறும் அதன் எழுச்சி, வீழ்ச்சி பற்றிய பிரக்ஞையும், அதன் சமகால அரசியல் வகிபாகத்தைப் புரிந்துகொள்வதில் தவிர்க்க முடியாதவை. சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற துருக்கிய இலக்கிய எழுத்தாளர் ஒருவர், தனது ஸ்தன்பூல் நகரம் குறித்து எழுதியுள்ள வரிகள் துருக்கியின் அன்றைய வரலாற்றுச் செழுமையையும் கலாச்சார பெருமையையும் நினைவுபடுத்துகின்றது.

கடந்த 1436 ஆண்டுகால இஸ்லாமிய வரலாற்றில் துருக்கி எனும் ஒரு தனிநாடு பெறும் அரசியல் கலாசார முக்கியத்துவத்தை வேறெந்த நாடும் பெறவில்லை. குறிப்பாக அதன் அரசியல் பரிணாம வளர்ச்சியை, வரலாற்றை அறியாத எந்தவொரு மாணவனும் பூரண வரலாற்றுப் புரிதல் உள்ளவன் என்று கருதப்பட மாட்டான்.

1292 இல் துருக்கியர்களையும் துருக்கியையும் தலைமையகமாகக் கொண்ட ஓர் பேரரசு கம்பீரமாய் எழுந்து நின்றது. உஸ்மானிய சாம்ராஜ்யம் அல்லது உஸ்மானிய கிலாபத் என அழைக்கப்படும் இந்த ஆட்சி குறித்து எக்கச்சக்கமான வரலாற்றுக் குறிப்புகளை கலைக் களஞ்சியங்கள் உள்ளடக்கியிருக்கின்றன.

1924 இல் இஸ்லாத்தின் பரம எதிரிகளும் அதற்குச் சோரம் போன அறபுலகக் குடும்பங்களும் அதனை வீழ்த்தும் வரை சுமார் 600 ஆண்டுகாலம் அந்த ஆட்சி நீடித்தது. அதில் முதல் 300 ஆண்டுகள் பொற்காலம் என்று துணிந்து கூறலாம். உலகின் அரைவாசி நிலத்தையும் மூன்று கண்டங்களையும் உள்ளடக்கியதாக அந்த ஆட்சி நீடித்தது.

ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என முக்கண்டங்களையும் இஸ்லாம் ஊடறுத்துப் பாய்வதற்கு வழியமைத்தவர்கள் துருக்கியர்கள். 2500 இனக் குழுமங்கள், 3000 இற்கும் மேற்பட்ட மொழியைப் பேசுகின்றவர்கள் ஒரே தலைமையின் கீழ் 600 ஆண்டுகாலம் இருக்க முடியுமென்றால் இதுவொரு வரலாற்று அற்புதம்தான். வட ஆபிரிக்கா முதல் இந்தோனேசியா வரை, தூர கிழக்கு முதல் தென்மேற்கு ஆசியா வரை அந்த சாம்ராஜ்யம் பரவியிருந்தது. அது மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பல்வேறு வளைவு சுழிவுகளையும் ஏற்ற இறக்கங்களையும் தாண்டி 600 ஆண்டுகள் நீடித்தமை இன்னொரு வரலாற்றுச் சாதனைதான்.

உமையா ஆட்சி (661-750), அப்பாஸி ஆட்சி (750-1258) மங்கோலியர் ஆட்சி (1220-1260) இவற்றோடு ஒப்பிடும்போது கால அளவில் நீடித்ததும் விரிவானதுமான ஆட்சி உஸ்மானியர்களுடையதுதான். இறுதியில் முஸ்லிம் சமூகம் அடைந்த அரசியல் வீழ்ச்சி உஸ்மானிய பேரரசின் வீழ்ச்சியே. அதற்குப் பின்னரே இஸ்லாமிய உலகம் நிலைகுலைந்து, தேச அரசுகளாகப் பிளவுபட்டு, எதிரிகளின் வசதிக்கு ஏற்ப பிரித்துத் துண்டாடப்பட்டது.

அது பிளவுபட்ட கதை ஒரு சோக வரலாறு. அதைப் பேசுவதற்கு முன்னர் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் பொற்காலம், முஸ்லிம் சமூகத்திற்கும் ஒட்டுமொத்த உலகிற்கும் அது பகிர்ந்தளித்த நாகரிக வரலாற்றுக் கொடைகளை பரிசீலிப்பது அல்லது நினைவுகூர்வது அவசியம்.

அவர்களின் ஆட்சியில் நேர்மை நிலைத்தது. நீதி தளைத்தது. பொருளாதாரம் செழித்தது. அறிவியல் வளர்ச்சியும் நாகரிக முதிர்ச்சியும் நிலவியது. சகிப்புத் தன்மை, பன்மைத்துவம் என்பன நிலைத்திருந்தன. நாகரிகத்தின் உயர் பெறுமானங்கள் ஐரோப்பாவில் கோலோச்சுவதற்கு துருக்கியர்களே வழியமைத்தார்கள். கி.பி. 1353 இல் துருக்கியர்கள் வெற்றி வீரர்களாக ஐரோப்பாவில் நுழைந்தனர். எட்ரியோ நோபில் நகரம் விரைவில் அவர்கள் வசமானது. சுல்தான் பாயசீத் (1389-1402) காலத்தில் துருக்கியர் ஆட்சி பல்கேரியா, மெசிடோனியா, தெசாலி, திரேஸ் ஆகிய விரிந்த பிராந்தியங்களைக் கடந்து டான்யூப் நதிக்கரை வரை பரவியது. சுல்தான் முராத் அந்த ஆட்சி எல்லையை ஏட்ரியாடிக் கரை வரையும் விரிவுபடுத்தினார்.

மற்றொரு உஸ்மானிய தலைவர் முஹம்மத் (1451) அல்பேனியா, பொஸ்னியா, சேர்பியா என்பவற்றைத் தாண்டி, தென்கிழக்கு ஐரோப்பா வரை இஸ்லாத்தைக் கொண்டு சென்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட-கிழக்கு இணைப்பை கடுமையாக எதிர்ப்பதில் நான் பிரதானமானவன்



எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்
-ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

அன்று முதல் இன்று வரை வட - கிழக்கு இணைப்பை கடுமையாக எதிர்ப்பதில் நான் பிரதானமானவன். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

இந்தத் தீர்வை வட - கிழக்கை இணைத்துத்தான் பெற்றுக் கொடுக்க வேண்டுமாயின் அதனை நான் முழுமையாக எதிர்க்கிறேன். ஏனென்றால் அவ்வாறு வட - கிழக்கு இணைக்கப்படுமாயின் இந்த மாகாணங்களில் வாழுகின்ற முஸ்லிம், தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களது அரசியல் அதிகாரங்கள் இல்லாமலாக்கப்படும். அவ்வாறு வட - கிழக்கு மாகாணத்தை இணைக்க வேண்டுமாயின் அநுராதபுரம் மாவட்டத்தையும் அதனோடு இணைக்க சம்பந்தன் ஐயா சம்மதம் தெரிவிப்பாரா என நான் அவரிடம் கேட்கிறேன். இது தொடர்பில் நான் பாராளுமன்றிலும் பேசி இருக்கிறேன்.

## மிகவும் காலதாமதமான ஓர் அழைப்பு



எம்.எஸ்.எஸ். அமீர் அலி
தவிசாளர் - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

சம்பந்தன் ஐயாவுடைய அழைப்பை மிகவும் காலதாமதமான ஓர் அழைப்பாக நாங்கள் பார்க்கிறோம். கடந்த காலங்களில் இது தொடர்பாக பேச நிறைய சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் அவை நழுவ விடப்பட்டன. அந்தக் காலகட்டத்திலேயே இவ்வாறான முனைப்புக்கள் தமிழ்த் தரப்பினால் எடுக்கப்பட்டிருக்குமானால் முஸ்லிம் - தமிழ் இனக் குரோதம் கூர்மைப்படுவதில் இருந்து காப்பாற்றி இருக்க முடியும். இனியாவது தமிழ்த் தரப்பு மனம் திறந்து பேசி ஒரு காத்திரமான முடிவுக்கு வர முடியுமென்றால் அது சிறப்பானதாக அமையும். இந்த விடயத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முஸ்லிம் அரசியல் தலைமைகளோடும் முஸ்லிம் சமூகத்தில் உள்ள புத்திஜீவிகளோடும் கலந்தாலோசித்து காத்திரமான தீர்மானத்தை எடுக்கும்.

## முஸ்லிம் மக்களின் மனோநிலையை தமிழ்த் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும்



ஷிப்லி பாரூக்
கிழக்கு மாகாண சபை உறுப்பினர்
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

வட - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் அல்லது இரு மாகாணங்களும் ஒன்றாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்குமுன் முஸ்லிம் மக்களின் மனோநிலையை தமிழ்த் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் கடந்த 25 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட அளவுக்கு இல்லாவிட்டாலும் கணிசமானளவு இழப்புக்களை முஸ்லிம் சமூகம் சந்தித்துள்ளது. பல மில்லியன் கணக்கான முஸ்லிம்களின் பொருளாதாரம் சூறையாடப்பட்டுள்ளது, அவர்களது காணிகளும் இருப்பிடங்களும் அழிக்கப்பட்டுள்ளன போன்ற விடயங்களை குறிப்பாக தமிழ்த் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

வட - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லும் போது முஸ்லிம் மக்களிடம் ஒரு விதமான அச்ச நிலையும் சந்தேகப் பார்வையும் காணப்படுகின்றது. வட - கிழக்கு இணைந்திருந்த காலப் பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இதுவரை எந்தவொரு தமிழ்த் தலைமைகளும் தீர்வுகளை முன்வைக்கவில்லை. வட - கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னரும் கூட அந்த மாகாணங்களில் இருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அவர்களது இடங்களுக்கே மீளக் குடியமர்த்த எந்தகைய அக்கறையும் காட்டாத தமிழ்த் தரப்பை எவ்வாறு நம்புவது என்ற கேள்வி முஸ்லிம் மக்களிடம் இருக்கிறது.

அதேபோன்று வட-கிழக்கை இணைக்கும் போது கிழக்கில் 40 வீதமாக இருக்கும் முஸ்லிம்களின் சதவீதம் சடுதியாக குறைவடையும். வட-கிழக்கை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு முன்னர் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகள் மற்றும் சொத்துக்களுக்கான நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க தமிழ்த் தலைமைகள் என்ன முன்னெடுப்புக்களை எடுத்திருக்கின்றனர்?

இப்போது பயங்கரவாதம் நாட்டில் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இரு மாகாணங்களும் சுயமாக இயங்குகின்ற இந்த வேளையில் இவ்வாறான இணைப்பு எதை சாதிக்க வருகின்றது என்ற சந்தேகப் பார்வை முஸ்லிம்களிடம் பொதுவாக இருக்கிறது. எனவே முதலில் முஸ்லிம் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் நியாய பூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வட - கிழக்கை இணைப்பது தொடர்பில் பேச முடியும்.



### "முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்" -சம்பந்தன்

# சம்பந்தனின் அழைப்புக்கு முஸ்லிம் கட்சிகளின் பதில் என்ன?

## முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்டதொரு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும்



எம்.எஸ். உதுமா லெப்பை
தேசிய அமைப்பாளர், தேசிய காங்கிரஸ்
கிழக்கு மாகாண சபை எதிர்க் கட்சி தலைவர்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மக்கள் வட கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். அதாவது வட கிழக்கு இணைக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு ஒரு மாகாண சபை கொடுக்கப்பட்டால் கிழக்கிலே உள்ள முஸ்லிம்களுடைய மாகாணங்களின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்து முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்டதொரு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் என்பதே தேசிய காங்கிரஸினுடைய நிலைப்பாடாக உள்ளது. எனவே இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்தோடு எந்த விதமான கலந்துரையாடலையும் செய்யாமல் தமிழரசுக் கட்சித் தலைவர் தானாகவே இதனை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வதை ஒரு நியாயமில்லாத விடயமாக நாம் பார்க்கின்றோம்.

வடக்கு கிழக்க இணைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கூறியிருப்பது எமக்கு கவலையை தருகிறது. இப்போதுள்ள நிலைமையில் கூட எமது உணர்வுகளை இன்னும் அவர்கள் புரிந்துகொள்ளாமலிருப்பது வேதனையளிக்கிறது. தமிழ் மக்களுடன் அவர்களுடைய சாத்வீக அரசியல் போராட்டத்தில் முஸ்லிம் சமூகம் தோளோடு தோள் நின்று கடந்த காலங்களில் உதவி செய்துள்ளது. தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் அரசியல் சாத்வீக போராட்டத்தில் ஒன்றிணைந்த காலத்தில் மாறி மாறி வாக்களித்து இன ஒற்றுமையை ஏற்படுத்திக் காட்டினார்கள்.

ஆனால் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக தமிழ் மக்களுடைய ஆயுதக் குழுக்கள் எப்போது திருப்பப்பட்டதோ அன்று தொடக்கம் முஸ்லிம்களுக்கென்று ஒரு கட்சி உருவாக்கப்பட வேண்டும் என்று மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் கனவு கண்டார். அதை உருவாக்கினார். அதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களின் பிரதிபலிப்பாகத்தான் தற்பொழுது முஸ்லிம் சமூகம் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்டதொரு சம அந்தஸ்துள்ள ஒரு மாகாண சபை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தோடும் முஸ்லிம் கட்சிகளோடும் எந்த விதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளாமல் வட கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறியிருப்பது முஸ்லிம் சமூகத்தினுடைய பெறுமதியை குறைக்கும் நிகழ்வாகவே நோக்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்னர் சி.வீ விக்னேஸ்வரன் அவர்களும் ஒரு தனியாட்சி அலகுக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். அவர் முஸ்லிம்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியிருக்கவில்லை. இது போன்ற செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தை கவலையடையச் செய்துள்ளது.

வட கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்பதற்காக நாங்கள் அவசரப்பட்டு தீர்மானம் எடுக்கின்ற பொழுது வட கிழக்கிற்கு வெளியே உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் நாங்கள் நிதானமாக செயற்பட வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் ஒரு இனத்தை ஏற்றுக்கொள்ளாத தீர்வு சரிவராது. ஒரு சமூகத்தை புறக்கணித்து இன்னொரு சமூகம் நிம்மதியாக வாழ முடியாது. இந்நிலையில் எல்லோருடனும் கலந்துரையாடப்பட்டு ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட வேண்டும்.

## வட-கிழக்கை இணைப்பது கிழக்கு முஸ்லிம்களுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்



நஜா முஹம்மத்
பொதுச் செயலாளர்
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

இணைந்த வடகிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் ஒரு மாகாணமாக இருக்க வேண்டும் என்பதையே சம்பந்தன் அவர்கள் பிரதானமாக குறிப்பிட்டிருந்தார். வடக்கு கிழக்கு இணைந்திருந்தாலும் பிரிந்திருந்தாலும் அவை தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. கிழக்கிலே தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்வதால் அது ஒரு தமிழ் பேசும் மாகாணமாக நாங்கள் கருத முடியும். அதே போல் வடக்கிலே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அதனை ஒரு தமிழ் பேசும் மாகாணமாகக் கருத முடியும்.

எனவே இவ்விரண்டு மாகாணங்களும் பிரிந்து செயற்படுவதிலே பாரிய பிரச்சினைகளை நாங்கள் காணவில்லை. எல்லா இனக்குழுக்களும் தமது பிரதேசங்களில் அதிகாரத்தை பகிர்ந்து தங்களது விவகாரங்களை தாங்களே கையாளக்கூடிய ஒரு சூழ்நிலை இதனால் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் வடகிழக்கு இணைக்கப்படுகின்ற பொழுது அது தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல விடயமாகவும் அவர்கள் எதிர்பார்க்கின்ற விடயமாக இருந்தாலும் கூட, கிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம் மக்களை பொறுத்த மட்டில் அதிலே பாரிய பின்விளைவுகள் இருப்பதைப் பற்றி அவர்கள் மிக ஆழமாக யோசிக்கின்றார்கள். குறிப்பாக அரசியல் அதிகாரம், சமூக பொருளாதார காரணிகள் மற்றும் வளப் பங்கீடுகள் போன்ற விடயங்களை வைத்துப் பார்க்கின்ற போது வட கிழக்கு இணைக்கப்படுவதால் பல்வேறு கேள்விகள் முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுகின்றன.

அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற தமிழர்களில் எவ்வளவு பேர் இதனை ஆதரிக்கிறார்கள் என்பது இன்னும் தெரியாத ஒரு விடயமாக இருக்கின்றது. அதே போல் கிழக்கிலே இருக்கின்ற சிங்கள மக்கள் இதனை முற்றாக நிராகரிக்கின்ற ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே இந்த வட கிழக்கு இணைப்பு என்பது வெறுமனே ஒரு அழைப்பினால் நடைபெறக்கூடிய விடயமாக, சாத்தியப்படக்கூடிய ஒரு விடயமாக இல்லை.

எல்லா சமூகங்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகள், சந்தேகங்கள் அல்லது இந்த வடகிழக்கு இணைப்பினால் ஏற்படப்போகின்ற சமூக பொருளாதார அரசியல் மற்றும் வளப்பங்கீடுகள் போன்ற முக்கிய விடயங்களில் ஏற்படப் போகின்ற எதிர்விளைவுகள் குறித்த தெளிவான நிலைப்பாடுகள் இன்றி வெறுமனே வடகிழக்கு இணைப்புக்கு ஒரு சமூகம் ஒத்துழைக்க வேண்டும் என அழைப்பு விடுப்பது ஒரு பொருத்தமான விடயமாக இருக்க மாட்டாதென நான் நினைக்கின்றேன்.

எனவே இதுவொரு பரந்து பட்ட கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டு இதிலே இருக்கின்ற பிரச்சினைகள் சரியாக அடையாளங் காணப்பட்டு எல்லா தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கட்டமைப்பை அதாவது இப்பொழுது கிழக்கு மாகாணத்திலே இருக்கின்ற அரசியல் அதிகாரத்திற்கு ஒப்பான அல்லது தங்களுடைய விடயங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்ற அந்த விடயங்களை எத்தகையதொரு கட்டமைப்பினூடாக இணைந்த வட கிழக்கிலே கொண்டு வர முடியும் என்ற தெளிவான நிலைப்பாடுகளை ஒரு பரந்து பட்ட கலந்துரையாடல்களை ஏற்படுத்தியதன் பின்னர்தான் இதனுடைய சாதக பாதகங்களை பரிசீலித்து நாங்கள் அந்த இணைப்பு என்ற விடயத்திற்கு ஒத்துக்கொள்ள முடியுமா அல்லது ஒத்துக் கொள்ள முடியாதா என்றொரு நிலைப் பாட்டிற்கு இரண்டு தரப்பினராலும் வர முடியும்.

வெறுமனே ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே நாங்கள் எல்லோரும் தமிழ் பேசுகின்றோம், வட கிழக்கிலே செறிந்து வாழ்கின்றோம் என்ற ஒரே காரணத்தை மையமாக வைத்து இந்த அழைப்பை இந்தக் கட்டத்தில் விடுத்திருப்பது நான் நினைக்கின்றேன், அது முஸ்லிம் தரப்பினராலும் ஏனையவர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அழைப்பாக இருக்க மாட்டாது அதற்குரிய காலம் இன்னும் சரியாக கனியவில்லை.

ஆனால் அது இயல்பாக கனியக் கூடிய ஒரு விடயமல்ல. மாற்றமாக ஒரு பெரும் முயற்சிக்குப் பின்னர் ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் எல்லோருடைய கருத்துகளும் உள்வாங்கப்பட்டு பரஸ்பரம் அந்தப் பிரச்சினைகளைப் புரிந்த கொண்டு அதற்கு உரிய தீர்வுகளையும் திட்டங்களையும் மாதிரிகளையும் கட்டமைப்புகளையும் முன்வைத்துத்தான் இந்த இணைப்பினால் வரக் கூடிய பாதிப்புகளை நாங்கள் இன்னின்ன வகையில் எல்லாம் நிவர்த்திக்க முடியும், இதிலே இருக்கின்ற பாதிப்புகளை நாங்கள் இப்படி இப்படியெல்லாம் கையாள முடியும் என்கின்ற ஒரு ஒருமைப்பாட்டுடன் அல்லது ஒருமித்த நிலைப்பாட்டுடன் அதிலே பரஸ்பரம் இரண்டு சமூகங்களுக்கும் அல்லது இரண்டு மாகாணங்களுக்கும் பரஸ்பரம் நன்மை இருக்கின்றது என்ற அடிப்படையிலேயே ஒரு நிலைப்பாட்டிற்கு வருவது தான் மிகவும் பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

அல்லது வெறுமனே ஒரு அழைப்பினால் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இதனை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது அரசியல் ரீதியாக தற்போதைய சூழலில் சாத்தியமற்ற விடயமொன்றாகவே நாங்கள் கருதுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் நிலமும் சமூகமும்



அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்

தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்குவரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

## பலஸ்தீன் யாருடையது? வரலாற்று வாதங்கள் தொடர்...

பலஸ்தீன் தம்முடையது என்பதை நிரூபிக்க இருவகை கருத்துகளை யூதர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஒன்று மத ரீதியானது. அடுத்தது வரலாற்று அடிப்படையில் அமைந்தது. வரலாற்று ரீதியான 4 வாதங்களுக்கான பதில்களை ஏற்கனவே நோக்கியுள்ளோம். அதன் தொடரை இந்த இதழில் நோக்குவோம்.

5. கி.பி 2ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டுவரை (சுமார் 1800 வருடங்களாக) மனித குழுமங்களாகவோ அரசியல் அமைப்புகளாகவோ யூதர்களின் பிரசன்னம் பலஸ்தீனில் இருக்கவில்லை. பலஸ்தீனுடனான தொடர்புகள் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தது. ஒரு சிலர் குத்ஸ் நகருக்கு வந்துவிட்டு செல்லும் சாதாரண ஒரு ஆன்மீக தொடர்புமாத்திரம் காணப்பட்டது. அதுவும்கூட முஸ்லிம்கள் அவர்கள் மீது கொண்ட கருணையின் காரணமாகவே அவர்களுக்குக் கிடைத்தது. யூதர்கள் பலஸ்தீன் புனித பூமியில் தமக்கு உரிமையுள்ளதாக வாதிடுகின்றார்கள். பலவந்தமாகவே தாம் வெளியேற்றப்பட்டோம் என்று கூக்குரலிடுகின்றனர். தமக்கொரு சந்தர்ப்பம் கிடைத்தால் அனைத்து யூதர்களும் பலஸ்தீனில் பிரவேசிப்பார்கள் என்று கருத்துருவாக்குகின்றனர். இவையனைத்தும் மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்களாகும்.

பாரசீக கோரஷ் மன்னன் அனுமதித்தபோதும் பெரும்பான்மை யூதர்கள் அங்கு பிரவேசிக்கவில்லை. ரோமானியர்கள் முதலாம் நூற்றாண்டில் டைடஸின் தலைமையில் குத்ஸ் நகரத்தை தகர்த்தபோது உலக யூத சனத்தொகையில் 1/3 பங்கினர்கூட பலஸ்தீனில் இருக்கவில்லை. இன்று யூத நாடு உருவாக்கப்பட்டு 80 வருடங்கள் நெருங்குகிறது. ஆனால் உலக யூத சனத்தொகையில் 60% வீதமானவர்கள் பலஸ்தீனுக்கு வெளியில்தான் வசிக்கின்றார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனுக்கு வருவதை விரும்புவதில்லை. குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பொருளாதார வளம் கொளிக்கும் நாடுகளை விட்டுச் செல்ல இன்னும் அவர்கள் தயாராக இல்லை.

(யஹூதுல் ஆலம் - அப்துல் வஹ்ஹாப் அல் மிஸைரி பக்கம் - 477-489)

6. கி.பி 395 முதல் ரோமானிய சாம்ராஜ்யம் இரண்டாக பிளவுபட்டது. கிழக்கு ரோமானியா, மேற்கு ரோமானியா என்பதுவே அவையாகும். கிழக்கு ரோமானியாவின் தலைநகர் தான் குஸ்தன்தீனிய்யா (தற்போதைய இஸ்தான்பூல்) மேற்கு ரோமானியாவின் தலைநகர் ரோமா, கிழக்கு ரோமானியாவை அறபிகள் ரோம் என்று அழைத்தார்கள். இது பைஸான்திய சாம்ராஜ்யம் என்று அழைக்கப்படுகிறது. இஸ்லாம் பலஸ்தீனை வெற்றி கொள்ளும்வரை சிறிதுகாலம் இவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

7. உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்களின் காலத்தில் ரோமர்களை வெற்றி கொண்டதன் மூலம் பலஸ்தீனை முஸ்லிம்கள் கைப்பற்றினார்கள். அஜ்னாதைன், யர்முக் யுத்தங்களில் ரோமர்கள் தோல்வியடைந்ததன் மூலம் இவ்வெற்றி முஸ்லிம்களுக்கு கிடைத்தது. ஹிஜ்ரி 15(கி.பி 636) குத்ஸ் நகரையும் வெற்றிகொண்டார்கள். அன்றிலிருந்து பலஸ்தீன் இஸ்லாமிய அச்சில் வார்க்கப்பட்டது. இஸ்லாமிய சாயலை வெளிக்காட்டியது. பலஸ்தீனர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களது மொழி அறபு மொழியாக மாறியது. இஸ்லாமிய நாகரிகத்தோடும் அறபிகளோடும் கலந்ததன் காரணமாக மக்களும் அறபுமயப்படுத்தப்பட்டார்கள். இன்று வரை இது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

8. சிலுவைப்படையினர் குத்ஸ் நகரை ஆக்கிரமித்து அங்கு பைதுல் மக்திஸ் முடியரசையும் ஸ்தாபித்தார்கள். அவர்களது ஆட்சி அங்கு 88 வருடங்கள் தொடர்ந்தது. கி.பி 1099 முதல் 1187 வரை இது தொடர்ந்தது. சுல்தான் ஸலாஹுத்தீன் ஐயூபி அவர்கள் அதனை விடுவித்தார்கள். இக்காலகட்டத்தை தவிர்த்துப் பார்த்தால் கி.பி 636 முதல் 1917 வரை சுமார் 1200 வருடங்கள் இஸ்லாத்தின் கொடியின் கீழ்தான் பலஸ்தீன் காணப்பட்டது.

---

# பாலைவனச் சிங்கம்

(சுலைமான் ஹாதிர்)



வரலாற்று நவீனம் | அங்கம் - 12 | - ஹமதானி

## (அ)நீதியின் முன்னால்...

உ.சுப்கி: ''இஸ்ரவேலிய வைத்தியர்களின் தீர்ப்பை எமது நாட்டுத் தீர்ப்பாகக் கொள்ள முடியாது. எமது நாட்டில் தான் கொலை நடந்தது என்றால் எமது வைத்திய அதிகாரிகள் தான் பிரேத வைத்தியச் சான்றுவழங்க வேண்டும். இஸ்ரவேலின் தீர்ப்பை ஏற்பதாயின் கொலை இஸ்ரவேலின் எல்லையினுள் நடந்திருக்க வேண்டும். அப்பொழுது இஸ்ரவேலிய நீதிமன்றம் தான் வழக்கை விசாரிக்க வேண்டும். கொலை எகிப்தின் எல்லைக்கு உட்பட்ட அகபாக் குடாப்பகுதியில் நிகழ்ந்ததாக நீங்களே ஏற்றீர்களே!

அப்பொழுது பிரதம நீதிபதி குறுக்கிட்டு சற்று கடுமையாக ''கொலை நடந்தது என்பது தெளிவான உண்மை. இங்கு கொலை செய்யப்பட்டது குற்றமா? இல்லையா? என்பது தான் ஆராயப்பட வேண்டும்!'' என்றார். இவ்வாறு பிரதம நீதிபதி குறுக்கிட்டு உடனடியாகத் தீர்புச் செய்வது போல் கூறியது சுலைமான் ஹாதிருக்கு மட்டுமல்ல சட்டத்தரணி உம்மாத் சுப்கிக்கே வியாகூலமாகவே இருந்தது. இப்பொழுது அவர் தனது வாதத்தை வேறுவிதமாக நிறுவ முயன்றார்.

உ.சுப்கி: ''இங்கே கூறப்படுவது போல சுலைமான் ஹாதிர் ஏழு யூதர்களைக் கொன்றதாக வைத்துக் கொண்டாலும் அதுவும் குற்றமில்லை. ஏனெனில் ''தாருல் ஹர்பை (முஸ்லிம் நாட்டுக்கு எதிராக யுத்தம் செய்யும் நாட்டை)ச் சேர்ந்தவர்களை ஒரு முஸ்லிம் கொல்வது குற்றமாகாது.தாருல் ஹர்பைச் சேர்ந்தவன் என்பது முஸ்லிமில்லாத ஒரு நாட்டிற்குக் கட்டுப்பட்டிருக்கும் முஸ்லிமில்லாத பிரஜையாகும். அதேவேளை அந்நாட்டிற்கும் ஏதாவது ஒரு முஸ்லிமல்லாத நாட்டிற்கும் இடையில் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இன்று இஸ்ரவேலுக்கும் முஸ்லிம் நாடுகளான ஜோர்தான், சிரியா, லெபனான் என்பவற்றுக்கும் இடையில் அடிக்கடி யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த வேளை உலகில் எங்கு வாழும் முஸ்லிமும் இஸ்ரவேலிய யூதர்களைக் கொலை செய்வது குற்றமல்ல. எனவே கடந்த சில நாட்களுக்கு முன் சுலைமான் ஹாதிர் ஏழு இஸ்ரவேலர்களைக் கொலை செய்திருந்தால் அதுவும் குற்றமல்ல!''

சட்டத்தரணி உம்மாத் சுப்கி இவ்வாறு தமது சட்டவாதத்தை சமர்ப்பித்ததும் நீதிமன்றம் முழுவதும் சில கணம் மயான அமைதி நிலவியது. நீதிபதிகள் மூவரும் தங்கள் முன்னால் இருந்த தாள் கட்டுகளைக் களைத்து ஏதேதோ பார்த்துவிட்டு தமக்குள் ஏதேதோ ''கிசுகிசு'' பேசிக் கொண்டனர். பின் பிரதம நீதிபதி சட்டத்தரணி உம்மாத் சுப்கியை நோக்கி.

''பிரதிவாதியின் வக்கீல் அவர்களே! நீங்கள் கூறுவது போன்ற ஒரு சட்டம் எமது நாட்டு சட்டக் கோவையில் இல்லையே.!?''

உ.சுப்கி: ''நீதிபதி அவர்களே! இஸ்லாமிய ஷரீஆவில் இருக்கிறது'' என்றார். இதனைக் கேட்டதும்பிரதமநீதிபதியின்வதனம்கொய்யாப்பழமாய்ச் சிவந்தது. சிங்கமாய்க் கர்ஜித்தார். ''வக்கீல் அவர்களே! இங்கு நாம் ஷரீஆவின் அடிப்படையில் வழக்கை விசாரிக்கவில்லை. எமது நாட்டின் அரசியல் சட்டதிட்டங்களுக்கு அமையவே நாம் விசாரணை நடத்துகிறோம் என்பதை நீர் அறியாமலா வாதிக்கிறீர்?''

உ.சுப்கி: ''நீதிபதி அவர்களே! எமது மிஸ்ரு நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையே இஸ்லாமிய ஷரீஆதானே! அதன் அடிப்படையில் தானே எனது வாதத்தைச் சமர்ப்பித்தேன்!! இதனை செவிமடுத்த பிரதம நீதிபதியின் முகத்தில் எள்ளும் வெடித்தது. நீதிபதிகளுக்கே உரிய தார்மீகப் பண்புகளிலிருந்து நிலை மாறியவராக அவர், ''வக்கீலே! என்ன உளத்துகிறாய்! சுய உணர்வுடன் தானா பேசுகிறீர்?''

உலகளாவிய ''அன்னை இஸ்லாமிய'' இயக்கத்தின் தர்பிய்யாக் கட்டமைப்புக்குள் தன்னைச் சிறுவயது முதல் உட்படுத்தி புடம் போடப்பட்டவர் தான் சட்டத்தரணி உம்மாத் சுப்கி. நபி (ஸல்) உருவாக்கிய ''மானிடப் பழங்கள்'' ஆன ஸஹாபா சமூகத்தை ஒத்த தனிநபர்களும் சமூகமும் மீண்டும் வரலாற்றில் தோன்ற முடியும் என்ற ஷஹீத் ஸையித் குதுப் (ரஹ்) அவர்களின் கருத்துக்கு நிஜ உலகில் நிதர்சனம் வடிவமைத்துக் காட்டியதும் இந்த சர்வதே ''அன்னை இஸ்லாமிய இயக்கம்தானே! ''நவீன சகாபா ச[...] [...]றையில் வார்க்கப்[...] நெஞ்சுரம்படைத்த நம் சட்டத்தரணி உம்மாத் சுப்கி என்பதனால் தான் போலும் பிரதம நீதிபதியின் தீ பறக்கும், உள்ளத்தில் வேள் பாய்ச்சும் கிண்டலான சுடு சொற்களின் முன்னால் நிலை குலையாமல் உணர்ச்சி வசப்படாமல் கூடிய நிதானத்துடன் இமயமாக நின்று மிகவும் இங்கிதமாகப் பதில் அளித்தார்.

உ.சுப்கி: ''ஆம் நீதிபதி அவர்களே! தெளிவான நிலையில் சுய உணர்வுடன் தான் நான் பேசுகிறேன். ''1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி கொண்டு வரப்பட்ட எகிப்தின் 2ஆம் இலக்க சீர்திருத்தச் சட்டம், எகிப்து நாட்டின் சட்டவாக்கத்திற்கான அடிப்படை, இஸ்லாமிய ஷரீஆவாகும். மேலும், அப்பீல் கோர்ட், உயர் நீதிமன்றம். மற்றும் மக்கள் மன்றம் என்பன வழங்கும் தீர்ப்புக்கள், சட்டங்கள் இஸ்லாமிய ஷரீஆவிற்கு முரணாக இருந்தால் அது - செல்லுபடியாகாது என்று சட்டம் பிறப்பிக்கப் படாமலே - செல்லு படியற்றமாகும்''. என்று கூறுகிறது.

எனவே, தான் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் மேலே எனது வாதத்தைச் சமர்ப்பித்தேன்!'' சட்டத்தரணி உம்மாத் சுப்கி இவ்வாறு கூறக் கேட்டதும் பிரதம நீதிபதியின் மேனி பதாதி கேச பரியந்தம் ஒரு தரம் குலுங்கி அதிர்ந்தது. நீதிபதிகளுக்கே உரிய அத்தனை மரபுகளையும் கடந்து ரௌத்திரிகாரத் தொனியில் ''வக்கீலே! உமது ஷரீஆ வாதத்தை ஒரு புறம் தள்ளும் இது இராணுவ நீதிமன்றம். இங்கே நாட்டின் நடைமுறைச் சட்டங்களுக்கு ஏற்பவே விசாரணைகள் நடைபெறும். இந்த அடிப்படையிலிருந்து முடியுமாயின் வார்த்தைத் தொடரலாம். இன்றேல் நிறுத்தலாம்..!''

இந்த வார்த்தைகள் சுலைமான் ஹாதிருக்கு அவனது எலும்புக் குருத்துக்களில் நெருப்புக் குழம்பை ஊற்றினாற்போல இருந்தது. சகிக்க முடியாத அந்த வார்த்தைகள் பிரதம நீதிபதியுடன் சட்டவாதம் புரிய அவனைத் தூண்டின. சட்டக் கல்லூரி மாணவன் தானே அவனும்! அது இல்லவிட்டாலும் ஆகக்குறைந்தது அல்-குர்ஆன் வசனமான.

وَمَنْ لَّمْ يَحْكُمْ بِمَآ اَنْزَلَ اللّٰهُ فَاُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ

''யார் அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ நிச்சயமாக அவர்கள் காபிர்களே'' (5:44) என்பதையாவது அங்கு கூறவேண்டும் போலிருந்தது. ஆனாலும் அவனது சட்டத்தரணி உம்மாத் சுப்கியின் கண்சாடை அவனைக் கட்டுப்படுத்திவிட்டது. சட்டத்தரணி உம்மாத் சுப்கி அவர்களுக்கும் பிரதம நீதிபதி ஷரீஆவைச் சாடிய அந்த வசனங்கள் எட்டிக் கசப்பாகத்தான் இருந்தன. ஆனாலும் தானும் இந்த [...] வசப்படுவது பயன்தராது [...]ந்தவராக மிகவும் அநாயசமாக.

உ.சுப்கி: நீதிபதி அவர்களே! எகிப்து நாட்டின் நடைமுறை அரசியல் விதிகளின் படி பார்த்தாலும் சுலைமான் ஹாதிர் செய்தது குற்றமன்று. அதற்கு முன்பாக இங்கு அவர் உல்லாசப் பயணிகளைக் கொன்றதாகக் கூறப்பட்டது.

நாம் அதனை ஏற்க மறுக்கிறோம். அந்த இஸ்ரவேலியர்கள் எவ் வாறு நடந்து கொண்டனர் என்பதை சுலைமான் ஹாதிரிடமே கேட்டு அறியலாம் என்று கூறினார் சட்டத்தரணி உம்மாத் சுப்கி. உடனே அரச தரப்பு வக்கீல் நீதிபதியின் கட்டளையின் பேரில் சுலைமான் ஹாதிரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

அ.வக்கீல்: ''பாலைவனத்திலே நீர் கொன்றது சூரிய ஸ்நானம் செய்து கொண்டிருந்த உல்லாசப் பயணிகளில்லையா?!''

சுலைமான்: ''நிச்சயமாக அவர்கள் உளவாளிகளே. அவர்கள் உல்லாசப் பயணிகள் அல்லர். ஏனெனில் நான் காவல் காத்து நின்ற எல்லைப் புறம், உள்-வெளிநாட்டுப் பிரஜைகள் நுழைவதும், நடமாடுவதும் தடைசெய்யப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உயர் பாதுகாப்பு வலயமாகும். இது சம்பந்தமான அறிவிப்புப் பலகை, அரபு, ஆங்கிலம், ஹீப்ரு மொழிகளில் தொங்கவிடப் பட்டிருக்கிறது. அப்படியிருந்து இஸ்ரவேலிய உல்லாசப் பயணிகள் அங்கே நுழைவது எதிர் பார்க்கவே முடியாது!''

அ.வக்கீல்: ''அவர்கள் அனைவரும் சூரிய ஸ்நான உடையுடனா இருந்தனர்?''

சுலைமான்: ''ஆம்''

அ.வக்கீல்: ''அதுவே அங்கு சூரியஸ்நானம் செய்ய வந்த உல்லாசப்பயணிகள் அவர்கள் என்பதை நிரூபிக்கிறதே!''

உ.சுப்கி: ''அந்தக் குறிப்பிட்ட ஆடையை அணிந்திருந்தமைக்காக அவர்களை உல்லாசப் பயணிகள் எனக் கூற முடியாது. அந்த உடையுடன் அதற்குரிய இடத்தில் நடமாட வேண்டும். சுலைமான் ஹாதிர் நின்றதோ நுழைவதும் நடமாடுவதும் தடுக்கப்பட்ட, எல்லைப்புற அதிஉயர் பாதுகாப்பு வலயமாகும்.

அந்த இடத்திற்கு வடக்காக உள்ள உல்லாசப் பயணிகள் நடமாடும் உல்லாசபுரியே 45 கி.மீ தூரத்தில் உள்ள ''தாபா'' என்ற இடமாகும். அவ்வாறே எதற்காக மிக அண்மையிலுள்ள உல்லாசபுரி 21 கி.மீ தூரத்திலுள்ள ''நூஃபைஹ்'' (نويبع) என்ற இடமாகும். எனவே, சுலைமான் ஹாதிர் காவல் புரிந்த அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் எவ்வாற உல்லாசப் பயணிகள் நடமாடுவர் என எதிர்பார்க்க முடியும்!?

அ.வக்கீல்: ''அவர்கள் அங்கு தவறுதலாக நுழைந்திருப்பர். அதன் போது அவர்கள் வெளியேற்றுவதை விடுத்து, துப்பாக்கியைப் பிரயோகித்து அநியாயமாக அவர்களைக் கொன்றது குற்றம் தானே!''

சுலைமான்: ''நானும் வழிதவறியவர்கள் என்று நினைத்து...

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்



# தோல்வி கண்ட துருக்கிய சதிப் புரட்சி

கலாநிதி பஹ்மி ஹுவைதி ஓர் இஸ்லாமிய சிந்தனையாளர். பத்திரிகை எழுத்தாளர். அவர் 1958 தொடக்கம் அரபுலக விவாகாரங்கள் குறித்து வாராந்தம் எழுதி வருபவர்.

அர்த்த சாமத்தில் துருக்கிய மக்கள் தங்கள் வாகனங்களை எடுத்துக் கொண்டு ராணுவ சதிக் கும்பலின் பீரங்கி வண்டிகளுக்கு முன்னால் குறுக்கே நின்ற துருக்கி வீதிக் காட்சிகளை யாரும் மறக்கவே மாட்டார்கள்.

தாக்குதல் நடத்தும் கவச வாகனத்தை முன்னோக்கி நகராமல் தடுப்பதற்கு அதன் சக்கரங்களுக்கு முன்னால் உடம்பை கிடத்தி படுத்த அந்த வீரனை யாரால் மறக்க முடியும்.

தாக்குதல் நடத்தும் பீரங்கி வண்டிகளை புடை சூழ்ந்தும் அதன் மேல் ஏறியும் துருக்கிக் கொடியை உயரப் பறக்க விட்டு சதிப் புரட்சிக்கு எதிர்ப்புக் காட்டிய பொதுமக்களின் தேசப்பற்றை எப்படி மறந்து விடமுடியும்?!

அறைகூவல் வந்தவுடன் தூங்கும் ஆடைகளுடன் பள்ளிவாசல்களுக்கும் மைதானங்களுக்கும் வீதிகளுக்கும் சாரி சாரியாக படையெடுத்து வந்த சனத்திரளைப் பார்க்கும் போது, போர் முரசு கேட்ட சிப்பாய்கள் தாக்குதல்களுக்காக அணிதிரண்டு வந்த ஒரு அபூர்வ காட்சியாகவே தோற்றம் பெற்றது.

எதிர்பாராத மக்கள் வெள்ளம் ராணுவப் புரட்சியின் தோல்விக்கு அப்பவே கட்டியம் கூறிவிட்டது.

பிரதான அரசியல் கட்சிகளும் குறிப்பாக துருக்கி பாராளுமன்றத்திற்குள் அர்துகானின் கட்சிப் பிரதிநிதிகளுடன் கைகலப்பில் ஈடுபட்டவர்களும் சதி முயற்சிக்கு எதிராக எடுத்த நிலைப்பாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்

எனவே அர்துகானின் வெகுஜன செல்வாக்கும், மக்களபிமானமும் மாத்திரம் தான் இந்த தோல்விக்கு காரணம் என்று கூறிவிட முடியாது. துருக்கியின் அரசியல் களத்தில் உள்ள பல தரப்பட்ட கட்சிகளும் நாட்டின் ஜனநாயகப் போக்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு செயல்பட்டு வருகின்றனர்.

இங்கு ஒரு உண்மையைக் கூறவேண்டும். அதாவது விழிப்புணர்வுடன் அணிதிரண்டு வந்த பொதுமக்கள், ஏனைய கட்சிகள், அமைப்புக்கள் இந்த சதிக்கு எதிராக தோள் கொடுத்ததற்கு ஒரு பின்புலம் இருக்கிறது.

துருக்கி மக்கள் இதற்கு முன்பு நான்கு தடவை ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு முகம் கொடுத்துள்ளனர்.

முதலாவது சதிப் புரட்சி 1960ம் ஆண்டு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1971ம் ஆண்டிலும் பின்னர் 1980ம் ஆண்டிலும் இறுதியாக நஜ்முத்தீன் அர்பகானின் அரசாங்கத்திற்கு எதிராக 1997ம் ஆண்டும் ராணுவத்தின் மூலம் ஆட்சிக்கவிழ்ப்பு நடைபெற்றுள்ளன.

ராணுவ ரீதியான ஆட்சிக் கவிழ்ப்பின்போது வெறுமனே அரசியல் அழிவு மாத்திரமல்ல தேசத்தையே அழிக்கும் சர்வாதிகார அடக்குமுறைக்கும் மனிதாபிமானமற்ற பாசிச அரசியலுக்கும் வாசல் திறக்கும் என்பது அவர்கள் பலதடவை அனுபத்தில் கண்ட பாடங்கள்.

1980ம் ஆண்டு ஜெனரல் கன் ஆன் தலைமை தாங்கி நடத்திய ராணுவப் புரட்சியின் விளைவுகளை உத்தியோகபூர்வ ஆவணங்களில் இருந்து எடுத்துக் காட்டாக இங்கு குறிப்பிடலாம்.

- 650,000 பேர் கைது செய்யப்பட்டனர்.
- 517 பேருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டன. அதில் 50 பேருக்கு மரதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 30,000 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.
- 14,000 பேருடைய குடியுரிமை பறிக்கப்பட்டது.
- 23,700 நலன்புரி அமைப்புக்கள் மூடப்பட்டன.
- நூற்றுக் கணக்கானோர் சித்திரவதை, உண்ணாவிரதம், தப்பியோட முயற்சித்தல், காணாமல் போகுதல், மர்மான முறையில் என மரணித்தோர் பட்டியலில் அடங்குவர்.
- 900 சினிமா படங்களுக்கு தடை விதிக்கப்பட்டன.
- 30,000 டொன் எடையுடைய புத்தகங்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டன.

இந்த அவலங்களை கண்ட பரம்பரை இனியொரு ராணுவப் புரட்சிக்கு வழிவிடுவதில்லை என உறுதியான சங்கற்பத்துடன் வாழுகிறது என்பது புரட்சி புகட்டும் முதலாவது பாடம்.

துருக்கிய பாதுகாப்பு படைக்கு புனிதம் கொடுக்கும் அளவிக்கு மக்கள் மத்தியில் அதற்கு அந்தஸ்துள்ளது. அதன் வரலாற்றை புரட்டும் எவரும் இதனைக் கண்டு கொள்வர்.

சிலர் துருக்கிய படையை 'ஜெய'ஷு முஹம்மத்' நபிகளாரின் ராணுவப்படை என்றும் வேறு சில ஜிஹாதியப் படை என்றும் வர்ணிக்கின்றனர்.

முதலாம் உலகப் போரின் போது துருக்கி தேசத்தை காப்பதில் ராணுவம் வகித்த பங்கு அதன் அந்தஸ்தையும் பெருமையும் மேலும் உயர்த்திவிட்டது.

யுத்தத்தில் துருக்கி ராணுவம் ஈட்டிய சாதனைகளை தாய்நாட்டை பாதுகாத்தல் என்ற ஒரு தட்டிலும் அதன் அரசியல் நிருவாக நடவடிக்கைகளை இன்னொரு தட்டிலும் போட்டு எடை போடுவதுதான் பொருத்தமாகும்.

நாட்டுக்காக போராடுதல் இன்றுவரை பாராட்டக் கூடியதாகவே உள்ளது. ஆனால் அதன் அரசியல் நிர்வாகம் படைக்கு அவமானத்தையும் இழுக்கையும் தான் கொண்டு வந்து சேர்த்துள்ளது.

இழிவடைந்து இக்கட்டான சூழ்நிலையில் இருந்த ராணுவத்தை ஜனாதிபதி அர்துகான் அதன் சரியான பாதைக்கு கொண்டுவந்தார். அரசியல் களத்தில் இருந்து அகற்றி நாட்டை பாதுகாக்கும் இயல்பான அதன் பணிக்கு திருப்பி விட்டார். இதனால் ஜனாதிபதியின் கௌரவமும் மற்றும் ராணுவத்தின் அந்தஸ்தும் உயர்ந்தது.

எனவே மக்களும் எதிர்க்கட்சிகளும் புத்திஜீவிகளும் அர்துகானின் சேவையை மறக்கவில்லை. 70 வருட சர்வாதிகாரத்தின் பின் கட்டப்பட்டு கட்டியெழுப்பிய ஜனநாயகத்தை மீண்டும் ராணுவத் திடம் ஒப்படைக்க யாருமே விரும்பவில்லை. ஜனநாயக அடிப்படையில் வந்த தலைவனை மக்கள் விருப்பு வாக்கு மூலம் தான் நீக்க வேண்டும் என்பது களத்தில் உள்ள அரசியல் கட்சிகள் உட்பட சகல தரப்பும் சிந்திக்கத் தொடங்கி விட்டன.

அடக்குமுறை இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு தீர்வாக பாசிசத்தை கொண்டுவருவதற்கு துருக்கி மக்கள் விரும்பவில்லை. குறைபாடுடன் இருப்பது குருடாக இருப்பதை விட சிறந்தது என்ற பாடத்தை துருக்கி நிகழ்வு சொல்லித் தரும் இரண்டாவது பாடமாகும்.

நடந்து முடிந்த நிகழ்வுகளை பார்க்கும் போது பின்வரும் குறிப்புக்களை தர முடிகிறது.

எதிர்காலத்தில் ராணுவப் புரட்சிக்கு இடமில்லை என்பது உறுதிப் படுத்தப்படுகிறது.

துருக்கியின் ஜனநாயகத்திற்கு எதிரான சதி இன்னும் ஓயவில்லை. சந்தர்ப்பம் வாய்க்கும் போது தலை தூக்குவதற்கு எதிர் சக்திகள் வழி மேல் விழிவைத்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சதி முயற்சிக்கு காரண கர்த்தா என பத்ஹுல்லா கோலானின் மீதும் அவரது ஜமாஅத்தினர் மீதும் குற்றம் சுமத்தப்படுகிறது. அவர்கள் நிழல் அரசாக இருந்து நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுகின்றனர் என துருக்கிய அரசு கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது. சதியின் சூத்திரதாரியாக கோலான் உள்ளார் என்பதற்கான போதுமான திருப்திகரமான சான்றுகள் இன்னும் கிடைக்கவிலை என்றே பஹ்மி ஹுவைதி அபிப்பிராயப்படுகின்றார்.

உண்மையில் சூழ்சியை முறியடிக்கவும் ஜனநாயகத்தை காப்பாற்றவும் பெரும் பங்காற்றிய அரசியல் கட்சிகள், அதிகாரிகள், படைப் பிரிவுகள், பொது மக்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்களே.

இறுதியாக இது குறித்து பஹ்மி ஹுவைதி அவர்கள் முன்வைத்துள்ள இரண்டு விடயங்கள் மிகுந்த கவனத்திற்குரியதாகும்.

1. அறபுலக ஊடகங்கள் சதிப் புரட்சியின் துவக்கத்தில் புதைந்து கிடக்கும் தமது காழ்ப்புணர்வை கக்கியதை காணு கின்றோம். அது அறபுலக அரசியலின் திட்டப் பாதையை ஓரளவு வெளிக்காட்டியுள்ளது. சில ஊட கங்கள் துருக்கி அரசு மீதான கவிழ்ப்பு முயற்சி வெற்றி என்று பறைசாட்டியது. இன்னும் சில ஊடகவியலாளர்கள் இது சதி அல்ல ஜனநாயகத்தை காக்கும் புரட்சியே என்று நேயர்களுக்கு மகிழ்ச்சிப் பெருக்கோடு கூறிய தையும் கண்டோம்.

அநேகமான அறபு ஊடகங்கள் 'ராணுவம் அர்துகானை கவிழ்த்து விட்டது' என கொட்டை எழுத்தில் தலைப்பிட்டது. அங்குள்ள 'அல் வதன்' என்ற பத்திரிகை ஒரு படி மேலே சென்று 'துருக்கிய ஜனாதிபதி ஜேர்மனியில் தஞ்சம் கோரினார்' எனத் தலைப்பிட்டது.

''நிருக்' என்ற பத்திரிகை மாத்திரம் அந்தப் பொறிக்குள் சிக்காகாமல் அடக்கமாக தொழில் தர்மத்தோடு பின்வருமாறு தலைப்பிட்டது. துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்புக்கான முயற்சி, அர்துகான் அது தோல்வியில் முடியும் என சூழுரை'

இந்த பரபரப்பான செய்திகள் சுட்டும் விடயம் என்ன வென்றால் எகிப்திய ஊடகங்கள் மற்றும் சில அரபு சேனல்கள் உண்மையை அறிவதை விட அர்துகானின் கணக்கை தீர்த்துக் கொள்ள வேண்டுமே என ஈடுபட்டுள்ளன.

இரண்டாவது விடயம் அர்துகானின் அரசியல் தொடர்பானது. சதி முயற்சியில் ஈடுபட்ட யாவரும் உரிய தண்டனையை பெற வேண்டும். அதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை.

அர்துகான் சம்பந்தப் பட்டவர்களை தண்டிப்பார் என்பது புரிகின்றது. ஆனால் காயம் பட்ட சிங்கம் போல் அல்லாமல் ஜனநாயக நாட்டின் தலைவர் என்ற வகையில் செயற்படவேண்டும் என ஆசைப் படுகின்றேன்.

அதாவது சட்டத்தின் முன் கொண்டுவந்து, நீதிக்கு இடம் கொடுத்து, மனித உரிமைகளை மதித்து செயற்படுவதுடன் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு பலி வாங்கும் படலத்தை நோக்கிச் செல்லாமல் இருக்கவேண்டும் என விரும்புகிறேன்.

அத்துடன் அமெரிக்காவில் வாழும் தனது பரம எதிரி யான பத்ஹுல்லா கோலானின் மீது பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இருப்பினும் சான்றுகள் முன் வைக்கப்பட்டு விசாரணைகள் மூலம் அதனை நிரூபிக்க முன்பே அவரைக் குற்றம் சாட்டுவதற்கு நான் அவசரப்பட விரும்பவில்லை.

அவ்வாறே சதிப் புரட்சியுடன் சம்பந்தம் உள்ளது என்ற சந் தேகத்திற்காக 2700 நீதிபதிகளை பதவி நீக்கம் செய்த தீர்மானத்தின் மீதும் இதேபோன்ற சந்தேகம் எனக்கு உண்டு.

ஏனெனில் ஜனநாயகத்தின் மீதுள்ள மதிப்பு சதி முயற்சியை தோல்வி காணச் செய்வதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டது. எனவே அந்த நம்பிக்கை வாழ வேண்டும். இந்த நிகழ்வுக்கு பின் பெரும் சக்தியாக அர்துகான் கணிக்கப்படுகின்றார். அதனை நான் ஆமோதிக்கின்றேன். ஆனால் அவர் மேலும் ஜனநாய ரீதியாக தொழிற்பட வேண்டும் என ஆசைப்படுகிறேன்



## என்னிடமிருந்து.... (07 ஆம் பக்கத் தொடர்)

நான் வேண்டுவது என்னவெனில், அவ்விரண்டில் ஒன்றை செய்யுமாறும் தனது தேர்தல் தொகுதியின் முன்னேற்றத்திற்கு எதிர்வரும் 5 வருடத்திற்குள் நான் இன்னின்ன விடயங்களை அபிவிருத்தி செய்யவுள்ளேன் என்பதாக அவர்களுடைய அமைச்சருக்கு சொல்வதற்கு இடமளியுங்கள் என்பதையாகும். அப்போது 5 வருடங்களின் பின்னர் அதனை பரிசிலித்துப் பார்க்க உங்களுடைய பிரஜைகளுக்கு முடிகிறது. குறிப்பிட்ட அமைச்சர் வாக்குறுதிகளாக எவற்றை முன்வைத்தார். உண்மையில் அவர் என்ன செய்திருக்கிறார் என்பதை பார்க்க முடியும்.

- **தலைமைத்துவம் தொடர்பில் நீங்கள் வகிக்கும் நிலைப்பாடுகள் என்ன? நீங்கள் எவ்வாறான பண்புகளின் காரணமாக தலைவரொருவராக உருவாகினீர்கள்?**

நான் உலகிலுள்ள சிரேஷ்ட தலைவர்களது மேலான பண்புகளை தேடிப் பார்த்தேன். ஒரு வருக் கொருவர் வேறுபட்ட அவ யானங்கள் இருப்பதை கண்டேன். அவ்வெல்லோருக்குமுள்ள பொதுவானதொரு அடையாளத்தையும் கண்டேன். என்னால் வழங்க முடியுமானது என்ன? என்னால் வழங்க முடியுமான அந்தக் குணங்கள் என்ன?

சிறியதொரு குழந்தையையும் ஒரு இளைஞனையும் ஒரு வயோதிபரையும் ஒரு தலைவரையும் எடுத்துக்கொள்வோம். நீங்கள் தலைவர் பற்றி கேட்டதனால் குழந்தை சொல்லும் 'எனக்கு நீங்கள் தாருங்கள்' என்று. அது சாதாரண மனித இயல்பு. இளைஞன் கூறுவான் 'அதை நீங்கள் கணக்கில் எடுக்க வேண்டாம். அதை நான் செய்து தருகிறேன்' என்று. வயோதிபர் கேட்பார், 'நாங்கள் ஒன்றிணைந்து இவ்வேலையை செய்வோமா?' என்று. தலைவர் சொல்வார், 'நான் எதை தர வேண்டும்?' என்று.

'எனக்கு உங்களைத் தாருங்கள்' என்பதாக குழந்தை சொன்னது. 3-4 வயது குழந்தை. ஆனால் தலைவர் 'என்னிடமிருந்து எது அவசியம்' என்று கூறுவார். அதுவே [illegible] என்னிடமிருந்து என்ன வேண்டும் என்னிடமிருந்து என்ன வேண்டும். என்னிடமிருந்து என்ன வேண்டும்.

- **இளைஞர் யுவதிகள் தங்களது ஆற்றலின் உயரிய பெறுபேறுகளை அடைந்துகொள்ள எவ்வாறான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்?இலங்கை வாழ் இளம் சந்ததி யினருக்கு நீங்கள் கூற விரும்பும் செய்திகள் என்ன?**

இளைஞர் யுவதிகளுக்கு 20 வயது பூர்த்தியாவதற்கு முன்னர் அவர்களிடம் இலக்கொன்று இருக்க வேண்டும். அவ்விலக்கிற்காக வேண்டி அவர்களுடைய பெற்றோர்கள், ஆசிரியர்கள் உதவ வேண்டும். பெரியதொரு இலக்கு இருந்தால் மாத்திரம் போதாது. தினந்தோறும் அவர்கள் அறிவை திரட்டிக்கொள்ள வேண்டும். பெறுமதியான புத்தகங்களை வாசித்து, உன்னதமான ஆசிரியர்களுடன் நெருக்கமாக பழகி, மேலான மனிதர்களிடம் கேட்டறிந்து அறிவை திரட்ட வேண்டும்.

மறந்து விடாதீர்கள். உலகில் பெரும்பாலானவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது சில சந்தர்ப்பங்களில் தலைவர்கள் தூங்குவதில்லை. [illegible] ஈடுபடுவார்கள். பிரச்சினைகளுக்கு [illegible] அதனை தோற்கடிக்க வேண்டும். இது நான் கூறும் செய்தியல்ல. 13ம் நூற்றாண்டில் வசித்த சிரேஷ்ட கவிஞரான ரூமி கூறிய செய்தியையே நான் இலங்கையின் இளைஞர்களுக்கு பொருத்தமான முறையில் வடிவமைத்தேன்.

நேற்று 15 வயது மதிக்கத்தக்க மாணவர்கள் என் முன்னால் வாக்குறுதியொன்றை தந்தார்கள். அது இவ்வாறு உள்ளது. 'நான் மிகவும் மேலே பறந்து செல்வேன்' அதை எப்படி என்று நான் சொல்லிக் கொடுத்தேன். நேற்று இம்மாணவர்கள் இவ்வகையில் சத்தியப் பிரமாணம் செய்தார்கள். நான் ஒரு ஆற்றல் மிக்கவனாகவே பிறந்துள்ளேன். நான் நம்பிக்கையுடனும் நலனுக்காகவுமே பிறந்துள்ளேன். நான் பிறந்திருப்பது கனவுகளு டனும் கருத்துக்களுடனுமாகும். நான் சிரேஷ்ட மானவனாகவும், உன்னதமானவனாகவும் பிறந்துள்ளேன். நான் பிறந்திருப்பது சுய நம்பிக்கையுடன். நான் தைரியத்தோடு பிறந்தேன். நான் பிரச்சினையை தோற்கடித்து வெற்றிகொள்வேன். நான் இறக்கை களுடனே பிறந்துள்ளேன். அதனால் நான் ஊர்வ தில்லை. எனக்கு இறக்கைகள் உள்ளன. நான் பறந்து பறந்து பறந்து மேலே செல்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமூகத்தின் சுகாதாரப் பிரச்சினை




நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் Sri Lanka Journal of Diabates Endocrinology and Matabolism எனும் இதழ் வெளியிட்ட ஓர் அறிக்கையின்படி இலங்கையின் தொற்றா நோய்களில் மிக ஆபத்தானதாகக் கருதப்படும் நீரிழிவு நோயினால் இலங்கையில் ஐந்தில் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

இன ரீதியான விகிதாசாரத்தையும் இந்த ஆய்விதழ் வெளியிட்டுள்ளது. அதன்படி இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை 21.6 வீதமானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, இந்த இதழின் தகவல்களின்படி இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் நகர்ப் புறங்களைச் சேர்ந்தவர்கள். எந்திரமயமான வாழ்க்கை, அவசரம், ஓய்வின்மை, மன இறுக்கம், பரபரப்பும் சோலியும் நிறைந்த தொழில்கள், அதிவேக உணவுப் பழக்கம் போன்ற பல்வேறு காரணிகள் நகர மக்களிடையே நீரிழிவின் தாக்கம் அதிகமாக இருப்பதற்கான காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலைத்தேய, வளர்ச்சியடைந்த நாடுகளில் நீரிழிவு நோயின் தாக்கம் வேகமாகப் பரவிச் செல்கின்றது. அமெரிக்கா, கனடா, பிரிட்டன் உள்ளிட்டு பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவிலான மக்களை இந்நோய் பாதித்துள்ளது.

கிராமப்புறங்களில் அன்றாடம் கடின வேலைகளில் ஈடுபடுவோர், உடல் உழைப்பில் அதிக நேரத்தை செலவளிப்போர் மத்தியில் ஒப்பீட்டு ரீதியில் நீரிழிவின் தாக்கம் குறைவாகவே உள்ளது. இலங்கைச் சூழலில் நகர்ப்புற மக்கள் அதிகளவு இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களிலும் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களே இதன் தாக்கத்திற்கு அதிகம் ஆட்பட்டுள்ளனர். அவர்களின் வீதாசாரம் 28.9 என இந்த ஆய்விதழ் கூறுகின்றது.

இன ரீதியில் சிங்களவர்கள் மத்தியில் 16.8 வீதமானோரும் இலங்கைத் தமிழர்களில் 3.7 வீதமானோரும் நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீரிழிவு ஏற்படுவதற்கு பரம்பரை, வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம், அதிக உடற் பருமன், உடற்பயிற்சியின்மை போன்ற பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் மனஅழுத்தமும் உணவுப் பழக்கமும் பிரதான காரணங்களாக அடையாளம் காணப்படுகின்றன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பிரதேச ரீதியான ஆய்வொன்று இதனை உறுதி செய்துள்ளது.

உள ஆரோக்கியத்தில் ஏற்படும் பாதிப்பானது மன அழுத்தம், மனச்சோர்வு என்பவற்றை உருவாக்குகின்றது. ஒருவர் அதிக உடற் பருமனைக் கொண்டிருக்கும்போது மனஅழுத்தத்திற்கு ஆட்பட்டால் அவருக்கு நீரிழிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. உடற் பருமன் அதிகம் உள்ள எல்லோருக்கும் நீரிழிவு கண்டிப்பாக ஏற்படும் என்று கூற முடியாது. பரம்பரை அலகும் உளச் சமநிலையின்மையும் உடற் பருமனை விட முக்கிய பங்காற்றுவதை சில ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இலங்கை முஸ்லிம்களிடையேயும் இக்காரணி கருத்திற் கொள்ளத்தக்கது.

சமூகத்தில் உள ஆரோக்கியத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இதன் தாக்கம் அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

# பல்கலைக்கழக அனுமதி குறித்து மாணவர்கள் அறிய வேண்டியவை

மந்தரீஸ்

பாடசாலை பரீட்சார்த்திகளாக பரீட்சைக்குத் தோற்றியவர்களைப் பொறுத்தவரை, பாடசாலை பரீட்சார்த் திகளால் வழங்கப்பட்ட தகவல்கள் சரியானவை என பாடசாலையின் ஆவணங்களின்படி அப்பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றியோர் தமது அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

1. பாடசாலை விலகல் சான்றிதழின் மூலப் பிரதி (Original of School Leaving Certificate)

2. மாவட்ட தேர்தல் அலவலகத்திலிருந்து பெறப்பட்ட தேர்தல் தொகுதி இடாப்பின் பிரித்தெடுப்பு (Extracts of Electoral Register) உதாரணமாக 2014 ஆம் ஆண்டு தோற்றியோருக்கு 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுக்குரியவை அவசியம்.

3. பிரதேச செயலாளரால் மேல் ஒப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழ் மூலப் பிரதி. (Original of the Grama Sevaka Cetificate)

பின்வரும் மாணவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது வளாகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் உள்வாரி மாணவர்களாக அனுமதி கோர தகுதியற்றவர்கள் ஆவர்.




1. க.பொ.த. உயர் தர பரீட்சையில் 3 தடவைக்கு மேல் தோற்றியோர்.
2. 2. பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது வளாகத்தில் அல்லது நிறுவனத்தில் உள்வாரி மாணவர்களாக முதல் கற்கைநெறியொன்றை பதிவு செய்தவர்.
3. இலங்கையின் வேறு ஏதாவது பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் -1978 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம் தவிர்ந்த- தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதல் பட்டநெறிக்காக உள்வாரி மாணவனாக பதிவு செய்தவர்.
4. உள்வாரி மாணவனாக ஒரு கல்விக் கல்லூரியில் அல்லது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பதிவுசெய்துள்ள மாணவன்.
5. முதலாவது பட்ட மட்டத்தில் (Bachelor Degree) பயிற்சிநெறி ஒன்றுக்காக உயர் கல்வி அமைச்சின் மூலம் வெளிநாட்டுப் புலமைப் பரிசில் ஒன்றுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள்.
6. இலங்கை உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழுள்ள ஒரு நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமாவுக்கு இட்டுச் செல்லும் கற்கைநெறிக்கு அல்லது தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையினரின் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தின் இயந்திரவியல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா போன்ற கற்கை நெறியொன்றை முழு நேர மாணவனாகப் பயில்வதற்கு பதிவுசெய்துள்ள மாணவன்.
7. முதலாவது பட்டமொன்றை அல்லது அது தொடர்புடைய தகைமையை மேலே 2, 3, 4, 5, 6 இன் தனிப்பிட்ட நிறுவனங்களில் ஏற்கனவே பெற்ற மாணவர்கள்.
8. பல்கலைக்கழக அனுமதிக்காக பிழையான தகவல்களை வழங்கி, போலியான ஆவணங்களை சமர்ப்பித்த மாணவர்கள்.

இருந்த போதிலும் மேலே ஐந்தில் குறிப்பிடப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பதிவு செய்துள்ள மாணவர்கள் பதிவுசெய்வதற்கான முடிவுத் திகதியிலிருந்து 60 நாட்களைக் கொண்ட காலமொன்றினுள் தமது பதிவை இரத்துச் செய்திருந்தால் மட்டுமே பின்னரான ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் ஒரு பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியொன்றுக்காக விண்ணப்பிக்க முடியும்.

மேலும் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் தமது பதிவை மீளப் பெறாதவர்களும் அத்துடன் மேற்படி 5 இல் குறிப்பிட்ட நிறுவனங்களில் கல்வியைப் பெற வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கும் இச்சலுகை வழங்கப்பட மாட்டாது.

# கற்றலும் வறுமையும்



அபூ ஆகிப் ஸெய்ன்

கற்றல் வறுமைக்குத் தடையா?

வறுமையோடு போராடும் மனிதர்கள் குறிப்பாக, இளமைப் பருவத்திலும் மாணவப் பருவத்திலும் உள்ளவர்கள் கல்வியிலிருந்து இடையில் சறுக்கி விழுவதற்கு வறுமை ஒரு காரணமாக இருக்கின்றது. விலக்காக வறுமையோடு போராடிக் கொண்டே அதன் பொறியில் சிக்கி விடாது, தன்னம்பிக்கையோடு தடைகளைத் தாண்டிச் சென்று முன்னேறியவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

உலகில் மிகப் பெரும் சாதனைகளை நிகழ்த்தியவர்களும் பரந்தளவிலான செல்வாக்கைப் பதித்தவர்களும் வறுமையோடு பெரும் போராட்டம் நடத்தியுள்ளனர். வாழ்க்கைக்குக் குறுக்காக வறுமை நின்ற தருணத்தில் அதனைக் கடந்து சென்று காலத்தால் அழியாத சாதனையை எதிர்கால சந்ததியிடம் கையளித்துச் சென்றுள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன், வாழ்வின் அரைவாசியை சிறையில் கழித்து தென்னாபிரிக்காவில் ஜனாதிபதியாய் தலைநிமிர்ந்த நெல்சன் மண்டேலா, துருக்கியின் இன்றைய ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகான் என்று அவர்களுக்கு ஒரு பட்டியலே உள்ளது. அவர்களைப் பொறுத்தவரை பாறைகளின் இடுக்கில் முளைத்தது செடியல்ல நம்பிக்கை.

தன்னம்பிக்கையுள்ள மனிதனுக்கு தான் பிறந்த குடும்பம் குறித்தோ நோய் குறித்தோ வறுமை குறித்தோ எந்தப் பயமும் இல்லை. தயக்கமோ தாழ்வு மனப்பான்மையோ இல்லை. அதனால்தான் வறுமை பலரை வார்த்தெடுத்துள்ளது. வறுமையில் பிறப்பது நமது தவறல்ல. வறுமையோடு இறப்பதே நாம் செய்யும் மகா தவறு. வறுமை நேர்மையாளனின் நண்பன். வாழ்ந்து காட்டியவர்களின் கைத்தடி. வீரம் மிக்கவர்களின் விளை நிலம். சோம்பேறிகளின் ஊக்க மாத்திரை.

இந்திய அரசியலில் 1930 களில் பேசப்பட்ட ஓர் ஆளுமையே சீனிவாச சாஸ்த்திரி. இவர் இந்திய நாட்டின் பிரதிநிதியாக லண்டன் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டவர். பலமுறை அவரது ஆங்கில மொழிப் புலமையைக் கண்டு ஆங்கிலேயர்களே மலைத்துப் போனார்கள். 'வெள்ளி நாக்கு' கொண்டவர் என போற்றப்பட்ட அவர், மாணவப் பருவத்தில் கடும் வறுமையை எதிர்கொண்டவர். உண்பதற்கு, உடுப்பதற்கு திராணியற்று தட்டழிந்தவர். அவரது பெற்றோர் மிகவும் வறியவர்கள். பாடசாலை செல்லும் காலத்தில் உண்பதற்கும் உடுப்பதற்கும் வழியில்லாது திண்டாடியவர். ஆனால், அவரது வறுமை அவரது கல்விக்கு எந்தவகையிலும் தடையாக இருப்பதை அவர் அனுமதிக்கவில்லை.

அவர் ஒரு நாள் மேல் சட்டையை அணியாமலேயே பாடசாலை சென்றுவிட்டார். அதைக் கண்ணுற்ற பாடசாலை அதிபர் எட்டு அணா அபராதம் விதித்து விட்டார். ஏன் மேல் சட்டை அணியாமல் வந்தீர் என்று விசாரித்தார். அப்போது எனக்கு ஒரேயொரு மேல்சட்டைதான் உள்ளது. அது நேற்று மழையில் நனைந்து விட்டது. அதனால் சட்டையில்லாமலே வந்துவிட்டேன். எட்டு அணா என்னிடமிருந்தால் புதிதாக நானே சட்டையொன்றை வாங்கியிருப்பேனே என்று புத்திசாதுரியமாய் பதில் தந்தார்.

அதைக் கேட்ட பாடசாலை அதிபர் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாவை சாஸ்திரியிடம் நீட்டினார். இதைக் கொண்டு ஒரு சட்டையை வாங்கிக்கொள் என்றார்.

இப்படி வறுமையோடு போராடிய மனிதர்கள் தன்னம்பிக்கையினாலும் இலட்சிய வேட்கையினாலும் பிற்காலத்தில் உயர்ந்து நின்றார்கள் என்பதற்கு உதாரணங்கள் ஏராளம். எனவே மாணவப் பருவத்திலுள்ளோர் தமது பெற்றோரின் வறுமையை எண்ணி மனம் வெதும்ப வேண்டியதில்லை. எல்லா வசதிகளோடும் இருப்பவர்கள் தேவை உணர்ந்து கற்பதில்லை. வசதி வாய்ப்பு எதுவுமற்றவர்கள் அதைப் பெறுவதற்கான கருவியாக கல்வியைப் பயன்படுத்துவர்.

கற்றல் ஒரு வாய்ப்பாகும். எனவே பாடசாலைக் காலங்களில் நாம் எதிர்கொண்டுள்ள வறுமையை விரட்டியடிப்பதற்கு கற்றலையே ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும். வறுமை கல்விக்கு எந்த வகையிலும் தடையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.கா. வில் (1ம் பக்கத் தொடர்)



திறந்து வைக்கப்பட்ட போது, அதனை முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமாகப் பிரகடனம் செய்து, இலங்கைச் சமூகத்துக்கு அவர் கையளித்தார். தற்பொழுது இந்தக் காணி, கட்டடத்தின் சட்ட ரீதியான உரிமை யாரிடம் உள்ளது எனவும், இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் தொடர்பிலும் கட்சியின் தவிசாளராகிய தமக்கு இரண்டு வாரங்களில் அறியத்தருமாறு பசீர் சேகு தாவூத், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமை கேட்டிருந்தார்.

இரு வாரங்களுக்குள் இதற்குப் பதில் கிடைக்காவிட்டால், உங்களுக்கு இது பற்றிய பூரண தகவல் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே உள்நோக்குடன் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களுக்கும், குறிப்பாக கட்சியின் தவிசாளரான எனக்கும் மிகவும் அத்தியாவசியமாகத் தெரிந்திருக்க வேண்டிய கட்சியின் நம்பிக்கைச் சொத்துக்கள், அச்சொத்துக்களின் மூலம் கட்சிக்குச் சேரும் வருமானங்கள் பற்றிய தகவல்களை தாங்கள் வேண்டுமென்றே மறைக்கிறீர்கள் என்பதுடன் நம்பிக்கைச் சொத்துக்களின் வருமானம், பராமரிப்பு தொடர்பில் நீங்கள் கரிசனையற்றுச் செயற்படுகிறீர்கள் என்பதும் வெளிச்சமாகும் என பசீர் சேகு தாவூத், ரவூப் ஹக்கீமுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். 13.07.2016 ஆம் திகதியிடப்பட்ட இந்தக் கடிதத்துக்கு இரு வாரங்களாகியும் இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

## பக்கத்துப் பாடசாலை... (1ம் பக்கத் தொடர்)

கொழும்பு மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவரே கொழும்பு மாவட்ட முஸ்லிம்களின் கல்விக்குத் தடையாகச் செயற்படுவதாக அவர் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கொழும்பிலுள்ள முஸ்லிம் மாணவர்களுக்கு கொழும்பிலுள்ள நாலந்தா, ஆனந்தா முதலான பிரபல பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்படுவதாகவும், கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படாதிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், இதன் காரணமாக மத்திய கொழும்பிலுள்ள மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலயம், ஹேமமாலி பாலிகா வித்தியாலயம் இரண்டையும் இந்தத் திட்டத்தினுள் உள்ளீர்ப்ப



தற்கு தாம் நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்வாரம் நடைபெற்ற கொழும்பு கல்வி வலயத்திற்கான அபிவிருத்திக் கூட்டத்தின் போது இவர்கள் மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் வித்தியாலயத்தை 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்திலிருந்து நீக்குமாறு குறித்த அரசியல்வாதி கடிதம் சமர்பித்திருப்பதாகவும் ,இது கொழும்பு கல்வி வரலாற்றில் ஒரு கரும் புள்ளியாகும் எனவும் இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் முஜிபுர் ரஹ்மான் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சதொச ஊழல்... (1ம் பக்கத் தொடர்)



இதில் 10 கோடி ரூபா, வழமையான ஒழுங்குகளுக்கு மாற்றமாக கொழும்பிலுள்ள ஒரு வர்த்தகருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது ஏன் வழங்கப்பட்டது என்பது தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களம் கேள்வி எழுப்பியிருந்தது. பின்னர் நடைபெற்ற அரிசி வியாபாரத்தில் இவருக்கு வழங்கப்பட்ட 150 கோடி, 30 கோடி ரூபாக்கள் தொடர்பிலும் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது. இது தொடர்பான பூர்வாங்க அறிக்கை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள போதும் சில அழுத்தங்களின் காரணமாக இந்த அறிக்கை வெளியிடப்படவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 272,000 மெ.தொன் அரிசி பாவனைக்கு உகந்ததல்ல என முத்திரை குத்தப்பட்டு விலங்குணவுக்கென ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இது பிரிமா நிறுவனத்துக்கு விற்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. இவை தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன் என ராவய பத்திரிகையின் கட்டுரையொன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## வடக்கிலிருந்து.... (01 ஆம் பக்கத் தொடர்)

நீதிப் பொறி முறையில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் சுமார் 25வருட கால யுத்தத்தினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்களுக்கு சர்வதேச நிபந்தனைகளுக்கமைய நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அம் மக்கள் வேண்டிக் கொண்டனர்.

மேலும், கடந்த 1990 ஆண்டுக்கு முன்னர் வடமாகாண முஸ்லிம்களிலிருந்து புலிகளால் கொல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டோர், கொலை செய்யப்பட்டோர், கடத்தலுக்கு உட்பட்டோர், உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளானோர் ஆகியோருக்கு நியாயமான தீர்வினை இப்பொறிமுறையின் மூலமாக அரசாங்கம் பெற்றுத்தர வேண்டுமென அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

பிரதமரினால் நியமிக்கப்பட்ட இக்குழுச் சந்திப்பு 30ஆம் திகதி மன்னாரிலும் 01ஆம் திகதி, நாநாட்டர் பிரதேச செயலக கட்டடத்திலும் நடைபெறுகின்றது. அக்கூட்டங்களில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து அக்குழுவில் சாட் சியமளிப்பதோடு தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து நஷ்டஈட்டைக் கோருமாறும் வேண்டப்படுகின்றனர்.

மேலதிக வலய செயலணி தொடர்பாக உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் (ஊடகப் பேச்சாளர்) அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். 07722008774

## Daily FT .... (01 ஆம் பக்கத் தொடர்)



இடமளிக்க முடியாது எனக் குறிப்பிட்டதனைத் தொடர்ந்தே நிஸ்தார் காஸிம் அவர்கள் குழப்பமைடைந்திருப்பதாகவும் அதன் பின்னர் அவர் சுகவீனமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விஜய பத்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரன்ஜித் விஜேவர்த்தன நிஸ்தார் காஸிமை சில காலம் ஓய்வை கழித்து வருமாறு சிங்கப்பூருக்கு அனுப்பியிருப்பதாக குறிப்பிடப்படுகிறது. அதேபோன்று டெய்லி மிரர் பத்திரிகையின் ஆசிரியர் கேசர அபேவர்த்தனவையும் இவ்வாறு சில தினங்களுக்கு வெளிநாடொன்றுக்கு அனுப்புவதற்கு விஜய பத்திரிகையின் தலைவர் எதிர்பார்த்திருப்பதாகவும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஐ.எஸ் இயக்கம்... (1ம் பக்கத் தொடர்)

ஆரம்ப காலம் முதலே ஐஎஸ் இன் செயற்பாடுகளை கண்டித்து வருகின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கடந்த வாரம் கண்டியில் நடைபெற்ற மாவட்ட மற்றும் பிரதேசக் கிளைகளின் பதவி தாங்குனர்களுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இந்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. 25 மாவட்டக் கிளைகளையும், 120 பிரதேசக் கிளைகளையும் சேர்ந்த 400க்கு மேற்பட்ட பதவி தாங்குனர்கள் இந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் 07 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) எமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இன நல்லிணக்கத்துடன் வாழும் நிலையில், சில இனவாத சக்திகளின் செயற்பாடுகள் பொதுவாக நாடும் குறிப்பாக முஸ்லிம் சமூகமும் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளன. பொதுவாக நாட்டில் வாழும் அனைத்து இனங்களினதும் குறிப்பாக முஸ்லிம்களினதும் உரிமைகளுக்கும் உணர்வுகளுக்கும் அரசும் அரச அதிகாரிகளும் மதிப்பளித்து இனவாத செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க ஆவன செய்யுமாறு இம்மாநாடு அரசை வேண்டிக்கொள்கிறது.

2) இந்நாட்டில் வாழும் சகல இனங்கள் மத்தியிலும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென இம்மாநாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது. அதேபோன்று எந்த ஒரு நிந்தனையான பேச்சையும் அரசு அனுமதிக்கக் கூடாதெனவும் அதனைத் தடுக்கும் வகையிலான சட்டங்களை அரசு அவசரமாக இயற்ற வேண்டும் எனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

3) நம்நாட்டில் சமூக நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்பும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேதகு ஜனாதிபதி அவர்கள் சமயங்களுக்கிடையிலான ஓர் உயர் ஆலோசனைச் சபையை நியமித்துள்ளதை இம்மாநாடு வரவேற்பதோடு சபையின் பணிகள் எல்லா வகையிலும் வெற்றிகரமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றது.

4) ஐ.எஸ் இயக்கம் இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமான இயக்கம் என்றும் அவ்வியகத்தின் தீவிரவாத செயற்பாடுகள் அனைத்தையும் இம்மாநாடு முற்றிலும் நிராகரிப்பதோடு, அவற்றின் செயற்பாடுகள் எவ்விதத்திலும் இஸ்லாமிய போதனைகளுக்கு உட்பட்டதல்ல என்றும் இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது. மேலும் உலக மட்டத்தில் இவ்வியக்கத்தையும் அதன் செயற்பாடுகளையும் அதன் ஆரம்ப காலத்திலேயே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கண்டித்தது என்பதையும் இம்மாநாடு இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றது.

5) சமூகத்தின் நலனையும் அதன் ஸ்திரப்பாட்டையும் கருத்திற் கொண்டு தஃவாப் பணியில் ஈடுபடும் ஆலிம்களும், ஏனைய தஃவாப் பணியாளர்களும் கருத்து வேற்றுமைகளைப் புறந்தள்ளி, பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் தஃவாப் பணியை முன்னெடுக்க வேண்டும் என்றும், எப்போதும் பிறர் இஸ்லாத்தை தவறாகப் புரிந்து கொள்ளாதிருக்கும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் இம்மாநாடு சகலரையும் கேட்டுக் கொள்கிறது.

6) நீண்ட காலமாக அரச பாடசாலைகளில் அறபு, இஸ்லாம் பாடங்களைப் போதிக்க ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படாதிருப்பது மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவ தால் புதிதாக அறபு, இஸ்லாம் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவசரமாக எடுக்குமாறும், அவ்வாறு சேர்த்துக் கொள்ளும்போது மத்ரஸாக்களினால் வழங்கப்பட்ட மௌலவி, அஷ்-ஷைக் சான்றிதழை ஒரு முக்கிய தகைமையாகக் கொள்ளுமாறும் ஜனாதிபதி அவர்களையும் கல்வி அமைச்சரையும் கல்வி உயர் அதிகாரிகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

7) கதீப்மார்கள் தமது குத்பாக்களை வினைத்திறன் மிக்கதாகவும் சமூக நல்லிணக்கத்தைத் தூண்டும் வகையிலும் அமைத்துக் கொள்ள வேண்டுமெனவும் உரிய நேரத்தில் குத்பாக்களை முடித்துக் கொள்ள வேண்டுமெனவும் இம்மாநாடு அனைத்து கதீப்மார்களையும் கேட்டுக் கொள்கிறது.

15 வருடங்களுக்கு மேலாக தலைமைப் பதவி வகிக்கின்ற அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி அவர்களே இம்முறையும் தலைவராக இக்கூட்டத்திலே தெரிவு செய்யப்பட்டார்.

## கருச் சிதைக்கப்பட்ட... (9ம் பக்கத் தொடர்)

**எதிர்காலத்தில் மீளவும் இத்தகைய இராணுவ சதிப் புரட்சிகள் துருக்கியில் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா?**

இது மிகச் சிக்கலான எதிர்வு கூறுவதற்குக் கடினமான ஒரு கேள்வி. சமீபத்திய ஜூலைப் புரட்சியின் போக்குகளையும் அதற்குப் பிந்திய நிலைமைகளையும் உன்னிப்பாக நோக்கும்போது மீளவும் புரட்சிக்கான வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகின்றது. இராணுவத்தின் மனோநிலையைப் பொறுத்த விடயமே இது என்பதனால் இது குறித்து எதிர்வு கூற முடியாது. ஆனால் களநிலவரங்கள் அரசாங்கத்திற்குச் சார்பாக மாற்றமடைந்து வருவதனால் கிட்டிய எதிர்காலத்தில் எந்தவொரு இராணுவப் புரட்சியும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்றே கூறலாம்.

## வடக்கு கிழக்கு.... (05 ஆம் பக்கத் தொடர்)



குறைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்திருந்தபோது தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், பின்னர் தனிச் சிங்களச் சட்டம் 1956 இல் நிறைவேற்றப் பட்டது.

பெரும்பான்மையினம் தமிழ் பேசும் இனங்களின் பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனர். விஷேடமாக கிழக்கு மாகாணத்தில் குடியேற்றங்கள் மிகத் தீவிரமாக இடம்பெற்றிருந்தன. எமது நாட்டில் 1947 ஆம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சிங்கள மக்களின் இயற்கையான அதிகரிப்பு 2.5 வீதமாகும். இக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் அதிகரிப்பு வீதம் 9 ஆகும். தற்போதும் வடக்கு மாகாணத்தில் இவ்விதமான நிகழ்வுகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காரணத்தின் நிமித்தம் தான் வடக்குக் கிழக்கு இணைந்திருக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை திடமாக வலியுறுத்துகின்றோம். இதனை முஸ்லிம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். முஸ்லிம் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

சம்பந்தர் போன்று இன்னும் பல தமிழ் அரசியல் தலைமைகள் முஸ்லிம்-தமிழர் ஒற்றுமை குறித்து முழங்கி வருகின்றனர். தமிழ் தரப்புக்கு வழங்கப்படும் எந்தத் தீர்வுத் திட்டத்திற்கும் முஸ்லிம்கள் எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனியான அதிகாரப் பகிர்வு குறித்த விவாதமும் காலம் கடந்தது. மீளவும் கரையோர மாவட்டம் என்றோ, நிலத் தொடர்பற்ற மாகாண சபை என்றோ பேச வெளிக்கிடுவது நடைமுறை அரசியல் யதார்த்தத்திற்கு மிகவும் அந்நியமானவை.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் நிபந்தனையுடனான இணைப்பை ஏற்பதோ நிபந்தனையற்ற இணைப்பை ஏற்பதோ இரண்டும் பெரும் அரசியல் துரோகமாகவே எதிர்காலத்தில் பார்க்கப்படும். இது குறித்து முடிவு செய்யும் தார்மீக அருகதை முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு இல்லை என்பதை சிவில் சமூகம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆக, வடக்குக் கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தான் வடக்குக் கிழக்கு வாழ் முஸ்லிம் சிவில் சமூகத்தின் தெளிவான நிலைப்பாடாகும். கருத்துக் கணிப்புகளும், பிரதேச ரீதியான கலந்துரையாடல்களும் இதனை உறுதி செய்துள்ளது.

## பல்கலைக்கழகங்களும்.... (05 ஆம் பக்கத் தொடர்)

வெளிக்கொணரப்பட வேண்டும். அதற்கென பல்கலைக்கழகத்தோடு இணைந்த வெளியீட்டு நிறுவனங்களும் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் இம் மூன்றிலுமே தமது கவனத்தைக் குவிக்க வேண்டும்.



இலங்கைச் சூழலில் இன்று பல்கலைக்கழகக் கல்வி திசை மாறிச் சென்று கொண்டிருக்கின்றது. பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் வன்முறைகள், பகிடிவதைகள், அரசியல் குழுக்களின் தோற்றம், வாரம் தப்பாமல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் இவற்றைக் காணும்போது பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கங்கள் அடையப் பெறவில்லை எனவும், உயர் கல்வி எங்கே திசை மாறிச் செல்கின்றது என்பதும் உறுதியாகின்றது.

பன்மைச் சமூகம் நிலவும் இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லுறவை உருவாக்குவதற்காக சிறந்த இடங்களில் ஒன்று பல்கலைக்கழகங்களே. இன்று அது மறுதலையாகச் செயல்படுவது தேசிய கல்விக் கொள்கையிலுள்ள கோளாறையே பிரதிபலிக்கின்றது.

## இருப்பதற்கென்று... (15ம் பக்கத் தொடர்)

முடியாமலேதான் இருக்கிறது. இத்தனை சீக்கிரம் அவர் மரணிப்பார் என்று நான் நினைக்கவில்லை. அவர் மரணித்து பல வருடங்களாகியும் அவர் என் நினைவில் தோன்றவே செய்கிறார்.

இப்படித்ததான் எல்லா மனிதர்களும் யாருடையவோ மரணத்திற்காக அழுது கொண்டும் வருந்திக் கொண்டும்தான் இருக்கின்றனர். நாம் விட்டுப் போகும் அழகிய செயல்களும் நினைவுகளும்தான் நம்மை இந்த உலகில் பேசுபொருளாக்குகிறது.

நமது பயணம் மரணத்தை நோக்கியே போய்க் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு மூச்சும் புதை குழிக்கு அருகாமைக்கு நம்மை அழைத்துச் செல் கிறது. நம்மைப் பற்றிப் பேசவும் கதைக்கவும் பகிரவும் நாம் என்ன சேமித்திருக்கிறோம், விட்டுச் செல்லப் போகிறோம் என்பதுதான் இந்த உலகில் நமது வாழ்க்கையை கணிப்பிடப் போதுமானது.

குமரகுருபரனின் புத்தகத் தலைப்பு தான் இதனை முடிக்கும்போது மறுபடி நினைவுக்கு வருகிறது. ''மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது'' எத்தனை பெரிய உண்மை அது.வாழ்க்கையை மறு படியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாதுதான்.

[இத்தலைப்பு எழுத்தாளர் நகுலனுக்கு சொந்தமானது. அவரது கவிதையிலிருந்து எடுத்து பயன்படுத்தியிருக்கிறேன்.]


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 13 இதழ்கள் - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 26 இதழ்கள் - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எழுதி அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 2202569 People's Bank A/c 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறீர்களா?

## சில குறிப்புகள்

student @ மீள்பார்வை
தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

**1. எல்லோரையும் நேசியுங்கள்**

உங்களிடமிருந்து அன்பை மற்றவருக்கு அனுப்புங்கள். கோபம், வெறுப்பு, கடுமை என எல்லாம் மற்றவரை என்ன செய்கிறதோ இல்லையோ உங்களை, உங்கள் ஆரோக்கியத்தைக் கடுமையாகப் பாதிக்கும். எதற்கு மற்றவர் மேல் கோபப்பட்டு உங்கள் ஆரோக்கியத்தைப் பலி கொடுக்க வேண்டும்? பதிலாக ஒவ்வொருவரையும் நேசியுங்கள். அன்பு காட்டுங்கள். எதிரில் இருக்கிறவர் கையில் இருக்கும் ஆயுதங்களை அழிக்கும் சக்தி அன்புக்கு உண்டு.

**2. கெட்டவர்கள் என்று யாரும் இல்லை**

மனதில் எந்தப் பதட்டமும் ஏற்படாதிருக்க திரும்பத் திரும்ப இதை உங்கள் மனதிற்குச் சொல்லுங்கள். நம்மைப் பொறுத்தவரை யாரும் கெடுதல் செய்பவர்கள் இல்லை. எங்கோ, என்றோ ஒரு கெட்ட விஷயத்தை ஒருவர் செய்துவிடுவார் என்ற எண்ணத்தில் எப்போதும் நாம் கெட்டவர்களைத் தேடிக்கொண்டு இருக்கிறோம். வேண்டாம். யாரும் கெட்டவர்கள் இல்லை என்று ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டு நாளைத் தொடங்கிப் பாருங்கள்.

**3. மனம் பேசுவதை கேளுங்கள்**

நாம் இந்த விடயத்தைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. நமக்காக நம் மனம் கவலைப்பட்டு முன்பாகவே சில செய்திகள் சொல்கிறது. நாம்தான் அலட்சியப் படுத்துகிறோம். ''அடடா... அப்பவே நினைச்சேன்...'' என்று நாம் கை உதறும் சந்தர்ப்பங்கள் நமக்காக நம் மனம் பேசியதைக் கேட்கத் தவறிய சந்தர்ப்பங்கள்தான். எந்த விஷயத்தையும் முடிவெடுக்கும் முன் இரண்டு நிமிடம் மனம் பக்கம் தள்ளி வையுங்கள். பின் கேளுங்கள். பின் முடிவெடுங்கள். உங்கள் மனம் உங்களைவிட உங்களுக்காக கவலைப்படுகிறது.

**4. நம்புங்கள்**

நன்றாக இருக்கிறோம் என்று நம்புங்கள். நல்லது நடக்கிறது என்று நம்புங்கள். நல்ல வழியில் போய்க் கொண்டிருக்கிறோம் என்று நம்புங்கள். நடந்த சில கசப்பான சம்பவங்களும் நல்லவற்றை அடையாளம் காட்டவே நடந்தன என்று நம்புங்கள். நம்புவது என்பது மகிழ்ச்சியின் கதவைத் திறக்க உதவும் சாவி. சந்தோஷத்தின் கதவைத் தட்டி தட்டிச் சோர்ந்து போய்விட்டதாக நினைக்கிறீர்களா? சுலபமாக கதவைத் திறந்து சந்தோஷத்தை அடைய முடியும்.

**5. தவறுகளுக்காக வெட்கப்படுங்கள்**

சில நேரம் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்துவிடுகிறோம். அந்தத் தவறுகளை மறப்பது, வெட்கப்படுவது, அவமானப்படுவது என்று மூன்று வழிகளில் எதிர்கொள்ளலாம். மறப்பதால் திரும்ப தவறு நடக்க வாய்ப்புகள் ஏற்படும். அவமானப்பட்டால் மனம் பாதிக்கும். கோபம், வெறுப்பு, சோகம் என அந்த வழி மனிதனை அழுத்தும். மூன்றாவதாக இருக்கிற வெட்கப்படுவதுதான் நல்ல வழி. நம்மையும் அழிக்காமல், திரும்பவும் நடக்க விடாமல் தடுக்கும் சக்தி அதற்கு உண்டு.

**6. சந்தோஷமாக இருப்பது உங்கள் உரிமை**

பிறக்கும்போதே எப்படி உங்களுக்குச் சில



உரிமைகள் வந்துவிடுகிறதோ அப்படியே சந்தோஷமாக இருப்பதும் வந்துவிடுகிறது. எதற்காகவும் உங்கள் உரிமைகளில் எந்த ஒன்றையும் இழக்காதீர்கள். அதுவும் சந்தோஷமாக இருக்கிற உரிமை உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிற உரிமை. அதை இழப்பதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை இழக்க வேண்டுமா என்று யோசியுங்கள்.

**7. மன்னித்துவிடுங்கள்**

எந்தத் தவறுக்காகவும் எவரையும் ஒருமுறை மன்னித்துப் பாருங்கள். மன்னிப்பு என்பது அன்பைத் திறந்து வைக்கிற சாவி. மன்னிப்பு என்பது மற்றவருக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் தேவைப்படுவது. மற்றவை மன்னிப்பது போலவே உங்களையும் நீங்கள் மன்னித்துக் கொள்ள முடியும். இது உங்கள் உடலுக்குக் கேடு தரும் எல்லா உணர்வுகளுக்கும் எதிரி.

**8. உங்கள் நாளுக்காக காத்திருங்கள்**

உங்கள் துயரம் எவ்வளவு அதிகமானது அல்லது உங்கள் தோல்வி எவ்வளவு பின்னோக்கி, தள்ளியிருக்கிறது என்பது முக்கியமானது அல்ல. அதிலிருந்து விடுபட்டு உங்கள் நாளுக்காக திடமுடன் காத்திருப்பதுதான் முக்கியமானது. உங்கள் நாள் வருகிறது என்று நம்புங்கள். அதற்காக காத்திருங்கள்.

**9. சுதந்திரத்தைப் பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்**

உங்களுக்குச் சில இடங்களில் சுதந்திரம் கிடைக்கும். சில இடங்களில் கிடைக்காது. கிடைக்காத இடத்தைப் பற்றிய அணுகுமுறை வேறானது. ஆனால் கிடைக்கிற இடத்தின் அருமையை நீங்கள் உணர வேண்டும். அந்த சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதுதான் சரியான வழி. இந்த வழி வெற்றிகளைத் தருவதைவிட, வெற்றிகளை மேலும் அதிகமாக்க உதவும் என்பதே முக்கியமானது.

**10. உங்களையே நீங்கள் எதிர்ப்பதைக் கைவிடுங்கள்.**

நாம் என்ன இப்படி இருக்கிறோம்? நாம் எதற்குமே லாயக்கில்லை? தொட்டாலே தோல்விதான்? நாம் போதுமான தகுதியுடன் இல்லையே? இப்படி எல்லாம் உங்களையே நீங்கள் எதிர்ப்பதைக் கைவிடுங்கள். ஏன் உங்களுக்கு நீங்களே எதிரியாக இருக்க வேண்டும்? எதிர்ப்பதை நிறுத்துங்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ? எவ்வளவு திறமை இருக்கிறதோ? அப்படியே உங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். வாழ்வின் மகிழ்ச்சிகரமான நாளின் முதல் பெரிய அடியை எடுத்து வையுங்கள்.

**11. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்களோ அதை மட்டும் சொல்லுங்கள்**

நீங்கள் அதிகபட்ச உயரத்தை அடைய வேண்டுமா? இந்த ஒன்றை மட்டும் பின்பற்றினால் போதும். நீங்கள் செய்ய முடிந்ததைச் சொல்லி அதைச் செய்வதற்காக முயற்சி செய்யும்போது உலகத்தின் மிக நேரான பாதை ஒன்றில் நடக்கத் தொடங்குகிறீர்கள். உங்கள் வெற்றி உங்கள் தேர்வின் அளவில் பிரதிபலிக்கும்.

**12. உலகம் ஒரு கண்ணாடி**

ஆம். உலகம் ஒரு விதத்தில் கண்ணாடி. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பிரதிபலிக்கிறது. இந்தப் பிரதிபலிப்பை உங்கள் செயல்பாடுகளே தீர்மானிக்கிறது. உங்கள் எதிரே இருக்கிற இந்தக் கண்ணாடியில் நீங்கள் எப்படித் தெரியவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள் என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

**13. திறன்பட செய்யுங்கள்**

உங்களுக்கு கிடைத்த வாய்ப்பு சிறியதாக இருக்கலாம். ஆனால், அதில் நீங்கள் செய்யும் செயல் சிறியதாக இருக்கக் கூடாது. நீங்கள் எவ்வளவு சிறப்பாக அதைச் செய்ய முடியுமோ, அவ்வளவு சிறப்பாகச் செய்யுங்கள். மனதில் சின்ன குற்ற உணர்வு கூட இல்லாமல் செய்யுங்கள். அது பல வெற்றிகளின் திறவுகோல்.

**14. எது தேவையில்லை என்று முடிவெடுங்கள்**

எது தேவை என்பதைப் போலவே எது தேவை இல்லை என்பதும் மிக முக்கியமானது. இல்லைகளை சுலபத்தில் நீக்க முடியும். தேவைகள் என்று சிலவே நிற்கும். அதில் ஒன்றை கைப்பற்றுங்கள். கண் வையுங்கள்.

நன்றி:பெட்டகம் வலைத்தளம்



# இருப்பதற்கென்று வருகிறோம் இல்லாமல் போகிறோம்

இன்ஸாப் ஸலாஹுதீன்

இன்றைய நாட்களில் அதிகமான திடீர் மரணச் செய்திகள் கேள்விப்பட்ட வண்ணமே இருக்கின்றன. நினைத்திராதவர்கள் எல்லாம் வாழ்க்கைக்கு விடை சொல்லிக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மரணச் செய்தியும் வாழ்க்கையின் பிடிமானத்தை சற்றே ஆட்டம் காணச் செய்கிறது. நமக்குப் பரிச்சயமான, அறிமுகமானவர்களின் மரணம் இரட்டிப்பு வலியைத் தருகிறது.

அண்மையில் எழுத்தாளர் குமரகுருபரனின் மரணச் செய்தி கேட்டு மனம் நெகிழ்ச்சியடைந்தது. அவரது ''மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது'' என்ற நூல் மூலம்தான் அவர் மீதான எனது வெளிச்சம் விழுந்தது. இருந்தாலும் ஒரு எழுத்தாளனின் மரணம் அந்தரங்கத்தின் இறுகிய பிடியை கொஞ்சம் தளர்த்திவிடுகிறது.

கடந்த வருடம் இது போல ஒரு மரணத்தை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. என் மனைவியின் தாத்தா ஒருவருடைய மரணம் அது.புற்றுநோயின் வாதையுடன் அவர் பல வருடங்களைக் கடத்தியவர். வைத்தியர் மரணத்திற்கு குறித்த நாளையும் கடந்து பத்து வருடங்கள் அவர் வாழ்ந்தார்.

மாதத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருவது அவரது வழக்கமாக இருந்தது.சில நாட்களில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவார். கடைசியாக அப்படித்தான் ஒரு பகல் பொழுதில் அவர் சிகிச்சைக்காகச் செல்வதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். தன் நோயின் சுமையுடன் மாடியிலிருந்து தானாகவே இறங்கி வந்தார்.அதுதான் மருத்துவமனைக்கான அவரது இறுதிப் பயணமாக இருந்தது.

அவரைப் பார்ப்பதற்காக நானும் மனைவியும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம்.அவர் நினைவைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தார்.தான் வீட்டுக்குப் போக வேண்டும் என்று மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டே இருந்தார்.

எல்லா நோயாளிகளும் சிகிச்சை முடிந்து வீடு திரும்புவோம் என்றுதான் காத்திருக்கிறார்கள். சிலர் வீடு திரும்புகிறார்கள்.சிலர் உலகத்தை விட்டே திரும்புகிறார்கள்.

சக்கர நாற்காலியில் வைத்து அவரை வெளியே அழைத்து வந்தேன். ஒரு குழந்தையின் செயலை ஒத்திருந்தது அவரது செயற்பாடுகள்.அவரை வீட்டுக்கு அழைத்துப் போவதாக அவர் நினைத்திருப்பார்.

கொழும்பில் இருக்கும் போது அவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள்.அவரது மரணத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. இரண்டு வருடம் ஒன்றாக அவரை நடமாடிப் பார்த்திருக்கிறேன். இப்போது மீளாத் துயிலில் இருந்தார்.

அவருக்கென்று குழந்தைகள் இல்லை. அவரது இறுதிக் கிரியையான தொழுகையை நானே முன்னின்று நடாத்தினேன். நமக்குப் பக்கத்தில் இருந்த ஒருவர் இல்லாமல் போகும் போது ஏற்படும் வெற்றிடத்தை எதைக் கொண்டும் நிரப்ப முடியாது. அவர் நம்முடன் வாழ்ந்தார் என்பதும் அவர் விட்டுப் போன நினைவுகளும்தான் அந்த வெற்றிடத்தை ஓரளவுக்கேனும் நிரப்ப முயற்சிக்கின்றன.அவர்கள் நம் வாழ்காலங்களில் ஒரு போதும் மீண்டும் குறுக்கிடுவதே இல்லை. நம் பாதைகளில் ஒருபோதும் அவர் நம்மைக் கடப்பதில்லை.உயிர்ப்புள்ள நினைவுகள் மட்டுமே நம்மைப் பின்தொடர்கின்றன.

ஒரு மனிதனின் வாழ்க்கையின் இறுதித் தருணங்கள் உறைகின்ற நிமிடங்களாகத்தான் தெரிகின்றது. அந்த நிமிடங்கள் அப்படியே நம்மை ஆட்கொள்கின்றன. யாரும் மரணிக்கின்ற தருணங்களில் சமீபமாக இருந்து பார்த்த அனுபவம் இல்லை. ஆனாலும் மரணத்தை எதிர்கொள்கின்ற சில தருணங்களைப் பார்த்திருக்கிறேன்.

அண்மையில் உறவுக்காரச் சிறுவன் ஒருவன் விபத்தில் சிக்கி அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தான். மருத்துவமனை ஒரு தனி உலகமாக இருக்கிறது.அந்த உலகின் நடமாட்டத்தினை நான் வெகுநேரமாகவே பார்த்துக் கொண்டிருந்தேன். துரத்தும் நினைவுகளை மருத்துவமனை எனக்குத் தந்து கொண்டே இருந்தது. சிகிச்சைக்காக வரும் நோயாளிகள்,விபத்தில் சிக்கியவர்கள்,மரணித்தவர்கள், எத்தனை வகையான நிகழ்வுகள்.

வெளியிலிருந்து பார்க்கும் போதுதான் அது எத்தனை அமைதியாகத் தெரிகிறது.உள்ளேதான் எத்தனை கண்ணீர்க் கதைகள்? கதறல்கள்?

நோயுடன் போராடும் மனிதர்களை சமீபமாக இருந்து பார்க்கும் போதுதான் வாழ்க்கை மீதான வெறுப்பும் நம்பிக்கையின்மையும் ஒருசேர ஏற்படுகிறது. இருந்தாலும் வாழ்வதை நிறுத்திவிட முடிகிறதா என்ன? வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்ற உணர்வு மறுபடியும் வாழ்க்கையின் பிடிமானத்தை இழுத்துக் கட்டுகிறது.

இப்படியாக குடும்பத்தில் நிகழ்ந்த மரணங்களை, நண்பர்களின் மரணங்களை, ஊர்க்காரர்களின் மரணங்களை நினைத்துப் பார்க்கிறேன். ஒவ்வொருவருடனும் எனக்கு ஒரு அழகிய நினைவு இருக்கத்தான் செய்கிறது.சிலருடனான நினைவுகள் அடிக்கடி ஏதோ ஒரு பொழுதில் தோன்றி மறைகின்றன.அக்கணம் அவர்களுடனான காலத்தை நோக்கி தன் சிறகுகளால் தூக்கிக் கொண்டு பறக்கின்றது.

நான் உயர்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த போது எகிப்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் இருந்தார். அவரது பெயர் அப்துஷ் ஷாபிஈ.கம்பீரமான தோற்றம் கொண்டவர்.எனக்கு அவரது கற்பித்தல் மீது அக்கறை இருக்கவில்லை. இருந்தாலும் அவருடன் கதைப்பது சுகம் விசாரிப்பது என ஒரு தொடர்பும் நேசமும் இருக்கவே செய்தது. இடைக்கிடை குடும்பம் எப்படியிருக்கிறது என்று விசாரிப்பார்.

திடீரென ஒருநாள் மாரடைப்பு வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இங்குள்ள மருத்துவமனையினை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நாங்கள் மருத்துவமனைக்குப் போனோம் .அந்த அன்பு அவரை நெகிழ்ச்சியடையச் செய்தது.கண்களில் நீர் பெருக அழுதார்.பிறகு அவர் நாட்டிற்குச் சென்று சிறிது நாட்களில் அவரது மரணச் செய்தி வந்தது.இன்றும் நான் அவரது மரணத்தை நினைத்து கவலை கொள்கிறேன். அவரது மரணத்தை ஏற்றுக் கொள்ள

(பக் - 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை கிரிக்கட் சபை – முரளிதரன் முரண்பாடு :




இலங்கைக்கெதிரான கிரிக்கட் தொடரில் விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கும் இலங்கை கிரிக்கட் சபைக்கும் இடையே கடுமையான கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. முரளிதரன் பல்லேகல மைதானத்தில் அனுமதியின்றி அவுஸ்திரேலிய அணி வீரர்களுக்கு பயிற்சி அளித்தமை தொடர்பில் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கட் சபை அவுஸ்திரேலிய கிரிக்கட் சபையிடமும் முறைப்பாடு செய்துள்ளது.

அவுஸ்திரேலிய அணி பயிற்சிப் போட்டியில் விளையாடிய மைதானத்தை சுழல் பந்துவீச்சுக்கு சாதகமான வகையில் தயார் செய்யுமாறு முரளிதரன் பணித்துள்ளதாக இலங்கை கிரிக்கட் சபையின் முகாமையாளர் சரித் சேனாநாயக்க குற்றம் சாட்டியுள்ள நிலையில் முரளிதரன் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். இலங்கை பதினொருவர் அணியுடனான பயிற்சிப் போட்டியில் அவுஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர்களான ஸ்டீவ் மற்றும் நெதன் லயன் ஆகியோர் 12 விக்கட்டுக்களை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முரளிதரனுடைய அண்மைக்கால செயற்பாடுகள் எமக்கு பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாகவும், முழு இலங்கையர்களது மனதை காயப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, முரளிதரன் தற்போது எந்த அணிக்கு பந்துவீச்சு ஆலோசகராக செயற்படுகிறாரோ அந்த அணியினாலேயே அவருக்கு கடந்த காலங்களில் பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் நாம்தான் அவரைக் காப்பாற்றினோம். ஒரு தடவை அல்ல. அவருக்காக மூன்று தடவைகள் போராடி இருக்கிறோம் எனவும் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் முரளியின் நடவடிக்கை தொடர்பில் அதிருப்தியில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள முரளிதரன் நிசந்த ரணதுங்க கிரிக்கட் சபைத் தலைவராக இருந்த காலத்தில் அவர் என்னை அழைத்து எமது சுழல் பந்துவீச்சாளர்களுக்கு பயிற்சி அளிக்குமாறு வேண்டினார். நானும் அந்த வேண்டுகோளை மகிழ்ச்சியோடு ஏற்று நிறைவேற்றினேன். அதன் பிறகு இலங்கை கிரிக்கட் சபை சார்பாக என்னை யாரும் தொடர்பு கொள்ளவில்லை எனவும் இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்னர் இலங்கை கிரிக்கட் சபை பந்துவீச்சு ஆலோசகராக செயற்படுமாறு என்னை வேண்டியிருந்தால் நிச்சயம் அந்தக் கோரிக்கையை நான் ஏற்றிருப்பேன். ஆனால் அவர்கள் என்னை நியமிக்க விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவுஸ்திரேலிய கிரிக்கட் சபை என்னைத் தொடர்பு கொண்டு இந்தத் தொடர் முழுவதும் என்னை பயிற்சியாளராக செயற்படுமாறு வேண்டியது. என்றாலும் 10 நாட்கள் மாத்திரமே அப்பணியை தன்னால் செய்ய முடியும் எனவும் தனது தாய்நாட்டிற்கெதிராக விளையாடும் அணியோடு ஒரே அறையில் தங்கியிருக்க எனது மனசாட்சி ஒரு போதும் இடம் தராது எனவும் முரளிதரன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக முரளிதரனுக்கு எதிராக இலங்கை கிரிக்கட் சபையினால் முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. முரளிதரன் இலங்கைக்கு எதிராக விளையாடும் அணிகளுக்கு பயிற்சி அளிக்கிறார், தான் பல வருட காலம் விளையாடிய அணியை மறந்து விட்டார் போன்ற குற்றச்சாட்டுக்கள் சிறுபிள்ளைத்தனமானவை. கிரிக்கட் சபைதான் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளரான முரளிதரனை அணுகி இலங்கை கிரிக்கட் அணியின் வளர்ச்சிக்கு அவரைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

முரளிதரன் தனது தாய்நாட்டிற்காக கிரிக்கட்டுக்கு அப்பாலும் நிறையவே பணிகளை செய்திருக்கிறார். சமூக சேவை நிறுவனம் ஒன்றை நிறுவி அதனூடாக வருடமொன்றுக்கு 50000க்கு மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறார். சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள திறமை மிக்க கிரிக்கட் வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கு பயிற்சிகளை அளித்து வருகின்றார். அதேபோன்று தான் கிரிக்கட் விளையாடிய காலத்தில் எதிர்கொண்ட பல்வேறு சவால்களின் போதும் இலங்கை மக்கள் தனக்கு வழங்கிய ஆதரவை எப்போதும் நன்றியோடு நினைவு கூருபவராகவே முரளிதரன் திகழ்கிறார்.

1995/96 காலப்பகுதியில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் எனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை மறக்கவில்லை. நான் மனமுடைந்து போயிருந்த அந்த வேளையில் முழு இலங்கையுமே எனக்கு பக்க பலமாக இருந்தது. எனது பந்துவீச்சில் சந்தேகப்பட்ட அதே அவுஸ்திரேலியா இப்போது தமது அணிக்கு பயிற்சி அளிக்குமாறு வேண்டிய சந்தர்ப்பத்தில் எனது பந்துவீச்சுப்பாணி சரியானது என்றும் அவர்களே தவறிழைத்துள்ளனர் என்பதையும் அவர்களாகவே உலகுக்கு நிரூபிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக அமைந்து விட்டது. நான் அவுஸ்திரேலிய அணிக்கு வெறும் 10 நாட்களே பயிற்சி அளித்தேன். இந்தத் தொடரில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றால் உலகில் சிறந்த பயிற்சியாளர் நானாகத்தான் இருப்பேன். அதேநேரம் இலங்கை அணிக்கு எந்த நேரத்திலும் பயிற்சி வழங்க நான் தயாராகவே இருக்கிறேன். இவ்வாறு தன் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அணியின் முன்னாள் முன்னணி சுழல் பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரன் பதில் அளித்துள்ளார்.

## முரளியை நாம் கௌரவப்படுத்த வேண்டும் - சங்கா



இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட வீரருமான குமார் சங்கக்கார முரளி - இலங்கை கிரிக்கட் சபை இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு தொடர்பில் முரளிதரனுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளார். முரளிதரன் எமது நாட்டின் விலைமதிப்பற்ற ஒரு சொத்து. அவர் தனது நாட்டை எந்தளவுக்கு நேசிக்கும் ஒருவர் என தான் அறிந்து வைத்துள்ளதாக தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சங்கக்கார, எந்த அணிக்கும் பயிற்சியாளராகவோ அல்லது ஆலோசகராகவோ பணியாற்ற முரளிதரனுக்கு பூரண உரிமையுள்ளது. இலங்கை கிரிக்கட் சபை அவரிடம் இலங்கை அணிக்கு பயிற்சி அளிக்குமாறு வேண்டியிருந்தால் நிச்சயம் அந்தக் கோரிக்கைக்கு செவிசாய்த்திருப்பார் எனவும் தெரிவித்தார்.

முரளிதரன் இலங்கைக்காக மைதானத்திலும் மைதானத்திற்கு வெளியிலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்திருக்கிறார். இன்னும் தனது தாய்நாட்டிற்காக பணியாற்ற தயாராகவே இருக்கிறார். அந்தவகையில் அவரை நினைத்து நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும் என்றும் சங்கா மேலும் தெரிவித்தார்.

## பெடரர் ஓய்வு பெறுகிறார்



17 தடவைகள் கிரான்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ள சுவிட்ஸர்லாந்தின் முன்னணி டெனிஸ் வீரரான ரொஜர் பெடரர் முழங்காலில் ஏற்பட்டுள்ள உபாதையின் காரணமாக அடுத்த ஆண்டு வரை டெனிஸ் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இதனால் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் அவரால் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. றியோவில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் சுவிட்ஸர்லாந்து அணி சார்பாக தன்னால் பங்கேற்க முடியாமல் போனமை மிகவும் ஏமாற்றமளிப்பதாக தமது முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பெடரர் சிறிது காலம் ஓய்வில் இருந்து சிகிச்சை பெற்றால் மாத்திரமே எதிர்வரும் காலங்களில் சிறப்பாக விளையாட முடியும் என வைத்தியர்கள் அறிவுறுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இடம்பெற்ற விம்பிள்டன் தொடரில் அரையிறுதி வரை முன்னேறிய ரொஜர் பெடரர் மிலோன் ரொனிக்கிடம் தோல்வி அடைந்திருந்தார். தற்போது டெனிஸ் தரவரிசையில் பெடரர் 3ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்கிஸ்தானுக்கு சிறந்த அனுபவமாக இருக்கும் - இன்ஸமாம்



லோட்ஸ் மைதானத்தில் கிடைத்த வெற்றியை மான்செஸ்டர் டெஸ்டில் தக்க வைத்துக் கொள்ள முடியாமைக்கு துடுப்பாட்ட வீரர்களே காரணம் என பாக்கிஸ்தான் கிரிக்கட் தேர்வுக் குழுத் தலைவர் இன்ஸமாமுல் ஹக் குற்றம் சாட்டியுள்ளார். தற்போது பாக்கிஸ்தான் அணியிலுள்ள அதிகமான வீரர்கள் இங்கிலாந்து மண்ணில் விளையாடிய அனுபவம் அற்றவர்கள். எனவே இந்தத் தொடரின் மூலம் வீரர்கள் பல விடயங்களை கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முரளிக்கு மஹேலவும் ஆதரவு

இலங்கை கிரிக்கட் சபை முரளி தொடர்பாக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை கேள்வியுற்ற போது தான் மிகவுமே கவலையடைந்ததாக தெரிவித்துள்ள இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்த்தன தானும் சில நாட்களுக்கு முன் இதே பிரச்சினையை எதிர்கொண்டதாகவும் குறிப்பிட்டார். மக்கள் இந்த விடயங்களையும் நிலைமைகளையும் நன்கு புரிந்து வைத்துள்ளனர் என்பதை மாத்திரம் தன்னால் உறுதியாகக் கூற முடியும் எனவும் முரளிதரன் தாய்நாட்டிற்காக பல்வேறு சாதனைகளைப் படைத்த ஒரு ஜாம்பவான் எனவும் மஹேல புகழ்ந்துள்ளார்.





கம்பளை மஸார் நிறுவனம் OMSED நிறுவனத்துடன் இணைந்து ஸஹ்ரவாத் மாணவிகளுக்கான விஷேட ரமழான் கால நிகழ்ச்சிகளை நடத்தியது. பெண் வளவாளர்களை கொண்டு இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் சுமார் அறுபது மாணவிகள் கலந்து பயன்பெற்றனர். இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 19 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கம்பளை அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜனாப் எம்.எச்.எம். நுஃமான் கலந்துகொண்டார்.





கல் எளிய இஸ்லாமிய கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் 7ஆவது முறையாகவும் வதுபிடிவல வைத்தியசாலையுடன் இணைந்து நடாத்திய இரத்ததான முகாம் கடந்த 24.07.2016 அன்று அலிகார் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.